4:38244

# தமிழ்க்கலிக் கட்டுரைகள்

1940

U-16x
N40
112189

1152

# தமிழ்க்கலைக் கட்டுரைகள்.

5 MAR 1941
MADRAS

தொகுப்பாசிரியர்:

வித்துவான் - அ. மு. பரமசிவானந்தம்.

# தமிழ்க்கலைக் கட்டுரைகள்

தொகுப்பாசிரியர் :

**வித்துவான் - அ. மு. பரமசிவானந்தம்.**

ஆசிரியன் 'தமிழ்க்கலை' காஞ்சி.

உரிமைப் பதிவு

தமிழ்க்கலை அச்சகம்,
காஞ்சி.

விலை ரூபாய் 1

43824

M. I. P. PROJECT
Microfilmed.

112189

# முன்னுரை

தெய்வச் செந்தமிழ் மொழியை வளர்க்கும் வழிகள் பல. அறிஞர் பலர் ஆராய்ச்சி வழியிலும், நயம் காணும் நலத்திலும் தமிழ்ச் சுவையைக் கண்டு அதை மற்றவருக்கும் அள்ளியூட்டுகின்றனர். அவர்கள் கண்ட ஆராய்ச்சியின் முடிபுகள் நல்லெழுத்துக்களால் தீட்டப்படுகின்றன. அத்தகைய ஆராய்ச்சியிற் கண்ட அரிய கட்டுரைகள் கொண்ட 'தமிழ்க்கலை ஆண்டுமடல்' இம்மாத முதலில் வெளிவந்ததைத் தமிழுலகம் அறியும். அவ்வாறு ஆண்டுமடலில் வந்த கட்டுரைகளில் கல்லூரி மாணவர்கட்கும், பிறருக்கும் பயன்படு வகையில் சிலவற்றைத் தொகுத்து இத் 'தமிழ்க்கலைக் கட்டுரைகள்' என்ற சிறுநூல் வெளிவருகின்றது. இந்நூலில் ஆண்டுமடல் கட்டுரைகளோடு, கா. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் எழுதி முன் தமிழ்க்கலையில் வெளியாகிய 'பண்டைத் தமிழ்நாடு' என்ற கட்டுரையும் சேர்க்கப்பட்டுள்ளது. இத் தமிழ்க்கலை கட்டுரையில் தம் தம் கட்டுரைகளை வெளியிட உதவிய அறிஞர்கட்கு அடியனின் நன்றி பலப் பல. தமிழுலகம் இச் சிறுநூலை யேற்று ஆதரிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்,
அன்பும் பணிவுமுள்ள,
**அ. மு. பரமசிவானந்தம்.**

காஞ்சிபுரம்,
15—10—40.

# பொருள் அடக்கம்


| பொருள் | பெயர் | பக்கம் |
|---|---|---|
| மதிற்கச்சி மாண்பு | பதிப்பாசிரியர் | 1 |
| இன்ப வாழ்க்கை | ந. சிவகுருநாதப் பிள்ளை | 10 |
| திருவாதிரை | T. S. கந்தசாமி முதலியார், B. A. | 15 |
| சேக்கிழார் பாத்திரம் | அ. சிதம்பரநாதஞ் செட்டியார் M. A. | 22 |
| செங்கண்மா | வித்துவான். ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை | 29 |
| அன்றும் இன்றும் | V. ஞானதிக்கம், B. A., L. T., | 45 |
| நின்னினும் நல்லன் | P. ஆலாலசுந்தரஞ் செட்டியார், M. A. | 51 |
| மனித வாழ்வின் தேவை | P. G. நாதமுனி | 54 |
| நெல்லைமாநகரம் | ரா. பி. சேதுப்பிள்ளை, B. A., B. L., | 59 |
| பண்டைத் தமிழ்நாடு | கா. சுப்பிரமணியப் பிள்ளை, M. A., M. L., | 66 |
| புத்தேரிப்புலவரும் புதுத்தமிழும் | M. S. ராமாநுஜம், M.A. | 70 |
| தாய்நாடு | வித்துவான். பா. சொக்கலிங்கம் | 84 |
| காசி விஸ்வநாதர் கோவில் | மு. தா. ராஜு செட்டியார், B. A., L. T., | 88 |
| நகைபடு தீஞ்சொல் | வித்துவான். ர. சிவராமசேதுப் பிள்ளை | 92 |

# மதிற் கச்சி மாண்பு

'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றி மூத்த குடி' எனப் புறப்பொருள் வெண்பாமாலை சிறப்பித்துக் கூறியபடி மிகப் பழம் பெருங்குடிகள் நம் நாட்டில் வாழ்ந்து வந்துள்ளனர். அறிவு நிறைந்த அப் பழங் குடிமக்கள் வாழ்விலும், நாகரீகத்திலும் தலை சிறந்தவர்களாய் விளங்கிய காலத்து தம் நாட்டைத் தாமே ஆண்டார்கள். அவ்வாறு ஆண்டவர்கள் தலை சிறந்த நகரங்களை ஆக்கிக்கொண்டனர். முடியுடை வேந்தர் மூவர்களாகிய சேர, சோழ, பாண்டியர்கள் தமிழ் நாட்டை முப்பிரிவாகப் பிரித்து ஆண்டனர். அவரவர்கட்கு தனித் தனி தலைநகரங்களும், குடை, இலச்சினை, மாலை முதலியனவும் அமைந்திருந்தன. பாண்டியர் தமிழகத்தின் தென் கோடியையும், சேரர் மேற் பக்கத்தையும், சோழர் பிற இடங்களையும் தமதாக்கி ஆண்டுவந்தனர். சோழர்கள் தலைநகரங்கள் ஒரு சில சிறந்தனவாக விளங்கின. பல நாட்டு மக்களும் பண்டம் பகர்ந்து வந்த வளஞ்சால் காவிரிப்பூம்பட்டினம் கடல் கொள்ளப்பட்ட பிறகு சோழர் உள்நாட்டு நகரங்களைத் தலைநகர்களாக்கிக்கொண்டு வாழ்ந்துவந்தனர். அவற்றுள் ஒன்றாக விளங்கியது காஞ்சிப் பதியாகும்.

காஞ்சியானது உண்டான விதத்திற்குப் பல காரணங்கள் கூறப்பட்டுள்ளன. காதளவிலே கதைகளாகக் காண்பன சில. சோழ மன்னன், நாககன்னிகைமூலம் பெற்ற இளந்திரையன் என்னும் இளவல் கடலில் மூழ்கினான் என்பதைக் கேட்ட பின், மனமுடைந்து தான் செய்துவந்த இந்திர விழாவை மறந்தமையின், காவிரிப்பூம்பட்டினம் கடலால் கொள்ளப்பட்டது என்றும், கடலில் வீழ்ந்த இளந்திரையன் கரை சேர்ந்து, காஞ்சி கண்டு, இதைத் தலைநகராக்கி அரசியல் நடத்தினான் என்றும் கூறப்படுகின்றது. காஞ்சி மரங்கள் நிறைந்த காடாக இருந்தமையின், இதற்குக் காஞ்சி என்னும் பெயர் உண்டாயிற்று என்று அறிகிறோம். இளந்திரைய

னுக்குத் தொண்டைமான் என்ற பெயர் இருந்ததென்றும், அவன் ஆண்டதால் இந்நாடு தொண்டைநாடு என்று அழைக்கப்பட்டதென்றும் ஒரு வழக்காறு உண்டு.

இக்காஞ்சி என்னும் பெயர் வழக்கினை நோக்குவோம். இன்று இது காஞ்சிபுரம் என்று அழைக்கப்படுகின்றது. இது பழைய காலத்தே காஞ்சி யென்றும் கச்சி என்றும் அழைக்கப்பட்டதாக இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. பிற நாட்டு மக்கள் தமிழகத்தில் குடியேறி தத்தமது நாகரிகம் முதலியவற்றைப் புகுத்திய காலத்து ஊர்ப் பெயர்களையும் உருமாறச் செய்தனர். வடமொழி மிகுதியாகக் கலந்த காலத்து, ஊர்ப் பெயர்களை வடமொழிப் பெயர்களாக மாற்றினர். 'மயிலாடுதுறை' என்னும் அழகிய ஊரை மாயூரகிரி என ஆக்கிப் பிறகு மாயவரமென வழங்கியதுபோலும், திருமறைக்காடு என்பதை வேதாரணியம்என வழங்கியதுபோலும், காஞ்சியையும் வடமொழிப் பெயராக்க முயன்றனர். ஆனால் அதற்கென வடமொழிப் பெயர் காணா வகையினராய், காஞ்சி என்ற தமிழ்ப்பெயரோடு, 'புரம்' என்ற வடமொழிப் பெயரைச் சேர்த்து வழங்கினர். அதன் பிறகு இது காஞ்சிபுரம் என வழங்கலாயிற்று. தென் இந்திய இருப்புப் பாதையார் இதைக் 'காஞ்சீவரம்' என ஆக்கினர். இம் மாறுபாடு எல்லாம் நீங்கித் தமிழ்ப் பெயர் தழைத்தோங்குவதாக.

நிற்க, இக்காஞ்சி நகரம் பழம்பெருஞ் சிறப்பு வாய்ந்தது. இக்காஞ்சி அமைப்பைப்பற்றியும், அழகைப்பற்றியும் பல தனிப் பாடல்கள் உள்ளன. தவிர, பெரும்பாணாற்றுப்படையிலே தொண்டைமான் இளந்திரையனைப் பாடிய உருத்திரங் கண்ணனார் அவனைப் புகழ்வதன்மூலம் அவன் தலைநகரம் காஞ்சியின் சிறப்பை நன்கு விளக்கிக் காட்டியுள்ளனர். மற்றும் மணிமேகலை என்னும் அறப்பெருஞ்செல்வி காஞ்சி புகுந்த ஞான்று, அவள் கண்ட காஞ்சிக் காட்சியை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார் அப்படியே படம் பிடிப்பதுபோல் காட்டுகின்றார். இவைகளையெல்லாம் உற்று நோக்குவார், உள்ளம் மகிழ்வர் என்பது உறுதி.



காஞ்சிக்கும் கடலுக்கும் உவமை கூற வந்த ஒரு பெரியார், "இரண்டும் ஒன்றை ஒன்று ஒத்திருப்பனவேயாயினும் ஒன்றில் மாறுபடுகின்றன; கடலில் விளைவதெல்லாம் காஞ்சியில் உள; ஆனால், காஞ்சிப் பொருள்களெல்லாம் கடலில் காண முடியாது" எனக் கடலின் மென்மை நிலையில் காஞ்சியைச் சிறப்பிக்கின்றார்.

'மலிதேரான் கச்சியும் மாகடலும் தம்முள்
ஒலியும் பெருமையான் ஒக்கும்—மலிதேரான்
கச்சி படுவ கடல்படா கச்சி
கடல்படுவ எல்லாம் படும்' என்பது அது.

மற்றொரு அறிஞர் காஞ்சி இடத்தைச் சருக்கரையென அறிவிக்கின்றார்.

'வையகமெல்லாம் கழனியா—வையகத்தின்
செய்யகமே நாற்றிசையின் தேயங்கள்—செய்யகத்தின்
வான்கரும்பே தொண்டை வளநாடு—வான்கரும்பின்
சாறே அந்நாட்டுத் தலையூர்கள்—சாறுஅட்ட
கட்டியே கச்சிப்புர மெல்லாம்—கட்டியுள்
தானேற்ற மான சருக்கரை மாமணியே
ஆனேற்றன் கச்சி அகம்'

என்ற செய்யுள் எண்ணுவார் இதயத்துக்கு இன்பம் விளைப்பதொன்றாகும்.

இவ்வாறு தனிப் பாடல்களால் புகழப்பட்ட தகைசால் காஞ்சியானது பத்துப்பாட்டு ஒன்றினால் பெரிதும் பேசப்படுகின்றது. பெரும்பாணாற்றுப்படையில் ஆசிரியர், தொண்டைமான் இளந்திரையனைப் பாடவந்ததோடு, அவன் அரசாண்ட தலைநகராம் இக்காஞ்சியையும் போற்றிப் புகழ்ந்தனர். அவற்றுள் சில அடிகளைக் கீழே தருகின்றோம்.

'நீனிற உருவின் நெடியோன் கொப்பூழ்
நான்முக ஒருவற் பயந்த பல்லிதழ்த்
தாமரைப் பொகுட்டிற் காண்வரத் தோன்றிச்
சுடுமண் ஓங்கிய நெடுநகர் வரைப்பின்

இழுமென் புள்ளின் ஈண்டுகிளைத் தொழுதிக்
கொழுமென் சினைஇய கோளி யுள்ளும்
பழமீக் கூறும் பலாஅப் போலப்
புலவுக் கடலுடுத்த வானஞ் சூடிய
மலர்தலை உலகத் துள்ளும் பலர்தொழ
விழவுமேம் பட்ட பழவிறன் மூதூர்—
நச்சிச் சென்றோர்க்கு ஏமம் ஆகிய
கச்சி யோனே' ... ...

என்று கச்சி நகரின் மாட்சியை நன்கு விளக்கிக் காட்டினார்.

இதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதிய உரை சாலச் சிறந்ததாகும். அது ஆசிரியர் கருத்தை நன்கு காட்டுவதாகும். "நீல வண்ணமான வடிவினையுடைய திருமாலின் கொப்பூழிடத்து மலர்ந்துள்ள, நான்கு முகங்களையுடைய பிரமனைப் பெற்ற, பல இதழ்களோடு கூடிய தாமரை மலரின் நடுவே உள்ள பொகுட்டினைப்போல (முகை)எல்லோரும் காணும்படி விளங்கிய, செங்கல்லினாலே கட்டப்பட்ட மதிலையுடைய நீண்ட நகர் எல்லையில்; இழுமென்னும் ஓசையையுடைய புறாவின் சுற்றமாகிய கூட்டம் கொழுவிய மெல்லிய கிளையிலே தங்கியிருக்கின்ற தன்மையுடைய பூவாது காய்க்கும் மரங்களினுள்ளே தலைசிறந்த பலவகைப்பட்ட பழங்களைவிட மேலாகக் கூறும் பலாப்பழத்தையுடைய மரம்போல, புலால் நாற்றத்தையுடைய கடலை ஆடையாக உடுத்த ஆகாயமாய முடி யணிந்த பரந்த இடத்தையுடைய உலகத்துள்ளே பலரும் கைதொழும்படியான திருவிழாக்கள் மலிந்த, தொன்று தொட்டு பெருமைவாய்ந்த பழமையான ஊராகிய, விரும்பிச் சென்றவர்களுக்குப் பாதுகாவலாக விளங்கும் கச்சி" என்பது அவ்வுரையாகும். இதில் காட்டும் உவமை நயம் கற்றறிந்தோர்க்கு கவின்பெறு நலம் பயப்பதாகும்.

நிற்க, ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய மணிமேகலையில் இக் காஞ்சி நலம் பலவாக எடுத்து விளக்கப்பட்டுள்ளது. மதில்சூழ் வளனும், காவலர் காவலும், கடைத் தெருவின் கவினும், பல்வேறு தொழிலாளர் பயிலும் இடத் தன்மையும், இசைவாணர் முதலிய அறிஞர் அறிந்துறையும் இருக்கையின் இனிமையும், நவமணி விற்



கும் நலமும், இளமரம் நிறைந்த சோலையின் இனிமையும், நீர்த் துறை நேர்மையும், பொது மண்டபங்களின் பொலிவும், அறிஞர் கலக்கும் ஆலய அழகும், சாலைச் சிறப்பும் அழகுற சாத்தனாரால் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

"கடிமதிளோங்கிய இடைநிலை வரைப்பிற்
பசுமிளை நிறைந்து பஃறெருழி னிறைந்த
வெள்ளிக் குன்ற முள்கிழிந் தென்ன
நெடுநிலை தோறு நிலாச்சுதை மலருங்
கொடிமிடை வாயில் குறுகினன் புக்குக்
கடைகாப் பமைந்த காவலாளர்
மிடைகொண் டியங்கும் வியன்மலி மறுகும்
பன்மீன் விலைஞர் வெள்ளுப்புப் பகருநர்
கண்ணொடை யாட்டியர் காழியர் கூவியர்
புன்னிண விலைஞர் பாசவர் வாசவர்
என்னுநர் மறுகு மிருங்கோ வேட்களுஞ்
செம்பு செய்ஞ்ஞருங் கஞ்சக்காரரும்
பைம்பொன் செய்ஞ்ஞரும் பொன்செய் கொல்லரும்
மரங்கொல் தச்சரு மண்ணீட் டாளரும்
வரந்தர வெழுது மோவிய மாக்களுந்
தோலின் றுழிலருந் துன்னு வினைஞரு
மாலை காரருங் காலக் கணிதரு
நலந்தரு பண்ணுந் திறனும் வாய்ப்ப
நிலங் கலங்கண்ட நிகழக் காட்டும்
பாண ரென்றிவர் பல்வகை மறுகும்
விலங்காம் பொரூஉம் வெள்வளை நேரோ
டிலங்குமணி விலைஞ ரிரீஇய மறுகு
மாகதர் சூதர் வேதாளிகர் மறுகும்
போகம் புரக்குமவர் போலி மறுகும்
கண்ணுழை கல்லா நுண்ணூர் கைவினை
வண்ண வறுவையர் வளந்திகழ் மறுகும்
பொன்னுரை காண்போர் நன்மனை மறுகும்
பன்மணி பகர்வோர் மன்னிய மறுகு
மறையோர் மாத்தொழில் குறையா மறுகு
மரசியன் மறுகு மமைச்சியன் மறுகும்

எனைப்பெருந் தொழில்செய் யேனோர் மறுகு
மன்றமுங் கவலையுஞ் சந்தியுஞ் சதுக்கமும்
புதுக்கோள் யானையும் பொற்றார்ப் புரவியுங்
கதிக்குறை வடிப்போர் கவின்கொள் வீதியுஞ்
சேணோங் கருவி தாழ்ந்தசெய் குன்றமும்
வேணவா மிகுக்கும் விரைமரக் காவும்
விண்ணவர் தங்கள் விசும்பிடை மறைந்து
நண்ணுதற் கொத்த நன்னீ ரிடங்களும்
சாலையுங் கூடமுந் தமனியப் பொதியிலுங்
கோலங் குயின்ற கொள்கை யிடங்களுங்
கண்டு மகிழ்வுற்று'' என்பன.

இவ்வாறாக சங்ககாலப் புலவர்களும் பிறரும் பலவாறு புகழ்ந்து போற்றப்பட்ட இக்காஞ்சியானது, சமயத் துறையிலும், பிறவற்றிலும் தலை சிறந்து விளங்கிற்று. ஒருகால் இங்கு ஆயிரக்கணக்கான பௌத்த மடங்களும், பதினாயிரக் கணக்கான பௌத்த துறவிகளும் இருந்தனர் என்று சீன யாத்திரிகரான யுவான்சுவாங் குறித்துச் சென்றார். இன்னும் அவர் கூறியவற்றிலிருந்து பலவாகக் காஞ்சிப் பண்புகளைக் காணலாம் யுவான்சுவாங் இந்தியா வந்த காலத்து வடக்கே ஆண்ட அரசன் ஹர்ஷவர்த்தனன். அக்காலத்து காஞ்சி பல்லவ அரசர்களால் ஆளப்பட்டது. காஞ்சிநகரம் பல்லவர்களது தலைநகராக விளங்கிற்று. அதுபோது சீன யாத்திரிகன் காஞ்சிக்கு வந்து இதன் சிறப்பை வியந்து போற்றியுள்ளான். அப்போது காஞ்சியில் ஆண்ட பல்லவன் முதலாம் நரசிம்மவர்மன் என்று 'வின் சென்ட்ஸ்மித்' என்னும் சரித ஆசிரியர் காட்டுகின்றார். காஞ்சி, ஆயிரக்கணக்கான மைல் சுற்றளவுள்ளதும், வடக்கே பெண்ணையாற்றையும் தெற்கே வெள்ளாற்றையும் எல்லையாகக் கொண்டதுமாகிய திராவிட நாட்டுத் தலைநகராக விளங்கியதென்றும், இது ஆறு மைல் சுற்றளவுடையதென்றும், பௌத்த மதம் ஈண்டு கால் கொண்டிருந்ததென்றும் அவர் நூலில் கூறப்படுகின்றது.*



இவ்வாறான பல்லவ ஆட்சிக்கு முன் இருந்த காஞ்சியினிலை கண்டு பிறகு இக்கால ஆராய்ச்சியை நோக்குவாம். தொண்டைமான் இளந்திரையனுக்கு முன் இருந்தவன் சோழன் கரிகாற் பெருவளத்தான். அவன் ஆற்றல் மிக்க சோழமன்னன். அதுகால் தொண்டை நாடு 'அருவாவடதலை' நாடு என்று அழைக்கப்பட்டுள்ளது. பல நாடுகளையும் வெற்றிகொண்டுவந்த கரிகாலன் காஞ்சிக்கு வந்தான். காஞ்சி நாட்டைக் கைக்கொண்டான். அக்காலத்தே காமக்கோட்டத்தே திருப்பணி செய்துகொண்டிருந்த சாத்தனார் என்பார் கரிகாலன் திறங் கண்டு செண்டு கொடுத்தார் என்றும், அச்செண்டு கொண்டு பிறகு இமயப் படையெடுப்பில் இமயத்தை எறிந்தான் என்றும் ஓர் வெண்பா சான்று பகர்கின்றது. அவன் செண்டு கொண்டு இமயத்தை எறிந்ததைக் கலிங்கத்துப் பரணியும் வலியுறுத்தும். சோழன் கரிகாற்பெருவளத்தான் காடு கொன்று நாடாக்கி மக்களைப் பல விடங்களிலும் குடியேற்றியவன். அவ்வாறே தொண்டை நாட்டையும் தூயதாக்கி இருபத்துநான்கு கோட்டங்களை உண்டாக்கி அவற்றில் வேளாளரைக் குடியேற்றினான். அவர்களே இன்று 'தொண்டை மண்டல வேளாளர்' என அழைக்கப்படுகின்றனர். அவர்களுக்குள் இன்றும் கோட்டப் பிரிவு பேசப்படுகின்றது.

நிற்க, வட நாட்டில் சிறந்த அரசர்கள் ஆண்டுவந்ததோடு இந்தியாவைத் தன்னடிக் கீழ்ப்படுத்த விழைந்தகாலத்து, அவர்கள்

*Hiuen Isang, who visited Kanchi in the year 640 A. D. during the reign of Narasimha Varman I, and stayed there for a considerable time, calls the country of which Kanchi was the capital by the name of Dravida, and describes it as being about a thousand miles in circuit. It corresponded, therefore, very closely with the traditional 'Chola country' between the Northern Pennar and the Southern Vellaru rivers. The soil was fertile and regularly cultivated, producing abudance of grain, flowers and fruits. The capital was a large city five or six miles in circumference. In the Kingdom the pilgrim found several hundreds of Buddhist monasteries, occupied by a large number of monks, estimated at ten thousand, all attached, like the majority of the Ceylonese, to the Sthavira School of the Mahayana. The Hindu temples numbered about four score, and, as in other parts of Southern India, the sect of nude, or Digambara, Jains had many adherents. In the Pandya country farther south Buddhism was almost extinct. Kanchi enjoyed special fame among the Buddhists as having been the birth place of Dharmapala, a celebrated metaphysician, who was the predecessor of Hiuen Isang's teacher Silabhadra in the headship of the great monastery at Nalanda.

ஆட்சி பெண்ணை யாற்றுக்கு அப்பாலேயே அமைந்தது. பின்னால் ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தே நடு இந்தியாவில் அரசாண்ட இரண்டாம்புலகேசி காஞ்சியின் மதிற் சிறப்பைக் கண்டு மலைத்தான். பல்லவனால் தோற்கடிக்கப்பட்டான்.

பல்லவர் காலத்திலேதான் காஞ்சி சரித்திரத்தில் புகழ்பெறலாயிற்று. சீன யாத்திரிகனும் இக்காலத்தில்தான் இங்கு வந்து சென்றான். சைவ சமயம் வளர்ச்சியுறச் சிறந்த காரணராயிருந்த திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூன்று சமயாசாரியர்கள் வாழ்ந்த காலமும் இதுவாகும். அவர்கள் வந்து காஞ்சி அழகு கண்டு ஆண்டவன் அருட்புகழையும், நகரின் நலத்தையும் நாவாரப் பாடியுள்ளனர். 'நலம் ஆர் கச்சி' 'கருமுகில் தவழும் மாடக்கச்சி' 'பொழிலார் கச்சி' 'நீள் மருகில் கலிக்கச்சி, 'கல்வியைக் கரையிலாத காஞ்சி' என்பன அவர்கள் காஞ்சியைச் சிறப்பித்துக் கூறும்அடிகளில் சிலவாகும். ஆழ்வார்களும் அக்காலத்திலேயே அரிய பாடல்களைப் பாடியுள்ளனர். தமிழிடம் அடங்கா அன்புகொண்டு தமிழ்க்கெனவே உயிரை விட்ட 'நந்திப்போத்தரையன்' ஒன்பதாம் நூற்றாண்டின் இடையில் ஆண்டபல்லவன் என்று சொல்லப்படுகின்றான். 'நந்திக் கலம்பகத்தால் மாண்டகதை நாடறியும்' என்பதால் நாம் அவைகளைப்பற்றி யெல்லாம் ஈண்டு விளக்கவேண்டுவதில்லை.

பல்லவர்களே கற்கோயில் கட்ட ஆரம்பித்தனர் என்பது சரித உண்மை. மகேந்திரவர்மன் முதன்முதல் மலைகளைக் குடைந்தே அவைகளில் கோயில்களை அமைத்தான் என்றும், அதற்குப் பின் வந்தவர்கள் கற்களை அடுக்கிக் கோயில்களைக் கட்டினர் என்றும் கூறுகின்றனர். திருச்சிராப்பள்ளி மலைக்கோயிலில் பல்லவர் வெட்டிய கல்வெட்டு ஒன்றும், உருவங்களும் காணக்கிடைக்கின்றன. பல நாட்டவரும் வியந்து போற்றும் மகாபலிபுரம் 'மாமல்லன்' என்னும் நரசிங்கப் பல்லவ அரசனால் கட்டப்பட்டது. அவர்கள் காலத்திய பல கல்வெட்டுகளும், செப்புப் பட்டயங்களும் காணப்படுகின்றன. கூரம் என்னும் ஊரில் உள்ள பெருமாள் கோயிலில் காணும் ஓர் சாசனம் பலவற்றை நமக்கு எடுத்து விளக்குகின்றது. இவ்வாறு வளம்பெற்று வாழ்ந்த பல்லவர்கள் 10-ம் நூற்றாண்டுவரையில்



அரசாண்டனர். அவர்கள் அரசாண்ட காலத்து காஞ்சி நகரும், தொண்டைநாடும் எல்லாவகையிலும் ஏற்றமுற்று விளங்கியதென்பதை அறியாதார் யார்?

மற்றும் பல்லவ ராட்சி பல்வேறு வகையாக அடக்கப்பட்ட பிறகு சோழர்கள் சிறிது கிளம்பினர். வடக்கே சளுக்கியரும் தலைகாட்டினர். இராஜராஜ சோழன் முதலியோர் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு வாழ்ந்தகாலத்து அவர்கள் காஞ்சிக்குத் தனிப்பெருமை தந்து போற்றினர். காஞ்சியின் பக்கத்தே பல தானங்கள் செய்துள்ளனர். அவர்களது கல்வெட்டுகள் பல காஞ்சியிலும், சுற்றுப்புறங்களிலும் அகப்படுகின்றன. பிற் சோழர் காலத்தே சிறப்புற்ற காஞ்சியும், தொண்டைநாடும் சில காலம் கழித்து வேறு சிலர் கைப்பட்டது. அவர்களும் இதைத் தக்க காப்போடு பெருமைப்படுத்தி வந்தனர்.

மேலை நாட்டு மக்கள் நம் நாட்டு வாணிபத்துறையில் வந்து சேர்ந்தகாலத்துக்குப் பின்பே சென்னைநகரம் ஆக்கப்பட்டது. அப்போதும் காஞ்சி தன் பண்டைப் பெருமை கொண்டு விளங்கிற்று. பின்னர் மகமதிய மன்னருக்கும், ஆங்கிலேயருக்கும் நடைபெற்ற யுத்தங்களிற் சில காஞ்சியைச் சார்ந்த சிற்றூர்களில் நடைபெற்றுள்ளன. இன்றும் இக்காஞ்சி தன் வனப்பு கெடாததாய், பண்டைப் பெருமையோடு, அறப்பெருஞ்செல்வியாம் உமைதங்கும் காமகோட்டத்தை இடை கொண்டதாய், பல சைவ வைணவக் கோயில்களைக் கொண்டதாய் சிறப்புற்று விளங்குகின்றது. ஆங்கில அரசியல் அமைப்பின்கீழ் இது நகராண் கழகத்தாரால் இன்று பாதுகாக்கப்படுகின்றது. பல்வேறு கைத்தொழில்கள் பண்டைக் காலத்தே சிறப்புற்று நின்றதுபோன்று, இன்றும் நெசவு வேலைக்குக் காஞ்சி பேர்பெற்று விளங்குகின்றது. இதன் நலம் என்றும் புவியில் பொங்குக என்று வாழ்த்துதும். வாழ்க என்றும் வளம்சால் காஞ்சி. தமிழ்சேர் காஞ்சி தழைத்தினி தோங்குக.

---

# இன்ப வாழ்க்கை

(சைவசித்தாந்தப் பேராசிரியர். ந. சிவகுருநாத பிள்ளை, தூத்துக்குடி)

ஓரறிவுடைய தாவர முதல் ஆறறிவுடைய மனிதன் ஈறாக எல்லா உயிர்களும் இன்பந் தரும் பொருளை அடைவதில் அவாவுடையனவாகக் காண்கின்றோம். அவற்றினுள்ளும் மனிதனே அதன்கண் மிக நாட்டமுடையனாயிருத்தலையும் அறிகின்றோம். துன்பத்தினின்றும் நீங்கி இன்பத்தை அடைய விரும்புதல் ஏற்றதொன்றேயாம். ஆயினும், இன்பம் தரும் பொருள் எதுவெனவும், துன்பந் தரும் பொருள் எதுவெனவும் அறிந்துகொள்ளும் ஆற்றல் எல்லா உயிர்களிடத்தும் வாய்க்கக் காண்கின்றிலேம். தக்கதின்ன தகாதென இன்னவெனப் பகுத்துணரும் ஆராய்ச்சியாளரே அவ்விரண்டினையும் பகுத்துணர்தல்கூடும்.

இனி, இன்பம், துன்பம் எனப்படும் இரண்டும் போகம் எனவே கொள்ளப்படும். இவ்விரண்டையும் துய்க்கும் உரிமை அறிவுடைய உயிருக்கே உண்டு.

இனி, உயிர் துய்த்தற்குரிய இன்பம் யாதென ஆராய்வாம். உயிர் அறிவுடைப் பொருளாதலின் தன் சாதியாகிய அறிவுடைப் பொருளினின்றும் வரும் இன்பமே அதற்கு உரியதாகும். உயிர் நிலைபேறுடையது (நித்தியம்) ஆதலின் அதற்கு நிலைபேறுடைய இன்பமே சாலுவதாகும். உயிர் நிறைவுடைப் (வியாபகம்) பொருளாதலின் அதற்கு நிறைவுடைய இன்பமே பொருந்துவதாகும். உயிர் தன்னியற்கையில் தூய்மையுடையதாதலின் அதற்குத் தூய்மையுடைய இன்பமே ஏற்புடைத்தாகும். இத்தகைய உணர்ச்சி, இன்பம் பெற முயலும் எல்லோரிடத்திலும் நன்கு இருத்தல் வேண்டும்.

இனி, இவ்வுலகமும், உலகத்திலுள்ள பொருள்களும், நமக்கு வாய்த்திருக்கும் உடம்பும், உடம்பிலுள்ள கருவிகளும் ஆகிய இவையெல்லாம் அறிவில்லாத பொருள்கள். அறிவுடைய உயிராகிய நமக்கு அவைகள் வேற்றுச்சாதிப் பொருள்கள். இதைப்பற்றி ஆராயும் இவ்வமயத்தில் நாம் நம்மையும் உடலையும் பிரித்தறியாமல் ஒன்றாக எண்ணி ஏமாந்துவிடக்கூடாது. நம்மை அறிவுடைய உயிர் என்றும், உடலும் அதன் உட்கருவி, புறக்கருவிகளுமாகிய எல்லாம் மாயையென்று சொல்லப்படும் அறிவில்லாத பொருளின் காரியங்களென்றும் நன்றாகப் பகுத்துணர்ந்து நினைவில் பதியவைத்துக் கொள்ளுதல் வேண்டும். இங்ஙனம் செய்துகொள்ளின், உயிரின் குணங்களை நம்முடைய குணங்களென்றும், உடல் பொறி முதலியவற்றின் குணங்களெல்லாம் நம்முடைய குணங்களல்லவென்றும் தெற்றென உணரப்படும்.

இனி, இந்த உடல் மாயையினின்றும் உண்டான ஐம்பெரும் பூதங்களின் காரியம். ஐம்பெரும் பூதங்கள் அறிவில் பொருள்களாயிருத்தலின் அவற்றின் காரியமான உடலும் அறிவில் பொருளே. உடல் அறிவில் பொருள் என்பது சவமானபோதும், உறக்கத்தும், மூர்ச்சித்தபோதும் கண்கூடாக அறியப்படுகின்றது. உடலின் கண்ணுள்ள மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து புறக்கருவிகளும், மனம், சித்தம், அகங்காரம், புத்தி என்னும் நான்கு அகக்கருவிகளுமாகிய இவற்றோடு கூடி வெளியிலுள்ள ஐம்பெரும் பூதங்களையும் அவற்றின் காரியங்களையும் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறிந்து அவற்றின் அநுபவத்தையே இன்பம் எனக் கொண்டு மேலும் மேலும் அவற்றையே அவாய் நிற்கின்றோம். இனி அப்பொருள்கள் அறிவில்லாதனமட்டுமில்லாமல், அழிதன்மாலையவாயும், கண்டப் பொருள்களாயும், தூய்மை இல்லனவாயுமிருத்தலின் நாம் கருதுகிறபடி நமக்கு வேண்டிய இன்பம் அவற்றின் கண்ணின்றும் எய்துவதில்லை. எய்தும் என நம்பவும்கூடாது. அன்றியும் அவ்வின்பமும் நாம் கருதுகிறபடி கைகூடுவதில்லை. "பேறிழ வின்பமோடுபிணிமூப்புச் சாக்காடென்னும், ஆறுமுன் கருவுட்பட்டது" என்றபடி முன்வினையின் பயனாகவே அவ்வின்பம் வந்து கூடுகின்றது. "வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி தொகுத்

தார்க்கும் துய்த்தலரிது" என்னும் தெய்வப்புலவர் திருவாக்கும் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

இதுகாறும் கூறியவாற்றால் அறிவுடைய உயிராகிய நாம் நமக்கு வேற்றுச் சாதியும் அறிவில்லாததுமான மாயா காரியங்களாகிய ஐம்பெரும் பூதங்களின் குணங்களான சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்தினையும் துய்த்தலே இன்பம் கொள்ளுகின்றோம் என்பதூஉம், அவ்வின்பத்தையும் நாம் கருதுகிறபடி துய்ப்பதற்கு இயலாமல் முன்வினையின் அளவுக்குத்தக்கதாகவே துய்க்கின்றோம் என்பதூஉம் ஒருவாறு விளக்கப்பட்டது.

இனி, நாம் அடைதற்குரிய இன்பம்தான் யாது என்பதை ஒருவாறு ஆராய்வோமாக. நமது உயிர் அறிவுடைப் பொருளாகவும், நிறைவுடைப் பொருளாகவும், நிலையுடைப் பொருளாகவும், தூய்மையுடைப் பொருளாகவுமிருத்தலின் அந்நிலைகட்கேற்பதொரு இன்பமே நமக்கு உரியதாகும். இத்தகைய இன்பம் உலகின்கண்ணுள்ள எப்பொருள்களிடத்தும் காணப் பெறாமையால் இனியாண்டுப் பெறலாம் என ஒருங்கு ஆராயின் கடவுள் என்னும் ஒப்பற்ற பரம்பொருளினிடத்திலேயே பெறலாம் என்பது தேற்றமாம்.

கடவுளையொத்த பொருள் வேறு ஒன்றுமில்லை. நாமும் அறிவுடைப் பொருள். கடவுளும் அறிவுடைப் பொருள். நாமும் (உயிரும்) நிலையுடைப் பொருள், கடவுளும் நிலையுடைப் பொருள். நாமும் நிறைவுடைப் பொருள், கடவுளும் நிறைவுடைப் பொருள். நாம் இன்பத்தில் அவாவுடையோம். கடவுள் பேரின்ப வடிவினராய் பேரின்பத்தை அளிக்கும் பொருளாயிருக்கின்றார். நாமும் கடவுளும் அறிவுடைப் பொருட்டன்மையால் ஒரு சாதியாக இருக்கின்றோம். நாம் கடவுளுடைய நிறைவில் கலந்திருக்கின்றோம். கடவுள் நம்மோடு ஒன்றாய் (அபேதமாய்) வேறாய் (பேதமாய்) உடனாய் (பேதாபேதமாய்) இரண்டற்ற தன்மையில் (அத்துவிதமாய்க்) கலந்திருக்கின்றார். வேற்றுச் சாதியாகிய உலகப் பொருள்கட்கும் நமக்கும் உள்ள வேறுபட்ட தன்மையினை



யும் அறிவுடைப் பொருளாகிய நமக்கும் கடவுளுக்குமுள்ள ஒன்றுபட்ட தன்மையினையும் நாம் நன்கு ஆராயின்,

"மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும்"

என்னும் திருக்குறளின்படி நாம் இறைவனையே சார்ந்து ஒழுகுதல் வேண்டும் என்பது நன்கு புலனாகும்.

"சார்புணர்ந்து சார்புகெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்"

என்னும் திருக்குறள் அங்ஙனம் இறைவனை நாம் சார்தலினால் எல்லாத் துன்பங்கட்கும் மூலமான நமது பிறவித் துன்பம் நீங்கும் என்பதனை விளக்குதல் காண்க.

இவ்வுண்மைபுணர்ந்து நாம் கடவுளோடு ஒன்றுபடுவோமாயின்,

"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு"

என்ற திருவாக்கின்படி சார்ந்ததன் வண்ணமாம் பெற்றியுடைய உயிர், கடவுளின் வரம்பிலின்ப முதலிய எண் குண விளக்கங்களைப் பெற்று பேரானந்தப் பெருவாழ்வில் திகழ்ந்திருக்கும் என்பது துணியப்படும்.

இவ் வுண்மையைக் கடைப்பிடித்து உலகப் பொருள்கள் நமக்கு இன்பம் பயப்பனவாகா எனத் தெரிந்து இறைவன் திருவடியைத் துணைப்பற்றி அவன் அருள்வழி ஒழுகி பேராவியற்கைத்தாகிய பேரின்ப வாழ்வை யடைவோமாக. அவ்வழிநின்ற பெரியோர் திருவாக்கையும் சிந்திப்போமாக.

"நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை

தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரனற் சங்கவெண் குழையோர்காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளாவாளாய்க்
கொய்மலர்ச்சே வடியிணையே குறுகினோமே.

—அப்பர்.

"தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா யார்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்ட வெம்பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா வுடலிடங் கொண்டாய்
யானிதற் கிலனோர் கைம்மாறே."

—திருவாசகம்.

---

# திருவாதிரை

[T. S. கந்தசாமி முதலியார் B. A., வழக்கறிஞர், சாத்தூர்.]

(உரிமை யாசிரியர்க்கே யுரியது)

நிலமிசை வாழும் மக்கள் வானத்தை யென்றும் ஆராவிருப்புடன் நோக்கி ஓவா வியப்பெய்துகின்றனர். வானமிந் நிலவுலகிற்குப் பேரழகு செய்கின்றது. மதிபூவா இரவில் வானம் முல்லை பூத்த கானம்போல் விளங்கும். மதிபூத்த இரவிலோ அதுமலர்பூத்த பாற்கடல் போற்றிகழும். வானத்தில் மின்னும் மீன்கள் எண்ணிறந்தன. எனினும் அவற்றுள் நாண்மீன்களாக விளங்குவன மிகச் சிலவே. மதி சென்னெறியாகிய மதிசெல் மண்டிலத்தில் விளங்கும் மீன்கள் நாண்மீன்களாம். நாண்மீன்கள் தாமே இயல்பாக ஒளியுடையன. மதி மீனன்று: கோள். மதிதன்னியல்பில் ஒளியுடையதன்று. அது ஞாயிற்றொளியைப் பெற்று, அதை எதிரொளி செய்கின்றது. ஞாயிறு மீன்: தன்னொளியுடையது. மீன்கள் நிறத்தாலும், அளவாலும், பிறவற்றாலும் வெவ்வேறு தன்மையுடையன.

பண்டைத்தமிழர் வானநூற் புலமை பெற்றிருந்தனர். நிலம், ஞாலம், ஞாயிறு, மீன், கோள் முதலிய சொற்களே தமிழர் வானநூற்புலமையை மெய்ப்பிக்கும் தக்கசான்றுகள். உலகமக்களனைவரும் பூமியைப் புடைபெயர்ச்சியின்றி நிற்கும் இயல்புடையதெனக் கருதினர். தமிழரும் அவ்வுணர்வால் பூமிக்கு, நிலம் எனப் பெயரிட்டனர். நில் என்னும் பகுதி, அம்மென்னும் விதியொடு புணர்ந்து, நிலமென்றாகி, நிற்குந்தன்மையுடைய தென்று கருதப்பட்ட பூமியைக்குறித்தது. 'ஞாலம்'என்னும் சொல், ஞால் என்னும் முதனிலையடியாக பிறந்தது. அம்முதனிலை, 'அம்'. விகுதியொடு புணர்ந்து, 'ஞாலம்' என்றாயிற்று. அச்சொல், வெளியிடைத்தொங்கும், நிலவுலகத்திற்குக் காரணக்குறியாயிற்று. 'ஞா' என்னும் முதனிலை யடி.

யாகப் பிறந்த 'ஞாயிறு' என்னும் சொல் காப்பணுவுள்ளதென்னும் பொருள் பயந்து ஒளி மண்டிலத்தின் நடுவிலுள்ள சூரியனைக் குறிக்கின்றது. மின்னென்னும் முதனிலை நீண்டு மீன் என்றாகி மின்னு தலையுடைய மீனையுணர்த்திற்று. கொள்ளென்னும் முதனிலை நீண்டு, கோள் என்றாகி, தானே ஒளி செய்யமாட்டாது, பிறிதோர் ஒளிப் பொருளின் ஒளிபெற்று மின்னும் பொருளைக்குறித்தது. இத்தகைய சொற்களை ஆக்கிக்கொண்ட தமிழர் வானநூற் புலமையுடையரா யிருந்தனர் எனக்கூறினல் அது மெய்ம்மையுடையதன்றோ?

செஞ்ஞாயிற்றுச் செலவுமஞ் ஞாயிற்றுப்
பரிப்பும், பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
வளிதிரிதரு திசையும்
வறிது நிலைஇய காயமு மென்றிவை
சென்றளந் தறிந்தோர் போல வென்றும்
இனைத் தென்போரு முளரே. (புறம் 30)

எனப்பண்டைத் தமிழரின் வானநூற் புலமை பாராட்டப்பெற்றிருத்தல் காண்க. தம் கையகத்துள்ள பொருளின் தன்மையைப் பிறர் அறியும் தெளிவினும், வானநூற்புலவர் வானகத்துள்ள பொருளின் தன்மையை யறியுந்தெளிவு சிறப்புடையது. நாண்மீன்களையே தமிழர் நன்கறிந்தனர். ஏனையவற்றுள் 'வடபுல வெள்ளி'யை நன்கறிந்திருந்தனர். 'வடபுல வெள்ளி தென்புலம் படரினும்' என வடதிசை நீங்காத துருவமீனை வெள்ளைக்குடி நாகனார் கூறியுள்ளமை காண்க. நாண்மீன்களுள் பல்லாற்றானும் சிறந்த திருவாதிரையைத் தமிழர் நன்கறிவர்.

உலகங்கள் பலவற்றிற்கும் முதல்வனும், அவற்றை யெல்லாம் படைத்து, அளித்து, அழிக்கும், பிறவாயாக்கைப் பெரியோனுமாகிய சிவனைத் தமிழர் 'ஆதிரையான்' என அழைத்தழைத் தகங்குழைந்து, ஆரா இன்பத்துள் திளைக்கின்றார். ஆதிரையையும் பிற அண்டங்களையும் ஒருங்கே படைத்த ஆதிசிவனை, ஆதிரையிற் பிறந்தான், என்னும் பொருள் கொண்டு, ஆதிரையான் என்பர் சிலர்: அவர் அறியார்.



"மன்னிய நாண்மீன் மதிகனலி யென்றிவற்றை
முன்னம் படைத்த முதல்வனைப்—பின்னரும்
ஆதிரையா னாதிரையா னென்றென் றயர்வுறுமீ
யூர் திரைநீர் வேலியுலகு." என்னும்

பண்டைப்புலவர் செய்யுள் அப்பொருளைத் தெளிவுறுத்தும். ஆதிரையான் எனச்சிவனை அழைப்பதற்குத்தக்க காரணம் வேறு உளதாதல் வேண்டுமென உய்த்துணரக் கிடக்கின்றது. அக்காரணம் யாதெனப் பின்னர் ஆராய்வாம்.

திருவாதிரை யென்னும் பெயர் அம்மீனுக்குத் தமிழர் முதற்கண் சூட்டிய பெயரன்று. அம்மீனுக்கு வடமொழியாளர் இட்ட பெயர் "ஆருத்ரா' என்பது. அவ்வடமொழிப் பெயரே, ஆதிரை யெனத்திரிந்து, 'திரு' என்னும் கடவுட்சார்பைப் புலப்படுத்தும் அடைமொழி பெற்றுத் திருவாதிரையென மருவியுளது. அவ்வடமொழிச் சொல்லுக்குச் செந்நிறமுடையதென்பது பொருள். பின்னை, தமிழர் அம்மீனுக்கிட்ட பெயர்தான் என்னையோ எனின், அது 'செம்மீன்' என்பதாம். 'செம்மீன்' எனும் சொல்லும் அப்பொருட்டாதல் காண்க. திருவாதிரையென்னும் சொல் வழக்கேறச் செம்மீன் எனும் சொல் வழக்கு வீழ்ந்தது. வானநூற் பொருண்மையுடைய பல தமிழ்ச்சொற்கள், அங்ஙனமே வடமொழிச் சொற்கள் வழக்கேற, வழக்கு வீழ்ந்தன.

நாண்மீன்கள் பலவற்றுள்ளும் திருவாதிரை உருவத்தில் மிகப் பெரியது. அதனிற்பெரிது கேட்டை ஒன்றே. ஆதிரை இத்துணைப் பெரிதென மனத்தாலும் யார்க்கும் கணித்தற்கரிய பெரியவுருவத்தது. நிலத்தின் வாழும் மக்கள் நிலமே சாலப்பெரிய பொருள் என மதித்துத் தருக்குவர். அவர் வானிடை யியங்கும் மீன்களின் பருமையை யுணரார். தலைவி, தலைவன் பால் வைத்த அன்பின் மாண்பை விளக்க வந்த கவி, அவ்வன்பை, நிலத்தினும் பெரிது எனக்கூறினர். அக்கவியின் கருத்துள் நிலமே மிகப்பெரிய பொருளென்னும் கொள்கை படிந்து கிடக்கின்றது. ஆதிரை நடுவிற் பூமியை வைக்கின், இந்நிலவுலகம் ஊசியின் நுனியினும் சிறிதாகத் தோன்றும்.

ஞாயிறு, நிலத்திலும் பதின்மூன்று லக்ஷத்தையாயிரம் மடங்கு பெரியது. ஆதிரை ஞாயிற்றினும் இரண்டரைக்கோடி மடங்கு பெரியது. அதன் குறுக்களவு இருநூறு கோடி மைல் நீளமென்ப. ஞாயிறு பூமியினின்று ஒன்பது கோடியே முப்பது லக்ஷம் மைல் தூரத்துளதென்ப. ஞாயிறிருக்குமிடத்தில் திருவாதிரையை வைப்பின், அது பூமியிருக்குமிடத்தையும் கடந்து அதன் கீழும் சென்று, செவ்வாயையும் தொடும் என்று வானநூற்புலவர் கூறுவர். கேட்டை மீன் ஆதிரையினும் மற்றுமோர் அரைமடங்கு பெரியது. ஆனால், அது இருசுடர்களின் நெறியை விட்டுச் சிறிது விலகியுளதெனக் கருதற்கிடமுளது.

ஆராயுமிடத்து, மதி செல்லும் நெறியில் விலகாது நேர் நிற்கும் மீன்களுள் தன்னேரிணைப்பதின்றி தானேயாகப் பெரியது திருவாதிரையாம்.

விண்மீன்கள் பல நிறமுடையன. சில வெண்ணிறமுடையன. சில மஞ்சள் நிறத்தன. வேறு சிலவற்றின் நிறம் நீலம்; மற்றும் சிலவற்றின் நிறம் செம்மை. செம்மை நிறமுடைய நாண்மீன்கள் கேட்டை, ஆதிரை, உரோகணி என மூன்றும். மீன்கள் இயற்கையொளியுடையன எனக்கண்டோம். அவைகள் அளப்பில் வெப்பமுமுடையன. வெப்பத்தின் ஏற்றத் தாழ்விற்கேற்றவங்கு அதனையுடைய பொருள்கள் நிறத்தில் வேறு படுகின்றன. செந்நிறமுடைய மீன்களின் வெம்மை சென்றிகிரேடு (Centigrade) வெப்பளவை (Thermometre)யில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட வரையளவை (Degree)யாகும். ஆதிரையும் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட வரையளவையுடைய வெப்பமுடையது. விண் மீன்களுள் ஆதிரை பேரொளி யுடையது.

ஆதிரை நிலத்தினின்று மிகமிக நெடுந்தூரத்தில் வானிடையுளது. வானில் மின்னும் மீன்கள் எல்லாம் நிலத்தினின்று சம தூரத்தில் இருப்பனபோல் தோன்றினும் நுணித்தாராயின் அவை ஒவ்வொன்றும் ஏற்றத்தாழ்வுடைய தூரத்திலிருந்து மின்னுகின்றனவெனக் காணலாம். செம்மீன் சிந்தையும் செல்லாச்சேணிடை யுள்



ளது. விண்ணியங்கு பொருள்கள் மக்கள் மனத்தையும் மலைவிக்குந் தூரத்திலிருப்பனவால், அவற்றோடு பூமியிடை யுளதாய தூரத்தை, அறிஞர் ஒளிக்கால வாய்பாட்டிற் கூறுவர். ஒளி, தான் தோன்றும் இடம் விட்டுப்புறப்பட்டுச் செல்லுங்கால் கணத்திற்கு, ஒரு நூற்றெண்பத்தாறாயிரம் மைல் வேகத்திற் செல்லுமென்ப. அவ்வேகத்தொடு செல்லும் ஒளி, குறிப்பிட்ட ஒரு மீனினின்று புறப்பட்டு, நிலத்தையடையச் செல்லும் காலத்தால், நிலத்தோடு அம்மீனிடையுளதாய தூரத்தைக் குறிப்பிடுதல் வானநூற் புலவர் வழக்கு. ஆதிரையினின்று புறப்படும் ஒளி நிலவுலகத்திற்கு வந்து சேர இருநூறு ஆண்டுகள் செல்லும் என்ப. ஆகலின், ஆதிரை, நிலவுலகத்தினின்று இருநூறு ஒளியாண்டு தூரத்துளதென்ப. அங்ஙனம் கூறுதலின் பொருளாவது, திருவாதிரை இன்று வானிடை விட்டொழிந்து போயினும், இன்னும் இருநூறு ஆண்டுகளுக்கு, அதன் ஒளி, நம் கண்ணுக்குப் புலப்படும் என்பது.

ஆதிரை மிக்க விசையுடன் வானிடை யிடையறு தியங்கிக் கொண்டுளது. விண்மீன்கள் பலவும் இடையறு தியங்குகின்றன. கணம் ஒன்றிற்குப் பதினைந்து மைல் விசையுடன் ஆதிரை யியங்குமென்ப.

ஆதிரை, ஒரு தனி மீனாயினும், அஃதொரு மீன்கூட்டத்திலுள்ளது. அக்கூட்டத்தை மேலை நாட்டு வானநூற்புலவர் ஓரியன் எனக் கூறுவர். அக்கூட்டத்தை முழுதுற நோக்கின் அஃதொரு சிறு மரக்கலம் போன்றும், ஆதிரை அதில் ஏற்றிவைத்துள்ள செஞ்சுடர் விளக்குப் போன்றும் காணப்படும்.

ஆதிரை



(ஓரியன்).

மருத்துவன் தாமோதரனார் என்னும் பண்டைத் தமிழ்ப்புலவர் தமிழ்ப் புலமையொடு வானநூற் புலமையு முடையவர். அவர் சோழன் குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமா வளவனைப் பாடிய புறநானூற்றுப் பாட்டில், ஆதிரையின் தோற்றத்தையும், ஆதிரை வணக்கம் தமிழ் நாட்டிலிருந்தமையையும், புலப்படுத்தி யுள்ளார். அப்பாட்டு,

முந்நீர் நாப்பட் டிமிற்சுடர் போலச்
செம்மீன் இமைக்கு மாகவிசும்பின்
உச்சிநின்ற வுவவு மதிகண்டு
கட்சி மஞ்ஞையிற் சுரமுதல் சேர்ந்த
சில்வளை விறலியும் யானும் வல்விரைந்து
தொழுதன மல்லமோ..........................
... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... வளவன்
வெயின் மறைக்கொண்ட வுருகெழு சிறப்பின்
மாலை வெண்குடை யொக்குமா லெனவே —(புறம் 60)

என்பது.

'கடல் நடுவே தோன்றுகின்ற திமிலின்கண் இடப்பட்ட விளக்குப்போல ஆதிரைமீன் விளங்கும், மாகமாகிய விசும்பினது உச்சிக்கண்ணே நின்ற உவாநாளின் மதியத்தைக்கண்டு, காட்டுள் வாழும் மயிலைப்போலச் சுரத்திடைப் பொருந்திய சிலவாகிய வளையை யுடைய விறலியும் யானும் பலகாற்றொழுதே மல்லேமோ? வளவனது வெயிலை மறைத்தற்கெடுத்த உட்குப் பொருந்திய வெண்கொற்றக்குடையை யொக்குமெனக் கருதி' என்பது அப்பாட்டின் பொருள். புறநானூற்றுரைகாரர் செம்மீன் என்னும் சொற்கு, ஆதிரையென்னும் பொருளுமுண் டென்றாரேனும், இப்பாட்டில் அச் சொற்குச் 'செவ்வாய்' என்றே பொருள் கொண்டார். முழுமதி வணங்கப்படற்குரிய தன்றெனினும், அஃதரசன் குடையை ஒத்திருத்தலால் வணங்கப்பட்டதென்பது அப்பாட்டின் கருத்து. அங்ஙனம் கூறப்பட்டதேனும், செம்மீனை வணங்கப் புக்கவிடத்து, அதனைத் தனித்து வணங்கமுடியாமை பற்றி முழுமதியையும் சேர்த்து



வணங்கின ஒருவன் கூற்றாக மருத்துவன் தாமோதரனார் கவி செய்திருத்தல் வேண்டுமென உய்த்துணரலாகும். செவ்வாயை வணங்குதல் வேண்டுமாயின், முழுமதியை விட்டுச் செவ்வாயை வணங்கல் இயலும். செவ்வாய் வணக்கம் ஆட்சியில் யாண்டுமில்லை. மதியின்றியும், மதியை விட்டகன்றும், செவ்வாய் வானில் தோன்றும். செவ்வாய்க்கும் முழுமதிக்கும் யாதொரு தொடர்புமில்லை. மதி என்று எம்மீனொடு வானில் சேர்ந்து காணப்படுகிறதோ, அன்று அம்மீனின் நாளாம். ஆதிரையோடு மதி சேர்ந்திருக்கும் நாள் ஆதிரை நாளாம். தாமோதரனார் பாட்டில் முழுமதியுடன் செம்மீன் திகழ்வது கூறப்பட்டுளது. முழுமதியுடன் திருவாதிரை சேர்ந்து விளங்குவது, மார்கழித்திங்களில் வரும் ஆதிரை நாளிலே தான். மாதங்களில் நான் மார்கழியாவேன் எனக்கண்ணன் கீதையிற்கூறினன். அத்தகைய சிறந்த மார்கழித்திங்களில், முழுமதி வானிற்பொலிவுற்றுத் தோன்றுங்கால் செம்மீனும் அதனுடன் சேர்ந்து வானைமிக அலங்கரிக்கும். அக்காலை யம்மீனை வணங்குவார் அதனோடொருங்கிருக்கும் முழுமதியையும் வணங்கியே தீர்வர். ஆதிரை மீனை வணங்கப் புக்கு முழு மதியையும் வணங்கிய ஒருவன், விலக்கப்பட்ட முழுமதியையும் வணங்கியதன் காரணம், அரசன் குடைக்கும், அம்மதிக்கும் உளதாய வொற்றுமையும், அக்குடையின்பால் அவன் கொண்ட பற்றும் என்று தாமோதரனார் நயம் தோன்றப்பாடியுள்ளார். பண்டைக்காலத் தமிழ் மக்களிடை ஆதிரை வணக்கம் பெருவழக்கிற்றாக இருந்துளதென விளங்குகின்றது. ஆதிரை, உயர்ந்த வானிடை இருநூறு ஒளியாண்டு தூரத்திலுளது; நிலத்தினும் பலப்பலகோடி மடங்கு பெரியது; செக்கச்சிவந்த நிறமுடையது; இடையறாதென்றும் வான வெளியில் ஆடுவது; முழுமதியொடு சேருங்கால் மதிமிலைந்த செம்மேனி யெம்மான்போல் செவ்வொளி சிறந்து விளங்குவது. யாவரினும், எவற்றினும் பெரியோனும், எவற்றினு முயர்ந்த நெடியோனும் காண்கிலா துயர்ந்தோனும், சிந்தையும் செல்லாச் சேட்சியானும், நிலாமுகிழ்த்த சடையோனும், அம்பரத்தில் என்றும நடமிடுவோனும் ஆகிய சிவபெருமானை நினைவுட்கொண்டு பரவுதற்கு, அவனடியார்க்குத் திருவாதிரை குறியாய் நின்று பெருந்துணை செய்யுமாதலால், தமிழர், அம்மீன் முழுமதியுடன் சேரும் திருவாதிரை நாளில், அம்மீன், வானப்பெருவெளியில் ஆடுவதைக்கண்டு, அவ்வாட்டத்திற்கும் வித்தாகும், ஞானப்பெருவெளியில் திருநடமிடும் கூத்தப்பெருமான் திருவடி கண்டு, வணங்கிக்களித்தனர் என உய்த்துணரலாகும்.

# சேக்கிழார் பாத் திறம்

(அ. சிதம்பரநாதஞ் செட்டியார், M. A., தமிழ் விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)

"உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்."

என்று பெரிய புராணத்தைத் தொடங்கிய சேக்கிழார்,

"என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்"

என முடிய வைத்தார் ஆகலின், "உலகெலாம்" எனத் தொடங்கிய வாறே "உலகெலாம்" என முடித்தார் என்று சொல்லி, அதன்கண் நயம் உண்டு என்பர் சிலர். ஆனால், அங்ஙனஞ் செய்தற்கு மிக்க திறம் வேண்டுவதில்லை.

சேக்கிழார் கூறக் கருதிய தனி யடியாருடைய தொகை அறுபத்திமூன்று என்பதைக் கடவுள் வாழ்த்தின்கண்ணே உள்ள எழுத்தின் எண்ணால் அறியவைத்தனர் என்பர் சிலர். இவர் சொல்லுமாறு கொள்ளவேண்டுமாயின், அப்பாட்டைப் பின் வருமாறு வரைந்துகொள்ளவேண்டும்:—

உலகெலா முணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகிற் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

அதனையே "அரியவன் நிலவுலாவிய" எனப் பிரித்தால் எண்ணென்று குறைதலையும், "வேணியனலகிற்" எனச் சேர்த்தால் எண்ணென்று குறைதலையும் நாம் கருதக்கூடாதுபோலும்! எழுத்தினை எண்ணுங்கால், மெய்யெழுத்தை நீக்கி எண்ணுவதே மரபாயிருக்கவும், அவற்றையுஞ் சேர்த்து எண்ணி 63 என்று காட்டுவது எத்துணை பொருத்தமுடைத்து? இவர்கள் கருதுகின்றவாறு நோக்கினால் அப்பாட்டின் முதலடியில் 3 மெய்யெழுத்துக்களும், இரண்டாமடியில் 2 மெய்யெழுத்துக்களும், மூன்றாமடியில் 4 மெய்யெழுத்துக்களும், நான்காமடியில் 6 மெய்யெழுத்துக்களும் உள; ஏனைய 48 உயிரெழுத்தும் அடிதோறும் 12 ஆக வந்துள்ளன. நல்லவேளையாக, அடியார் அறுபத்திமூவருள் நாற்பத்தெண்மரே உயிரனையார் என்றும், பிறர் உடலனையார் என்றும் இவர்கள் சொல்வதில்லை. நல்லவேளையாக, முதலடியில் வரும் மூன்று மெய்யெழுத்துக்களும் பாணர், கடைஞர், வலைஞர் ஆகிய மூவர் அடியார்களைக் குறித்தன என்றும், இரண்டாமடியில் வரும் இரண்டு மெய்யெழுத்துக்களும் இடையர் இருவரைக் குறித்தன என்றும், மூன்றாவதில் வரும் நான்கும் ஆதிசைவர் நால்வரைக் குறித்தன என்றும், கடையொன்றில் வரும் ஆறும் அரசர் அறுவரைக் குறித்தன என்றும், முதலடியில் வரும் பன்னிரண்டு உயிரெழுத்தும் அந்தணர் பன்னிருவரைக் குறித்தன என்றும், பிற மூன்றடியில் வரும் பன்னிரண்டு உயிரெழுத்துக்களுக் கேற்பத் தனித் தனி பன்னிரண்டு அடியார் குறிக்கப்பட்டதை ஓர்ந்துணர்க என்றும் சொல்லி இவர்கள் இடர்ப்படுவதில்லை. எனவே, எழுத்தெண்ணி மறைபொருள் நயங் காணும் இவ்வன்பர்கள் ஓரளவில் நிற்றல் பாராட்டற்குரித்து. இவ்வாறெல்லாம் மறைபொருளுடையதாக அமைக்கப்படும் பாட்டே சிறந்த பாட்டு என்று சொல்லுங் காலம் இஃதன்று. இவ்வாறு அமைக்கின்ற புலவனே சிறந்த கவிஞன் என்று கருதுங் காலமும் இஃதன்று.

கவிஞர் ஒருவருடைய பாத் திறத்தைக் கண்டறிய இரு வழிகள் உள. ஒன்று, அவர் எழுதிய காவியம் முழுதும் ஒருமிக்க ஓதிக் காவியத்தின் தலைவன் முதலியோரை அமைத்துக் காட்டுமாற்றை நோக்குதல். மற்றொன்று, தனித் தனிப் பாடல்களை எடுத்துக் கொண்டு அதனதன்கண் உள்ள சிறப்பு இன்னதென்று நோக்குதல். இப்புராணம் முழுதுங் கூர்ந்து நோக்கிக் காணலாகுந் திறம் இனைத்

தென்று இப்பொழுது எழுத எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால், தனித் தனிப் பாடல்கள் சிலவற்றிலுள்ள கவித் திறமே ஈண்டுக் கருதப்படும்.

சுந்தரர்—திருவாரூரிலிருந்தவர் சேரநாட்டுக் கழறிற்றறிவாரைக் காண எண்ணிப் புறப்பட்டார். வழியில், திருப்புக்கொளியூர் அடைந்து மாடவீதி மருங்கு அணைகின்றவர் செல்வம் நிரம்பிய எதிர் மனைகள் இரண்டில் ஒரு மனையில் உவகையொலியும், ஒரு மனையில் அவல வொலியும் எழுதலை அறிந்து, இரண்டொலியும் உடனே நிகழ்தற்குக் காரணம் யாதெனப் பக்கத்தில் இருந்தோரைக் கேட்டார். அவ்வந்தணர் கூறிய விடையாகச் சேக்கிழார் வரைந்துள்ள செய்யுள் திட்பமுஞ் செறிவும் உடையது. அதனைப் பார்ப்போம்:—

“அந்தணாளர் வணங்கி, அரும்புதல்வர் இருவர் ஐயாண்டு
வந்த பிராயத்தினர் குளித்த மடுவில் முதலை ஒருமகவை
முந்த விழுங்கப், பிழைத்தவனை முந்நூல் அணியுங் கலியாணம்
இந்தமனை ; மற்றந்த மனை இழந்தார் அழுகை என்றுரைத்தார்”

மறைச் சிறுவர் என்பதைச் சுந்தரர்—அத் தெருவில் வந்தவர் அறிந்துளார் ஆகலின், மறையவர் சிறுவர் இருவர் என மீண்டுங் கூறாது, அவ்விருவரும் இரு குடிக்கும் ஒவ்வொரு சிறுவராயிருந்தமை சுந்தரர் அறிந்திலார் ஆகலின், அரும் புதல்வர் எனவே கூறி யமைந்தது நயமுடைத்து. மக்கள் இருவர் எனப் பொதுச் சொல்லாற் கூறின் இருவருள் ஒருவராவது பெண்மகளோ என்னும் ஐயமுண்டாம், அவ்வையத்தை இந்நேரத்தில் உண்டாக்கலாகாது என்னுங் கருத்தான் புதல்வர் இருவர் எனக் கூறியது சிறப்புடைத்து. கூறப்போவது நூலணி மணச் செய்தி ஆகலின், இத்துணை வயதுடையவர் முன்னர்க் குளித்தனர் என்று கூறவேண்டியது அவசியமாயிற்று. ஐயாண்டு வந்த பிராயத்தினர் இருவர் குளிக்குங்கால், ஒருவன் முதலையால் விழுங்கப்பட மற்றவனுக்கு இப்பொழுது நூலணிவினை எனக் கூறின் விழுங்கப்பட்டு ஏறத்தாழ இரண்டாண்டுகள் ஆயினமை அறியப்படும் அன்றோ? ஆகலின் அன்றே, இரண்டாண்டுகள்முன் அது நிகழ்ந்தது எனச் சேக்கிழார் சொல்லாது விட்டார்?



திருமறையவர் குலத்துள் வந்த சுந்தரருக்கு அவ்வந்தணாளர் “ஏழாண்டு வந்த இப்பிராயத்தில் நூலணி மங்கலம் நிகழ்கிறது” என்று கூறியதாகச் சேக்கிழார் எழுதி யிருப்பரேயாயின், இவ்விடத்துச் செறிவும் திட்பமும் இழக்கப்படும். “அப்புதல்வர் இருவரும் ஒருநாள் ஒரு மடுவிற்குக் குளிக்கப்போய்க் குளிக்குங்கால்...... முதலை விழுங்க” என்றவாறு எழுதப்பட்டிருக்குமாயின், அது வசனமாகுமன்றிப் பாட்டாகாது. “புதல்வர் இருவர்........குளித்த மடுவில்” என்றே எழுதப்பட்டுள்ளமை வியந்து வியந்து பாராட்டற்குரித்து. “ஒருவன் பிழைத்து வீடு திரும்ப, அவனுக்கு மணவினை” என்று எழுதியிருப்பின் அது வசனப் போக்காகுமன்றி நல்ல பாட்டின் போக்கு ஆகாது. “ஒரு மகனை முந்த விழுங்க, பிழைத்தவனை நூலணிதல்” என்றவாறு வரையப்பட்டுள்ளது நோக்கி இன்புறத் தக்கது. இன்று முந்நூல் அணியுங் கலியாணம் என்று உரைக்காது விட்டதால் இழப்பொன்றுமில்லை. பேச்சு நிகழுங் காலத்தில்தானே மங்கல வாத்தியங்களின் ஒலி கேட்கப்படுதலால் அன்று மணவினை என்பது கூறாமலே விளங்கும். அதனால், அச்சொல்லைச் சொல்லாது சேக்கிழார் உரைத்தது அவரது திட்ப நடையையும் நுட்ப மதியையுங் காட்டும். கலியாணம் இந்த மனையில் நிகழ்கிறது என்னாது கலியாணம் இந்த மனை என்றும், அந்த மனையில் இழந்தார் அழுகை நிகழ்கிறது என்னாது அந்த மனை இழந்தார் அழுகை என்றுமே அந்நிலையில் அந்தணர் உரைத்ததாக வரைந்த கவிஞரின் திறத்தை என்னென்பது! ஏன் அழுகையொலி எழுகிறது என்று கேட்டு அதனை யறியும் ஆவலுடன் சுந்தரர் நிற்குந் தறுவாயில், எழுவாய் பயனிலை செயப்படுபொருள்களையும் வேற்றுமை விரிகளையும் விடாது கூட்டி யுரைத்தனர் விடை யிறுத்தோர் என்றவாறு வரையப்பட்டிருக்குமாயின், அதனைக் கவியெனல் வேண்டா. பெரியதொரு கதையை இத்துணை சிறியதோர் அளவில் திட்பமாக உரைத்த சேக்கிழாரின் திறமை நம்மனோரை மகிழ்விக்கும்.

பலருடைய உள்ளத்தை உருக்குமாறு வரையும் இடங்களிலும் கவிஞரொருவரின் திறத்தைக் காணக்கூடும். திருமருகல் என்னும்

ஊரின்கண் நிகழ்ந்ததொரு நிகழ்ச்சியைச் சேக்கிழார் வரைந்து காட்டியிருப்பது எப்படி என்று நோக்குவோம். வைப்பூர் என்னும் ஊரில் வணிகர் குடியில் தாமன் என்பானுக்கு ஏழாவது மகளாய்த் தோன்றிய பெண்ணொருத்தி பெற்றோரறியாது தனது மாமன் மகனொடு சார்ந்து சென்றாள். தாமன் தன் மூத்த மகளை அவனுக்குத் தருவதாக உரைத்திருந்தும், பொருள் கருதிப் பிறன் ஒருவனுக்குக் கொடுத்துவிட்டான். பின்னரும் ஒருவரொருவராக, ஏழாமவள் நீங்கயாவரையும் பிறர்க்கே மணம் புணர்த்தினான். தன் மாமன் மகன் தளர்ந்தழிவானுக்குத் தகவு செய்யவேண்டி, இளையவள் அவனொடு சென்றாள். வழியில் திருமருகலின்கண் மடமொன்றில் இரவு உறங்கும்போது அவன் அரவு தீண்ட மாண்டான். மணமாகாத காரணத்தால் அப்பெண் இன்னம் அவனைத் தீண்டமாட்டாதவளாய், நிலை தளர்ந்து சோர்ந்து அரற்றுகின்றாள். மந்திரம் வல்லார் சிலர் முயன்றும் விடந் தீர்க்க மாட்டாராயினர். பொழுதும் புலர்கிறது. அக்காலை அவ்விளையாள் புலம்புகின்றாள். அதனைச் சேக்கிழார் வரைந்துள்ளவாறு இது:—

“ அன்னையையும் அத்தனையும் பிரிந்து நின்னை
அடைவாக உடன்போந்தேன் அரவால்வீடி
என்னையுயிர் விட்டகன்றாய் ; யானென் செய்கேன் !
இவ்விடுக்கண் தீர்க்கின்றார் யாரும் இல்லை !!
மன்னியசீர் வணிகர்குல மணியே ! யானும்
வாழேனென் றென்றயர்வாள் மதியினாலே
சென்னியிளம் பிறையணிவார் கோயில் வாயில்
திசைநோக்கித் தொழுதழுதாள் செயலொன்றில்லாள் ”

துயர் வந்துற்றக்கால் சுற்றத்தாரை நினைத்தல் மக்கள் இயல்பு. ஆற்றொணா அருந்துயர் பொருந்துழி மகளிர் இல்லாத தாயரையும் நினைத்தல் இயல்பு. இம்மகள் உள்ள தாயை இந்நிலையில் நினையாதிருப்பளோ? அவளைப்பற்றிய எண்ணந்தான் முதற்கண் எழும். இந்தப் பெண்டின் உள்ள நிலைக்கேற்றவாறு “ அன்னையையும் ” என முதற்கண் வைத்துச் சேக்கிழார் உரைத்தது அவரது கவித் திறத்தைக் காட்டவில்லையா? முன் தமக்கையார் அறுவரையும் பிறர்க்கு அளித்த காரணத்தால் தந்தை தகவிலன்



எனக் கருதிவந்த இப்பெண்ணும் அத்தந்தையை இப்பொழுது நினைக்கின்றாள். இதுவும் உலக இயல்பு. மிகக் கொடியவர் என்று நாம் கருதுகின்ற சிலர், நம் கண்முன்னின்று கழிவரேல், அவரை மிக்க கொடுமையுடையார் என்று சில சமயங்களில் நாம் நினைப்பதில்லை. அதனால், தந்தைசெய்த தகவின்மையையறிந்தும் இப்பொழுது அவனையும் நினைக்கின்றாள் இப்பெண். நம் தந்தை தாயர் நமக்கு இன்னா செய்யினும், அத்தா, அன்னாய் என நம்மையறியாமலே நாம் நவிலுதல் மரபு. நாம் துயருறுங்கால், அவர்செய்த தீமையும் மறந்து அவரையே துணையாக நாடுவோம். இப்பெண்ணிற்கோ தந்தை இன்னாதது எதுவும் இதுகாறும் இழைத்திலன், இவளே அவன்பால் வேறொரு காரணமாக வெறுப்புக்கொண்டவள். அது இக்காலை நீங்க, அவனையும் இவள் நினைத்தல் இயல்பென அறிந்து சேக்கிழார் “ அன்னையையும் அத்தனையும் ” என அடுத்தடுத்து வைத்தது நோக்கத்தக்கது. “ பல்லாண்டுகள் என்னைப் பாதுகாத்த தாயையுந் தந்தையையும் பிரிந்து வருதல் எளிதன்று. அவரையும் பிரிந்து வந்தேன் ” என்பாள்போல “ அன்னையையும் அத்தனையும் பிரிந்து ” என்று இயம்புகின்றாள். வேறு ஒரு துணையின்றி, நீயே உறுதுணையாய் உன்னுடன் போந்தேன். நீயோ என்னைவிட்டு அகன்றாயே என்பாள் “ நின்னை அடைவாக உடன் போந்தேன் அரவால்வீடி என்னை உயிர்விட்டகன்றாய் ” எனக் கூறுகின்றாள். “ அந்தோ! இவ்விடத்தைத் தீர்த்தற்குரிய மணியோ மந்திரமோ மருந்தோ என்பால் இல்லையே, இன்னது செய்வதென்றும் அறியேனே ” என உரைப்பாள், “ யான் என் செய்கேன் ” என வருந்துகிறாள். “ ஊரில் ஆயின், இந்நேரத்திற்குள் என் சுற்றத்தார் பலர் ஓடி வந்து இவ்விடுக்கணைப் பொடிபடுத்த முயலுவர்; ஊரில் ஆயின், இந்நேரம் ஊரார் அனைவருங் கூடி இந்த விடத்தைத் தீர்க்கும் வழியைத் தேடுவர். இவ்விடத்திலோ இதனைத் தீர்ப்பார் ஒருவரும் இல்லையே ” என இரங்குகின்றவள் “ இவ்விடுக்கண் தீர்க்கின்றார் யாரும் இல்லை ” என அழுகின்றாள். ஊரை நினைத்ததும், அவளுடைய தாய் தந்தையர் நினைவும், அவர்தங் குலப்பெருமையும் மனத்தே எழுவதாக, “ மன்னியசீர் வணிகர்குல மணியே ” என விளம்புகின்றாள். ஊரில் இது நிகழ்ந்திருப்பின், அவனுடைய

பெற்றோருஞ் சுற்றமும் இதனைக் கணப்பொழுதில் நீக்குதற்கு முயல்வரோ என்ற எண்ணமும், மாமன் மாமி ஆகிய இருவருடைய அருந் துயரால் என்னாகுங்கொல் என்ற எண்ணமும் அவ்வேளையில் அவளிடம் தோன்றின என்று அறியற்பாற்று. அதனால்போலும் "யானும் வாழேன்" என்கின்றாள். "நீ அகன்றாய், நானும் வாழேன்" என்ற கருத்து ஒருபுறமிருப்ப, உன் தந்தை தாயர்க்கு ஒரு மகவாய் இருந்த நீ இறந்த காரணத்தால் அவர் உயிர் வாழார், நானும் வாழேன்" என்ற கருத்துப்படச் சேக்கிழார் அருமையாக உரைத்த திறம் ஓர்ந்து உணரத்தக்கது. படிப்போர் உள்ளத்தை இப்பாச் செய்யுள் எவ்வளவு உருக்க வல்லது என்று கண்டறிக.

இங்ஙனம், தனித் தனிப் பாடல்களை எடுத்துப் பார்க்கின்ற வாற்றால் சேக்கிழாருடைய பாத் திறம் நன்கு விளங்கும். இக் கட்டுரையில், இரண்டு பாடல்களே அங்ஙனம் பார்க்கப்பட்டன என்க.

# செங்கண்மா

(வித்துவான் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், செங்கம்.)

புதுமை பழமையாவது இயல்பு; பழமை புதுமையாவது அரிது. தருக்க நெறிக்கும் அஃது எளிதில் அமைவது இல்லை. ஆயினும், அதுவும் இதுபோது மாறி, பழமை பழமை குன்றிப் புதுமையாக நிலவுகிறது. இத்துறையில் பண்டைத்தமிழ் நாட்டு ஒழுக்க நெறிகளுட் சிலவும், நகரங்கள் சிலவும் முற்பட்டு நிற்கின்றன. இச்சிலவற்றுள், நாம் இங்கே கூறப்புகும் செங்கண்மா என்னும் நகரமும் ஒன்றாகும். இற்றைக்குச் சற்றேறக்குறைய ஆயிரத்தறுநூறியாண்டுகட்கு முன்பு புலவர் பாடும் புகழ் நிறைந்து வயங்கிய இந்நகரம் இடையே தன் பெருமை மழுங்கிக் கிடந்து இதுபோது சிறிது நலம்பெற்று வளம் சிறந்து வளர்ந்து வருகின்றது.

திருவண்ணாமலையின் மேலைச்சாரில் நேர் மேற்கே செல்லும் சாலைவழி, சுமார் இருபதுகல் தொலைவிலுள்ள இந்நகருக்கு மக்களைக் கொண்டு செல்கிறது. அச்சாலை வழியே சில கற்கள் சென்றதும், மேடும் பள்ளமும் மிகுந்து காண்பார் கண்கட்கு விருந்து செய்ய, பசுந்தழைத்திரளை வானளாவக் குவித்தது போலத் தோன்றும் குன்றங்கள் பல காடு மண்டிக்காட்சி வழங்குகின்றன. கண்ணுக்கெட்டிய அளவு காடும் காவும் கல்மிகு குன்றமும் கஞலிக்கிடப்பது காணின், பண்டையோர் இந்நாட்டைப் பல்குன்றக் கோட்டம் எனப்பகுத்து முறை செய்த சிறப்பு மனத்தே தோன்றி மகிழ்ச்சி மிகுவிக்கின்றது. சாலையின் வடக்கில் சுவர் வைத்தது போல நிற்கும் வரைத்தொடர் சவ்வாது மலைத்தொடர் என வழங்குகிறது. அதனடியில், செம்மணணும் செந்நிறப் பெருக்கும் கொண்டு சிற்றாறொன்று வளைந்து வளைந்தோடுகின்றது. இது தான் சேயாறு. இதனையே மலைபடுகடாம் பாடிய ஆசிரியர் பெருங்கௌசிகனார், "காணுநர் வயா அங்கட்கின்

சேயாறு" என்றும், "கடுவரற் கலுழிக்கட்கின் சேயாறு" எனவும் பாடிக்களிக்கின்றார். நெடியவும் குறியவுமாகிய குன்றங்கட்கிடையே நெளிந்தோடும் இவ்யாற்றின் நெறியைக் காண்மின்: கரைமருங்கே தென்னையும் வாழையும் சேணுறத் திகழ்கின்றன; தீம்புளியும் தேமாவும் செறிந்து இருக்கின்றன. இதனிடையே இச்சாலை வழிச் செல்வார்க்கு இவை தண்ணிழல் செய்து தமிழ் மணம் கமழ்கின்றன. பெரும்பாறைகட்கிடையே நிமிர்ந்தும் தாழ்ந்தும் வளைந்து வளைந்தேகும் இச்சாலையும், "படுத்து வைத்தன்ன பாறை மருங்கின், எடுத்து நிறுத்தன்ன இட்டருஞ் சிறுநெறி" என அக்கோசிகனார் கூறியதனை நெஞ்சு குளிர நினைப்பிக்கின்றது.

சாலையருகே சலசலவெனக்கலித்தோடும் சேயாறு, செங்கண்மாவிற்குக் கிழக்கில் ஒன்பது கல் தொலைவில் வடகிழக்குத் திசையில் வளைந்தேகுகிறது. அத்திசையை நோக்கின், தொலைவில் ஒரு நெடியகுன்றம் தோன்றுகிறது. தரைமகள் தன் மணிக்கையைத் தூக்கி, விரல் நான்கையும் மடக்கிக்கொண்டு சுட்டு விரலை நீட்டி, "இதோ, வானவர் உறையும் வளவியகாடு" எனக்காட்டுவது போல விளங்கும் இம்மலையே மலைபடுகடாத்தில் கூறப்படும் நவிரமலை. அதன் முடியில் கோயிலொன்று தெரிகிறது. அதன் கண் உறையும் இறைவன் யாவன்? அவனே "காரியுண்டிக்கடவுள்" "பேரிசை நவிரம் மேஎய் உறையும், காரியுண்டிக் கடவுள்" எனப்பெருங் கோசிகனார் பேசிப்பரவும் பெருந்தகை முதல்வன் இவனேயாகும்.

செங்கண்மா என்னும் இந்நகரம் சேயாற்றின் தென் கரையில் உளது. அழகுற விரிந்த தெருக்களும், பெரு வீடுகளும், சிறு கடைவீதியும் கொண்டிருக்கும் இப்பேரூரை நோக்கின் ஒருகாலத்தே இது சீரும் சிறப்பும் கொண்டிருந்த தென்பது இனிது விளங்கும். இவ்வூரருகே சேயாறு மேற்கிலிருந்து கிழக்கே ஓடி, பின்னர் நகர்க்குக் கிழக்கெல்லையாய்த் தென்றிசையில் திரும்பி சிறிது தூரம்சென்று, முடிவில் கிழக்குப் பக்கமே செல்கிறது. கிழக்குத் திசையில், ஆற்றின் கீழ்க்கரையில் இருக்கும் கோட்டையிடம் இதன் பழைமைப் பண்பினைப் பகர்கின்றது.



இதுபோது இந்நகரத்தைச் செங்கம் என்றே வழங்குகின்றனர். செங்கம் தாலூகாவுக்குத் தலைநகரும் இதுவே. இவ்வூரில் மருத்துவச்சாலையும், உயர்கலாசாலை யொன்றும் பிற அரசியற் காரிய நிலையங்களும் உள்ளன. திருவண்ணாமலையிலிருந்து மேற்கே கொங்கு நாட்டிற்குச் செல்லும் பெருவழி இவ்வூர்மேற்றான் செல்கின்றது. அருகேயுள்ள சவ்வாது மலையின் மேலுள்ள குறிச்சிகளில் வாழும் மலைவாணர்க்கு வேண்டும் பொருள்கள் இவ்வூர் வழியாகவே செல்கின்றன. மலையிலிருந்து, மலைவாழை, மூங்கில், எலுமிச்சை, புளி, கடுகு முதலியன இறங்கி வருகின்றன. நல்ல குடிப்பரப்பும், வயல் வளமும் தக்க அளவில் இல்லாமையால், ஏனைப்பேரூர்கள் போல மக்கட்பெருக்கும், செல்வச் சிறப்பும் இங்கே காணப்படுவதில்லை. இங்கே இருபெருங் கோயில்கள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று திருமால் கோயில். இதன்கட் காணப்படும் கட்டிட வமைப்பும், கல்வெட்டுக் குறிப்பும் இது நாயக்கமன்னர் காலத்தே உண்டாயது என்பதைக் காட்டுகின்றன. மற்றொன்று சிவன் கோயில். இதன்கட் காணும் கல்வெட்டுக்கள் பன்னிரண்டு பதின்மூன்றாம் நூற்றாண்டில் இந்நாட்டையாண்ட சோழமன்னர்கள் பொறித்தனவாகும். இவற்றைப்பற்றிய வரலாற்றுக் குறிப்பைப் பின்னர்க் கூறுவாம்.

இப்பேரூரின் தற்கால நிலையைச் சரித்திர ஆசிரியர். திரு. ச. அருணாசலம்பிள்ளை பி. ஏ., எல். டி., அவர்கள் பின் வருமாறு இனிது கூறுகின்றார். "செங்கம் இப்பொழுது எப்படி? தென்னார்க்காட்டிலிருந்து வடார்க்காட்டிற்கு மாற்றப்பட்டு, திருவண்ணாமலை தாலூக்காவிலிருந்து பிரிந்து, தனித் தாலூக்காவாய் விட்டது. வடார்க்காட்டு வேலூர், தென்னார்க்காட்டுக் கடலூரை விடச் சற்றுச் சமீபத்தில் உளது. இப்பொழுதும் உத்தியோகஸ்தர்களுக்குச் செங்கம் என்றால் பயம்தான். 'செங்கம் போனால் வீடேயில்லையாமே! கச்சேரியில் தான் வாசம் செய்யணுமாம்! தங்கியில்லையாம்; மலை ஜூரம் வருமாம்' என்றும், 'காய் கறி சரசமாம், மலைப்பழம் விசேஷமாம்; கோயில், குளம், ஆறு எல்லாம் உண்டாம்.......' என்றும் பேசிக்கொள்வது வழக்கம். சில பெரிய உத்தியோகஸ்தர்கள் பயந்து கொண்டு செங்கம் "கேம்ப்" வருவதேயில்லை. சிலர், தைரியமாய்

வந்தாலும், இராத்தங்குவதில்லை. சிலர் சாப்பாட்டிற்குத் திருவண்ணாமலைக்குப் போய்விடுவார்கள். * * * செங்கத்தை விட்டுப் போக மனமில்லாத உத்தியோகஸ்தர்களாலேயே செங்கத்திற்கு ஓர் அபகீர்த்தி ஏற்பட்டுவிட்டது என்று ஊரார் சொல்லிக்கொள்வது உண்டு. தொடக்கத்தே மனநடுக்கத்தோடு வந்தவர் வருஷம் இருபதானாலும் ஊரைவிட்டுப்போக மனங் கொள்வதில்லை. இங்கேயே, வீடு, நிலம் முதலியன வாங்கிக்கொண்டு, ஊரைப்பற்றிக் குறைகூறிக்கொண்டே காலத்தைக் கழித்துவிடுவர்.”

சென்னையிலுள்ள பொருட்காட்சிச்சாலையில் ஒரு பெரிய யானையின் எலும்புக்கூடு வைக்கப்பெற்றுளது. இதனைப் பலரும் கண்டிருப்பர். அங்கே “இந்த யானை செங்கத்தில் கொல்லப்பட்டது” என்றொரு குறிப்பும் எழுதப்பெற்றிருக்கிறது. இதன் வரலாற்றினை யாராய்ந்து வெளியிட்ட திரு. அருணாசலம் பிள்ளை யவர்கள் கூறுவது வருமாறு:—“1850-ஆம் ஆண்டில், சேலம் திருப்பத்தூர்க் காடுகளிலிருந்து 40, 50 யானைகள் செங்கம் காட்டிற்குள் வந்தன. இவை இப்புசுல்தான் சேனையில் இருந்தனவாம். அவன் இறந்த பிறகு ஏற்பட்ட குழப்பத்தால் ஆதரிப்பாரற்றுப்போன இவை இப்பக்கத்திற்கு ஓடிவந்துவிட்டன. பின்பு அவற்றுள் பலவும் போய்விடவே, ஓர் யானைமட்டும் செங்கத்திலேயே வாசம் செய்யத் தீர்மானித்துவிட்டது. இதனையும் துரத்திவிடப் பல முயற்சிகள் செய்யப்பட்டன. ......என்ன செய்தாலும், நன்னன் சேய் நன்னன் ஆண்ட இப்பிரதேசத்தைவிட்டுப் போக, இது மனமில்லாதிருந்தது. பழைய கோட்டையை அடிக்கடி பார்வையிட்டது; இரண்டு மனிதர்களையும் கொன்றுவிட்டது. இதனால் மக்களுக்கு அச்சம் அதிகமாகிவிட்டது. இதனைக் கொல்வதே தக்கது என முடிவு செய்துவிட்டனர். இதனைத் துரத்தவும் தலைப்பட்டனர். செங்கத்திற்கு அருகில் உள்ள குயிலம் என்னும் ஊரருகே இவ்யானை சென்றது. அங்கே, கரியக் கவுண்டன் என்னும் அஞ்சா நெஞ்சமுடைய ஆடவன் தன் துப்பாக்கியால் அதனைச் சுட்டுவிட்டான். உடனே, அஃது இறந்துவிடவில்லை; அங்குமிங்கும் ஓடிற்று; பிறகு களைத்து நின்றது; அதுகண்ட மக்கள் உடனே அதைப் பிணித்துவிட்டனர்.



இது நிகழ்ந்தது 1886-ஆம் ஆண்டு, சூலை மாதம், 23-ம் நாளாகும்.

“அன்று முதல் நான்கு நாள் அவ்யானை உணவு ஒன்றும் கொள்ளாமலே இருந்து 27-ந்தேதி, குயிலம் கோபால் ரெட்டியார் நிலத்திலே* வீழ்ந்து இறந்து விட்டது. அங்கேயே அது புதைக்கப்பட்டது. சிறிது காலம் கழித்து, அரசாங்கத்தார் இதைச் சென்னைப் பொருட்காட்சிச் சாலைக்குக் கொண்டுபோயினர்........”

“இந்த யானை உருவத்தில் மிகப்பெரியது. சாதாரணமாக ஆண் யானைகள் ஒன்பதடி உயரமே எனினும், இது பதினோரடி உயரம் இருந்தது. இதனாற்றான் இதனைப் பொருட்காட்சிச் சாலையில் பலரும் காணவைக்கலாயினர்......உலகிலேயே பெரிய யானையென்று சொல்லப்படுவது கல்கத்தா பொருட்காட்சிச் சாலையில் உளது. அதன் உயரம் பதினோரடி மூன்றங்குலமே........யானையைச்சுட்ட கரிய கவுண்டனுக்குக் கண் தெரியாது போயிற்று. அவனது அருஞ்செயலை வியந்து அரசியலார் அவனுக்குப் பரிசுநல்கினர். அதனோடு மேலும் சிறிது தொகை செலவுசெய்து யானைவாகனம் ஒன்றுசெய்து, செங்கம் பெருமாள் கோவிலில் வைத்தான். அவனுக்கும் கண் தெரியலாயிற்று. அந்த வாகனம் 54 வருஷமாகியும் இன்னும் உபயோகத்தில் இருந்து வருகிறது.”

இச் செங்கண்மா, வடார்க்காடு ஜில்லாவில், செங்கம் என்னும் பெரிய தாலூகாவின் தலைநகரம் என முன்பே கூறினோம். இதனை இப்போது அனைவரும் செங்கம் என்றே வழங்குகின்றனர். இவ்வூரவர், இதனைச் செங்கமா என்றே கூறுகின்றனர். இதனைப்பற்றிய குறிப்பொன்று பண்டைத் தமிழிலக்கியங்களில் காணப்படுகிறது. இப்போதைக்கு ஆயிரத்தறுநூறியாண்டுகட்கு முன் நிலவிய சங்க இலக்கியங்களுள் பத்துப்பாட்டு என்பது ஒன்று. இதன்கண் உள்ள பத்தாம்பாட்டு மலைபடுகடாம் என்பது. இதற்குச் சிறந்த உரை ஒன்று மதுரை ஆசிரியர் நச்சினார்க்கினியர் என்பவரால் எழுதப்பெற்

*குயிலம்: புன்செய் சர்வே நெ. 17.

றிருக்கிறது. இவ்வுரையிறுதியில், "இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார், பல்குன்றக் கோட்டத்துச் செங்கண்மாத்து வேள் நன்னன்சேஎய் நன்னனைப்பாடிய மலைபடுகடாத்திற்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்த உரை முற்றிற்று" என்றொரு குறிப்புக்காணப்படுகிறது. இந்த நச்சினார்க்கினியர் எழுதிய உரைகளின் இறுதி தோறும் இத்தகைய குறிப்புக்கள் காணப்படுவதால், இக்குறிப்பு, நச்சினார்க்கினியர் தாமே எழுதியதென்பது உணரப்படும். இவரது காலத்தைப் பலர் பலவாறு கூறுகின்றனர். திரு. அனவரத விநாயகம் பிள்ளையவர்கள், "இவர் 9-ஆம் நூற்றாண்டினர்" *என்கின்றார். டாக்டர். திரு, கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள், "இவர் பதின்மூன்றாம் நூற்றாண்டினர்", ‡என்பர்; திரு. குப்புசாமி சாஸ்திரியவர்கள், "நச்சினார்க்கினியர் பதினான்காம் நூற்றாண்டினர்" †என்பர். இவ்வாறு இவரது காலம் ஒரு முடிபாகத் துணியப்படவில்லையாயினும், இவர், இற்றைக்குச் சிறிது ஏறக்குறைய அறுநூறல்லது எழுநூறு யாண்டுகட்கு முற்பட்டவரென்பதில் தடையில்லை. இக்காலத்தே இந்நகரைச் செங்கண்மா என்று இவர் குறிப்பைக்கண்ட அறிஞர் வழங்கி வந்தனர் என்பது துணிபாம்.

மலைபடுகடாம் என்னும் பாட்டிற் பாடப்பெறும் நன்னன்சேய் நன்னன் என்பவன், பல்குன்றக்கோட்டத்து இச்செங்கண்மாவில் இருந்தான் என்பதற்குச்சான்று ஒன்றும் நூலில் காணப்படவில்லை. வேறு தமிழ் நூல்களிலும் இதனை வற்புறுத்தும் குறிப்பு ஏதும் கிடைக்கவில்லை. இப்பாட்டிற் காணப்படும் வழக்காறுகள் சிலவும், நிலக்கூறுகளும், நவிரமலையும் இச் செங்கம் தாலுகாவில் இன்றும் காணப்படுகின்றன. இவ்வூரில் இருந்து கொண்டு நன்னன் என்பானொரு குறுநிலமன்னன் ஆட்சிபுரிந்தான் என்ற செய்தி இந்நாட்டுக் கல்லா மக்களிடையே வழங்கி வருகிறது. இவற்றால் இம்மலை படுகடாம் இவ்வூரைப்பற்றி நிற்கும் தொல்லைத் தமிழிலக்கியம் என்பது துணியப்படும்.

*Christian College Magazine XVII 1900. ‡Ancient India p. 352. †தமிழகம்: பகுதி 16.



இந்நகரத்தில் உள்ள கோயில்களில் பதினொரு கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவை பெரும்பாலும், "திரிபுவனச் சக்கரவர்த்திகளான வீரராசேந்திர சோழ தேவர்" காலத்தனவாகும்.* இவை யாவும் இவ்வூர்ச் சிவபெருமானை, "செங்கைமாவுடைய நாயனார் திருவிடபத்துறை நாயனார்" என்றே குறிப்பிடுகின்றன. திரிபுவனச் சக்கரவர்த்தி ஸ்ரீ வல்லபதேவ பாண்டியனது இருபத்தோராவது யாண்டுக் கல்வெட்டு‡ ஒன்றும், "மாறவர்மனான திரிபுவன சக்கரவர்த்தி பராக்கிரம பாண்டிய தேவனது ஆறாமாண்டின் கல்வெட்டு† ஒன்றும், திரிபுவன சக்கரவர்த்திகளான குலோத்துங்க சோழ தேவனது இருபதாமாண்டு கல்வெட்டு|| ஒன்றும் இதனைச் "செங்கைமா" என்றே கூறுகின்றன. திருவண்ணாமலையிலுள்ள, "கோப்பரகேசரிவன்மரான உடையார் ராசேந்திர சோழ தேவர்க்கு யாண்டு 18-ல்" எழுந்த கல்வெட்டொன்றில்,| இவ்வூர், "செங்கமா"! என்று பொறிக்கப்பெற்றுளது. வழக்கத்திலும் "செங்கமா" என்ற பெயரே நிலவுகிறதெனினும் இது 'செங்கைமா' என்பதன் திரிபு என்று கொள்வதே சிறப்பாகும். இக்கல்வெட்டுக்கள் யாவும் பதினான்காம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவை யல்லவாதலால், ஆசிரியர் நச்சினார்க்கினியர் காலத்தே இந்நகர், "செங்கைமா" என்றே வழங்கப்பெற்றதென்பது விளங்கும். மதுரையில் இருந்த சான்றோர் கேள்வி மாத்திரையால் அறிந்துரைத்த "செங்கண்மா" என்பதைவிட, அந்நகர்க்கட் காணப்படும் சான்றுகளால் உணரப்படும் "செங்கைமா" என்பதே வலிபெறுவதாம். பாண்டிமன்னர் குறிப்பினும் "செங்கைமா" எனப்படும் இதனை, அப்பாண்டிநாட்டுச் சான்றோர் அறிந்திருப்பர் என்பது பொருளாயின், செங்கைமா என்பது ஏடெழுதினோரால் செங்கண்மா எனப் பிழைபட எழுதப்பட்டிருத்தல்வேண்டும். ஏடுகளில் எழுத்துக்கள் புள்ளி பெறுவதில்லை. "செஙணமா" எனத் தொடக்கத்தே ஏடுகளிற் காணப்பெற்றிருக்கும். இதனைக் கண்டோர், இதன் உண்மைநிலை யறியாது "செங்கண்மா" எனத் திருத்திக்கொண்டனர். ஆதலால், இதனைச் செங்கைமா என்று கோடலே சிறப்பு. வரலாற்று நெறிக்கும் இயைந்ததாம்.

*105, 106, 108, 114 of 1900; ‡110 of 1900; †113 of 1900. ||115 of1900; | 478 of 1902.

இனி, இச்செங்கைமா, பல்குன்றக் கோட்டத்தில் உள்ளது எனப் பத்துப் பாட்டின் உரைக் குறிப்புக் கூறுகின்றது. பல்குன்றக்கோட்டம் என்பது தொண்டைநாட்டுக் கோட்டவகை இருபத்து நான்கினுள் ஒன்றாகும், இதனை இவ்வூர்க் கல்வெட்டுக்கள் "ஜயங்கொண்ட சோழமண்டலத்துத் தொண்டைநாடான பல்குன்றக் கோட்டத்துச் செங்கைமாவுடைய நாயனார் திருவிடபத்துறை நாயனார்" என்று கூறும் கூற்று வகையாலும் நாம் உணரலாம். உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியர் இருந்த காலம் ஒன்பதாம் நூற்றாண்டுக்குப் பின்னும், பதினான்காம் நூற்றாண்டுக்கு முன்னுமாகிய இடைப்பட்டதாகும் என்பது ஆராய்ச்சி முடிபு. இச்செங்கைமாத்திற் காணப்படும் கல்வெட்டுக்கள் பதினோராம் நூற்றாண்டு முதல் பதினான்காம் நூற்றாண்டின் இறுதிவரையிலுள்ள காலத்தனவாகும்.* இவை யாவும் இதனைப் பல்குன்றக் கோட்டத்துச் செங்கைமா என்றே கூறுகின்றனர். நன்னன்சேய் நன்னன் என்பது மட்டில் மலைபடுகடாத்தில் கூறப்படுகிறது. அவன் இருந்து ஆட்சிபுரிந்த இடம் இச் செங்கைமா என்றும், இது தொண்டைநாட்டுப் பல்குன்றக் கோட்டத்தில் உள்ளது என்றும் அறிந்துரைத்த இவர்க்கு, இதன் பெயர் செங்கைமா என்பது தெரியாதுபோதல்கூடாது. ஆதலால், ஆசிரியர் இதனைச் செங்கைமா என்றே குறித்திருப்பர்; ஏடெழுதினோர் செங்கண்மா எனப் பிழைபடத் திருத்திவிட்டனர் என்று கொள்வதே மீண்டும் வலியுறுகிறது.

இனி, இச் செங்கைமாத்திலிருந்து ஆட்சிபுரிந்த வேளிர்குல வேந்தன் நன்னன்சேய் நன்னன் என்பவனது கொடைநலத்தைப் பற்றி, மலைபடுகடாம் என்னும் பாட்டு அழகுறக் கூறுகின்றது. இந்தப் பாட்டு இற்றைக்கு 1400 யாண்டுகட்குமுன் எழுந்த‡தென்பது ஆராய்ச்சி முடிபு.

நன்னன்சேய் நன்னன் ஆண்டகாலத்தே, இச்செங்கைமாவும் இதனைச் சார்ந்துள்ள நாடும் இருந்த நிலை மலைபடுகடாத்தில் மிக்க

* Robert Sewell's his to of inscriptions p. 37 56, 57, 79 125. Nilakanda Sastri's Pandya Kingdom p. 122, I23, S. Krishnaswamy Iyengar's Ancient Iddia p. 153, 154. Inscriptions of the Madras Presidency vol. 1. p. 83 & 84.

‡ History of the Tamils p. 537.



இனிமையும் வனப்பும் தோன்றக் கூறப்பெற்றுள்ளன. இதன்கண் வியந்து கூறப்பெறும் நவிரமலை, இதனடியில் உள்ள கடலாடி, கோவில் மகாதேவமங்கலம் என்ற ஊர்களில் உள்ள கல்வெட்டுக்களால், பதினாறாம் நூற்றாண்டில் விஜயநகர மன்னர் ஆட்சி இந்நாட்டில் பரவியிருந்த காலத்தே இந்நாடு "ஜயங்கொண்ட சோழமண்டலத்துத் தொண்டைநாடான பல்குன்றக் கோட்டத்துப் பல்வரைப் பற்று" என்றும், இம்மலை "இராஜகம்பீரமலை" என்றும் அறியப்படுகின்றன.* இவற்றுள் சில பதினைந்தாம் நூற்றாண்டில் எழுந்தன. ஆகவே, ஆறாம் நூற்றாண்டுவரை நவிரமலையென வழங்கப்பெற்ற இம்மலை, பதினைந்து பதினாறாம் நூற்றாண்டுகளின் இராஜகம்பீரமலை என்றும், பின்னர்த் திரிசூலகிரி என்றும், இதுபோது பருவதமலை யென்றும் வழங்கப்படுகிறது. சவ்வாது மலையின் தென் பகுதியடியில் காணப்படும் கல்வெட்டுக்கள் அப்பகுதியை யுடைய நாட்டைப் பல்குன்றக் கோட்டத்து, பலவரைப் பற்று எனப் பகுத்தோதுவதை மறத்தற்கில்லை. செங்கைமாத்து ஏரிக்கரையில் காணப்படும் சிதைந்த கல்வெட்டு, "செந்திருக்கைக் கோட்டத்துப் பலவரைப்பற்று" என்று குறிப்பது, வேறொரு கல்வெட்டுப் பகுதியின் சிதைவு என்றே கொள்ளவேண்டியிருக்கிறது.

நன்னன் ஆண்டகாலத்தே இச்செங்கைமா அரணும் மதிலும் அழகிய கடைத்தெருவும் கொண்டு, புலவர், பாணர், பொருநர் என்ற பலரும் இடையறாது போக்கு வரவு புரியும் பெருநகராக விளங்கிற்று. இந்த நன்னனது முன்னோர் மிக்க வண்மையும், புலவர் பாடும் புகழும் பெற்று விளங்கினர். அவர்கள் மிக்க விறலும் வீரமும் உடையர். அவரைப் பகைத்தவர் தேயம் நெடுந் தொலைவில் இருப்பினும், பெரும் படையுடன், அஞ்சாது சென்று, அவர்தம் படைக் கடலைக் கலக்கி யழித்து, வென்றி மேம்படுவர். அன்றி யவர்கள் நன்றியறிதலில் குன்றாச் சிறப்புடையவர். தமக்குப் பகையாயினாரது பொருபடையிற் புகுந்து அவரை யடர்த்துக் கலக்கி வென்றி யெய்திவரும் தம் தானை வீரர்கட்கு வளவிய நாடும் ஊரும் நல்கித் தம் நன்றி யறிவு விளங்கச் செய்தவர். இவர்கள் வாழ்ந்த

*Inscriptions of N. Arcot 373, 374, 375.

நாடு மிக்க களிற்று வளமுடையது.* களிறுகளும், வன்மையும் சூழ்ச்சியும் நன்கு வாய்ந்தவை. அவற்றை வெல்வது மிக்க வீரமும் வன்மையுமுடையார்க்கே இயல்வதாம். அதனை இவர்கள் நன்றாக அறிந்தவராதலால், "வெல்களிறு வென்ற வேல்கெழு புலவர்க்கு யானைகளையே வரிசையாகப் பெரிதும் நல்கினர்" என மலைபடுகடாம் கூறுகின்றது.

நன்னன்காலத்தே இந்தச் செங்கைமாத்தைச் சுற்றி ஆழ்ந்த அகழியிருந்தது. அது கற்களை ஆழமாகக் கல்லி யமைத்து நீர் நிரம்பப் பெற்றிருந்தது. அதன்கண் எப்போதும் முதலைகள் இரை தேர்வது குறித்துத் திரிந்தவண்ணமிருக்கும். அகழிக் கரையில் நின்ற அரண் சுவர் வானளாவ உயர்ந்து மலைபோல் விளங்கிற்று. இதன் சிறப்பு தமிழ்நாடு முற்றும் பரவியிருந்தது.

இனி, சங்கநூற் பயிற்சியுடையவர்க்கு, நன்னன் என்கின்ற போது "பெண் கொலைபுரிந்த நன்னன்" ஒருவன் பெயர் நினைவிற்கு வரும். ஒருகாலத்தே இந்த நன்னன் தான் ஓம்பிய மாமரத்திலிருந்து வீழ்ந்த மாங்கனியொன்று நீரில் மிதந்து செல்ல, அதனை பெண்ணொருத்தி அறியாது உண்டாளாக, அவன் அவளைக் கொலை புரிந்துவிட்டான் என ஆசிரியர் பரணர் கூறுகின்றார்.‡ இச்செய்தி பின்னர் இவனது குலத்தவர்க்கே பெரும் பழியைச் செய்துவிட்டது. புலவர்கள் இவன் மரபினரைப் பாடுதல் செய்யாராயினர். பெருந்தலைச்சாத்தனார் என்னும் சான்றோர் ஒருவர் இளங்கண்டீரக்கோ, இளவிச்சிக்கோ என்னும் அரசகுமாரர் இருவரைக் கண்டனர். அவருள் விச்சிக்கோ நன்னன் மரபிற் பிறந்தவன். அதனை யறிந்திருந்த அச்சான்றோர், கண்டீரக்கோவை அன்புறத் தழுவிக்கொண்டதோடு, விச்சிக்கோவை "நீ நன்னன் மருகன்"† என்று கூறி இகழ்ந்தனர்.

நமது செங்கைமாத்து நன்னன்சேய் நன்னன் அவன்மரபினனே என்று எண்ணுதற்கில்லை. அந்த மரபினனாயின், இவனை மலைபடு

*Major H. Bevan's Thirty years in India. Vol. 1. 292. †புறம் 151. ‡குறுந்.



கடாம்பாடிய பெருங்கௌசிகனார் பாடியிரார்; இவனது முன்னோரையும் சிறப்பித்துரையார்.

"இகந்தன வாயினும் தெவ்வர் தேஎம்
நுகம் படக் கடந்து நூழி லாட்டிப்
புரைத் தோல் வரைப்பின் வேல்நிழற் புலவோர்க்குக்
கொடைக் கடன் இறுத்த அவன் தொல்லோர்" *

என்று நன்னனது முன்னோரைச் சிறப்பித்துள்ளார். நன்னனது சிறப்பைக் கூறப்புகுந்த பெருங்கௌசிகனார் பின் வருமாறு கூறுகின்றார்.‡

"நன்னன் அழகாகப் புனைந்த மாலையணிந்த மார்பையுடையவன்; அம்மாலையின் மலர் அனைத்தும் புதியவையாதலால், அதனை வண்டினம் மொய்த்து விளங்கும். அவன் மங்கையர் பலர்க்குக் கணவன்; அவர்கள் மூங்கில்போலத் திரண்ட தோளையுடையர்; அவரது கண்கள் மிக்க குளிர்ச்சி பொருந்தியன. அவன் தன்னைப் பகைத்தவர் நாட்டைப் பாழ்படுக்கும் திறலுடையவன். அதனால், அவன் வலிகண்ட பகைமன்னர் அவனைக் குறுகுதற்கு அஞ்சுவர். வேந்தரது புகழைப்பாடிப் பரிசில் பெறும் வாழ்வினரான கூத்தர், பாணர், புலவர் முதலிய பலர்க்கும் வரையாது வழங்கும் வள்ளலாதலால், அவனைப் 'புதுநிறைவந்த புனலஞ்சாயல்' உடையவன் என்பர். அவன் மனநலமும் வில்நலமும் பெற்று புலவர் புகழும் வீறு கொண்டு விளங்கினான். மாலையணிந்து வயங்கும் அவன் மார்பு பேரணிகலம் தாங்கிப் பீடுஎய்தியிருந்தது. அதனால், அவன்,

"மதிமா றோரா நன்றுணர் சூழ்ச்சி
வின்னவில் தடக்கை மேவரு பெரும்பூண்
நன்னன் சேய் நன்னன்."

என்று பாராட்டப்படுகின்றான்.

இச் செங்கைமா பல்குன்றக் கோட்டத்தைச் சேர்ந்ததென முன்னரே கூறியுள்ளோம். இதன் மேற்கெல்லை; கொங்கு நாடாகும்.

*மலைபடு 86-9. ‡மலைபடு 62-4.

கொங்கு நாட்டின் கீழ்க்கோடியும், தொண்டை நாட்டின் மேலைக்கோடியும் ஒன்றுபடும் இடம் செங்கைமா கணவாய் எனப்படும். இதனால், சவ்வாது மலைத்தொடரும், கல்ராயன் மலைத்தொடரும், பிரிக்கப்பெறுகின்றன. தொண்டைநாட்டிற்கும் கொங்கு நாட்டிற்கும் நடைபெறும் போக்குவரவு இச்செங்கை மாத்தின் வழியே தான் நடைபெறுகின்றன. பாராமகால் எனப்படும் கொங்கு நாட்டின் கீழ்ப்பக்கத்திருந்த வேந்தர் பலரும் இவ்வூர் வழியாகவே தொண்டைநாட்டிற்குட் புகுந்திருக்கின்றனர். பதினெட்டுப் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் நடந்த மைசூர்ப்போர் நிகழ்ச்சிகளுட் சில இவ்வூரிலே நடந்திருக்கின்றன. பதின்மூன்று பதினான்காம் நூற்றாண்டுகளில் நாயக்க மன்னர்களுக்கும், சோழ சம்புவராய வேந்தர்களுக்கும் நிகழ்ந்த போர்நிகழ்ச்சிகளுட் சில இங்கே நடந்திருக்கின்றன. இவ்வாற்றால், இச் செங்கைமாநாடு கொங்கு நாட்டவர்க்கு மிகப்பழைய காலத்தேயே தெரிந்தும் இருக்கையாக இருந்தும் பயன்பட்டு வந்திருக்கிறது என்பது உணரப்படும்.

இந்த இயைபைக்கொண்டு நோக்கின், நன்னன்சேய் நன்னனது முன்னோரும் கொங்குநாட்டிலிருந்து போந்தவர் என்பது தெரிகிறது. இந்த நன்னன், “நோனாச்செருவின் வலம்படு நோன்றாள், மான விறல் வேள்” *என்றும், “வண்டுபடக் கமழும் தேம்பாய் கண்ணித் திண்டேர் நன்னன்” ‡என்றும், “வெல்போர்ச்சேய்” † என்னும் மலைபடுகடாத்தில் கூறப்படுகின்றான். இதனால், இவன் வேளிர் குலத்தவன், என்றும், அக்குலத்திற் பிறந்தானொரு நன்னனது வழித்தோன்றல் என்றும், சேய் என்பது இவனது இயற்பெயர் என்றும் அறிகின்றோம். ஏனைத்தொகை நூல்களிலும் வேளிர்குலத்து நன்னன் என்பான் ஒருவன் பாராட்டப்படுகின்றான். அவன், “நன்னன் வேண்மான்” ||எனவும், “நன்னன் உதியன்” |எனவும், “பொன்படு கொண்கான நன்னன்” $எனவும் கூறப்படுகின்றான், படவே, அவன் வேளிர்குலத்தில் தோன்றி சேரவேந்தரின்கீழ் ஒரு குறுநில மன்னனாய் வாழ்ந்தவன் என்று அறிகின்றோம். தொடக்கத்தே, அவன் கொண்கான நாட்டின் மேலைப்பகுதியிலுள்ள (மலையாள ஜில்லாவிலுள்ள) ஏழில் மலையை இடமாகக் கொண்டதொரு பகுதியில் இருந்து ஆட்சிபுரிந்து வந்தான். சேரநாடு ஒருகாலத்தே கொங்கு நாட்டையும், மைசூர் நாட்டின் தென்பகுதியையும் தன்னகத்தே கொண்டிருந்தது. பின்னர் அது குடவரை நாடு (குடநாடு), கொண்கான நாடு, எனப் பிரிந்திருந்தது; குடவரை நாடு மட்டில் சேரராகிய முடியுடை வேந்தர் ஆட்சியின்கீழ் இருந்தது, கொண்கானநாடு ஒருகாலைக்கொருகால் அவர் ஆட்சியின்கீழ்ப் படுவதும், படாது ஒழிவதுமாக இருந்தது. மைசூர் நாட்டின் தென்பகுதியில் புன்னாடு என்றொருநாடு இருந்தது. அது சேரமன்னரின்கீழ் இருந்து ஆட்சிசெய்த குறுநில வேந்தர் வசம் இருந்து வந்தது. நன்னன், கொண்கான நாட்டின் மேற்கில் குடவரை நாட்டின் அருகில், “நன்னன் உதியன்” என நல்லோர் பரவ வாழ்ந்து வந்தான்.

*மலைபடு 163-4. ‡மலைபடு 467-7. †மலைபடு 493. ||அகம் 97. அகம் 258. $ நற். 391.



வருகையில், நன்னன், வேளிர் பலரது துணைகொண்டு, அவரது பொன்னும் பொருளும் தன்பால் வைத்து ஓம்பி அவரது பெருநட்பினைக்கொண்டு பெருமையொடு வாழ்ந்தான். அவன்பால் மிஞிலியென்று ஒரு தானைத்தலைவன் புலவர் பாடும் புகழ்பெற்று விளங்கினான். நன்னனுக்குத் தன்பால் கிடந்த பொருட்பெருக்காலும், தானைத்தலைவனது துணைமைச் செருக்காலும் நாடு கவரும் நயப்பு உண்டாயிற்று. அவன் நாட்டிற்கு வடக்கிருந்த புன்னாட்டைக் கைப்பற்ற எண்ணி மிஞிலியைப் பெரும் படைகொண்டு செல்லவிடுத்தான் அப்புன்னாடு அதுபோது ஆய்எயினன் என்பானது காவலில் இருந்தது. மிஞிலியின் படைத்திறத்துக்கு ஆற்றாத எயினன், பாழிஎன்னும் நகர்க்கண் தங்கி, மக்கட்கு அச்சமின்மை கூறித்தெருட்டியிருக்கையில், மிஞிலி, அவனைப் பாழிப்பறந்தலையில் கொன்று அப்பாழி நகரைக்கைப்பற்றினான். பின்பு, பாழியை மிஞிலிக்கே நல்கி, நன்னன் புகழ்மிக்கு விளங்குவானாயினன்.

பாழியிற்பட்ட ஆஅய்எயினன் நன்னனுக்கு நெருங்கிய உறவினன் என்று நினைத்தற்கும் இடமுண்டு. எயினன் போரிற் பட்ட

போது, அவன்மீது வெயில் படாவாறு பறவைகள் சிறகை விரித்து நிழல் செய்தன. அதுகண்டோர் அனைவரும் வியந்து பாராட்ட, நன்னன் அதனைக்காணப் பொறாது நாணி, தன் இருக்கைக்கண்ணே ஒடுங்கியிருந்தான். என்று ஆசிரியர் பரணர்* கூறுகின்றார். இவ்வண்ணம் மாவும் புள்ளும் மனங்களிக்க ஆட்சி புரிந்த ஆண்டகை தன்மரபினனாவது குறித்து, பெருமிதம் கொள்ளாது, அப்பெற்றியனாகிய தன் இனத்தவனைக்கோறலால் பிறக்கும் கொடுமைக்கு நாணினான் இந்நன்னன் என்பதை நினைக்கும்போது இவ்வாறு கொள்ள இடமுண்டாகிறது.

இனி, நன்னன் புன்னாட்டைக்கடிந்து புகழ்பட வாழ்ந்து வருகையில், இவனுக்கும் கோசர் என்னும் ஒருவகை வீரர்க்கும் பகைமையுண்டாயிற்று. இவன் மாமரமொன்றைக் காவல் மரமாகக்கொண்டு தன்னாட்டை இனிது ஆண்டு வந்தான். இவன்தன் பிறந்த நாள் விழா பெருமையுறக் கொண்டாடியதாக மதுரைக்காஞ்சி கூறுகிறது. ஒருகால் அம்மதுரைக்காஞ்சி குறிக்கும் நன்னன் வேறொருவனாகவும் கூடுமென ஆராய்ச்சியாளர் கருதுவர். பகைமை மிகுவதால், கோசர்கள் பெரும்படையுடன் புகுந்து நன்னனது காவல்மரத்தைத்தடிந்து, இவனை நாட்டினின்றும் காடுமண்டிய நாடாகிய கொங்கு நாட்டிற்குத் துரத்தி விட்டனர்.‡ அதுமுதல் நன்னனது வலியும் குறைவதாயிற்று.

கொங்கு நாட்டிற்புகுந்த நன்னன் காடு கெடுத்து நாடாக்கி, தக்க இருக்கையும் காவலும் கொண்டு செவ்வே அரசு செலுத்துவானாயினன். இதற்கிடையே இவன் புகழ் மிகுதி கண்டு பொறாமையுற்ற பகை வேந்தர் பலரது பகைமை மிகுந்து இவனை அலைக்கத் தொடங்கிற்று. அக்காலத்தே இவனது இருக்கை, புதுவதின் இயன்ற அரணும் படையும், கொண்டிருந்தது. அதனால், பகைவரது போர்ச்செயற்கு இவனது இருக்கையும் படையும் ஆற்றாவாயின. ஆயினும், இவன் பிடித்த வேல்பற்றிப் பெருவீரம் தோன்றப்போருடற்றித் "தோற்றம் பிழையாத் தொல்புகழ்" பெற்று விளக்கமெய்தினான்.

* அகம் 208. ‡ குறுந். 73.



கோசர்க்குத் தோற்றுக் கொங்குநாடு புகுந்தும், வென்றியும் புகழும் மிகப் பெற்றுத் திகழும் நன்னன் சிறப்பு அக்காலத்தே சேர நாட்டையாண்ட களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலுக்கு எட்டியது. அவன், தனக்கு உரிய கிழமை பூண்ட ஆஅய் எயினனை, இந்த நன்னன் அழித்தொழித்த நாள் தொட்டே, பகைமை கொண்டு காலம் கருதியிருந்தான். நன்னன், படையும் வன்மையும் குன்றியிருக்கும் இக்காலத்தைப் பயன் கொள்ளக் கருதிய சேரமான், பெரும்படையுடன் போந்து நன்னனை எதிர்த்துப் பொருதான். அப்போரில் சென்றவிடமெங்கும் சிறப்பும் வென்றியும் சேரப் பெற்றுப் போந்த நம் நன்னன், படையிழந்து, கொலையுண்டு இறந்தான். அதன் பயனாக, இவனது மரபினர், கொங்குநாட்டின் கீழ்த்திசையில், மலையும் காடும் மிக மிடைந்து, இயல்பாகவே பெருங்காவலமைந்து சிறந்து கிடக்கும் இச்செங்கமாவை யடைந்து, இதனைத் தமக்கு ஏம இருக்கையாகக் கொண்டு, பிறப்புக் கடனாகிய ஆட்சிபுரிந்து வரலாயினர்.

தொன்முதுவேளிர் துணையினையும், தோற்றம் பிழையாத் தொல்புகழினையும் பெற்று, பகையரசர் பலர் பொருத வழியும் ஊக்கம் அழியாது ஓங்கிய நன்னன், தன் பிறப்புரிமையாகிய ஆட்சியுரிமையைச் சென்றவிடத்தெல்லாம் நிலைநாட்டிய சிறப்புடையவனாதலால், இவன் வழிவந்து, ஆசிரியர் பெருங் கௌசிகனார் என்னும் நல்லிசைச் சான்றோரால் பாடப்பெறும் நற்பேறு பெற்ற நன்னன் என்பான், "நன்னன்சேய் நன்னன்" என்று சிறப்பிக்கப்படுவானாயினன். சேய் நன்னனது முன்னோனாகிய நன்னன் புன்னாடு கடிந்து புகழ் பெற்றதையும், கானமர் நாட்டில் கவின்கொள்ளத் தங்கிச் சிறப்புற்றிருந்ததையும், மிஞிலி முதலிய "வேல்நிழற் புலவர்"கட்குப் போரிற் கைப்பற்றிய பாழி முதலிய நகரங்களைக் கொடுத்துக் கொடைக்கடன் இறுத்த வாய்மையினையும் உட்கொண்டே, மலைபடுகடாம், இவனது தொல்லோர் சிறப்பை,

"இகந்தன வாயினும் தெவ்வர் தேஎம்
நுகம்படக் கடந்து நூழி லாட்டிப்

புரைத்தோல் வரைப்பின் வேல்நிழற் புலவர்க்குக்
கொடைக்கடன் இறுத்த அவன் தொல்லோர்"

என்று சிறப்பிப்பதாயிற்று.

இன்ன சிறப்பமைந்த இச்செங்கைமா, இடைக்காலத்தே சோழ பாண்டிய நாயக்க மன்னர்களின் போர் நிகழ்ச்சிக்கும்,* ஹைதர் ஆங்கிலேயர் முதலியோரது போர் நிகழ்ச்சிக்கும்‡ இடனாகிப் பல வகையிலும் சீர்குலைந்து, வளம் குன்றி, செம்மைப் பண்பிழந்து சிதலமாகிக் கிடக்கின்றது. செங்கைமா என்னும் சீரிய பெயர் போய்விட்டது; செங்கம், செங்கண்மா என்ற சிதை பெயர் எய்தியுள்ளது. பழமை நலம் படைத்த இவ்வூர், கல்வி, செல்வம், நாகரீகம் என்பனவற்றால் புதுமைநலம் படைத்து மேம்படும் ஏனைப் பேரூர்களைப்போல் ஏற்றமிகும் நாள் எந்நாளோ என இதன் பழைய நலங்களை நினைப்போர் எண்ணி ஏக்கமுறுகின்றனர். இவர்தம் ஏக்கம் கெடவும், இச்செங்கைமா பண்டைப் பெருநலம் பெறவும் பெரியோர் பெருமையும் முயற்சியும் பெரிதெழுந்து பிறங்குமாக.

*கி. பி. 1198-1200; கி. பி. 1396. ‡முதல் மைசூர் யுத்தம் 1767 செப்டம்பர் 1, 3. மூன்றாவது மைசூர் யுத்தம் அக்டோபர் 1791.

# அன்றும் இன்றும்

(V. ஞானதிக்கம் B.A., L.T.,
தலைமை ஆசிரியர் ஆண்டர்சன் உயர்நிலைப் பள்ளி, காஞ்சி.)

காலச்சக்கரம் வெகு வேகமாகச் சுழன்று வருகின்றது. நேற்று இளைஞனாயிருந்தவன் இன்று நரைத்துத் திரைத்த கிழவனாகத் தோன்றுகிறான். அந்தத் தொண்டு கிழவனுடைய உலகானுபவத்தைச் சொல்ல நேரிட்டால் தற்கால நவநாகரீகத்தில் உள்ளவர்கள் அதைக்குறித்து என்னதான் நினைப்பார்களோ நாம் அறியோம்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இருந்த மனித வாழ்க்கைக்கும், தற்போதுள்ள வாழ்க்கைக்கும் உள்ள மாறுபாடு மலைக்கும் மடுவுக்கும் போன்றதாகும். சில சாதாரணமானவற்றைக் கொண்டே இவற்றைத் தெளிவு படுத்தலாம். 'சுத்தம் சோறு போடும்' என்பது முதியோர் வாக்கு. நமது முன்னோர்களின் சுத்தம் என்ன? தற்கால சுத்தம் என்ன? முற்காலத்தைச் சுத்தசகாப்தம் என்னலாம். ஆனால் தற்காலத்தையோ காப்பிக்கடை சுத்தசகாப்தம் என்றே சொல்லவேண்டும். பண்டைக்காலத்தில் காலையில் எழுந்து நீராடி, பழையது என்னும் உணவு உண்டு வேலைக்குப் போவார்கள். இப்பொழுதோ, தொழிலுக்குப்போவதற்குமுன் காப்பிக்கடைக்குட் போய் சியக்காய்த்தூள் கலந்த காப்பியைக்குடித்து நிற்கிறார்கள். பலர் கடித்துக்குடிக்கும் பாத்திரத்தை யாதொரு சங்கோசமின்றி, உல்லாசமாக வாயில் வைத்துப் பருகுகின்றார்கள். ஐம்பது ஆண்டுகளுக்குமுன் ஆடவர் தலைப்பாகை தரித்துக்கொண்டிருந்தார்கள். தற்போது தொப்பியைத் தரிக்கிறார்கள். ஆண்களும் பெண்களும் தலைமயிரைக் கத்தரித்துச் சிங்காரமாக வாரிக்கொண்டு வாசனை கலந்த எண்ணெயைப் போட்டுக் கொள்ளுகிறார்கள். சோப்பும், வாசனைத்தூளும், கைக்குட்டையும் இல்லாவிடின் ஆடவரும், பெண்டிரும் ஔவைப்பாட்டி இனத்தில் சேர்த்து கர்நாடகம் என்று கூறப்

படுவார்கள். காலையில் எழுந்தவுடன் சோப்பு தேய்த்து, முகம் கழுவி, பவுடர் பூசி, உல்லாச உடை உடுத்து, நாற்காலியில் சாய்ந்திருந்து பணியாளனைக் 'காப்பி செய்துகொண்டுவா' என்று கட்டளை பிறப்பிப்பது, தற்காலப் பெண்டிரது முதல் வேலையாக இருக்கிறது.

இனி, மணநிலை பற்றி நோக்குவாம். சுயம்வர காலத்திற்குப் பிறகு ஒரு நங்கைக்குத் தக்க கணவனைத் தெரிந்தெடுப்பது பெற்றோரின் கடமையாயிருந்தது. இந்தப் புதுகாலத்தில் தரகர்களும் பங்கெடுக்கிறார்கள். தற்காலத்தில் பெற்றோரின் பொறுப்பு இதுபற்றி அதிகம் இல்லையென்றே சொல்லலாம். கட்டுரைகளில் படிக்கிறபடி 'கண்டதும் காதல்' என்ற கொள்கை தலைவிரித்தாடுகிறது. ஆனால், அக்காலத்தில் இருந்ததுபோல் இக்காலத்தில் பாட்டிகளின்தொல்லை மணவாழ்க்கையில் இல்லையென்றே சொல்லலாம்.

ஐம்பது ஆண்டுகளுக்குமுன் துவிச்சக்கர வண்டிகள் மிகக் குறைவாக இருந்தன. இப்பொழுது கற்றோரும், கல்லாதாரும், நகரவாசிகளும், நாட்டுமக்களும் அவைகளை உபயோகிக்கிறார்கள். முன்னே நடந்து சென்றவர்கள் இப்பொழுது வாகனங்களில் செல்கிறார்கள். மாட்டுவண்டி போய் குதிரை வண்டி வந்தது; குதிரை வண்டிபோய் துவிச்சக்கர வண்டி வந்தது; இதற்குப்பின் மோட்டார் முதலிய உண்டாயின. தற்போது விதவிதமான மோட்டார்கார்கள் உபயோகப்படுகின்றன. பட்டினங்களில் மோட்டார் பஸ்கள் தெருக்களின் வழியாய்ப் பறந்து செல்லுகின்றன. இவையேற்பட்டதற்குச் சாதகமாக மணல் பாதைகள் சரல் போட்டனவாயும், சரல் போட்டவை கல் போட்டனவாயும், பிறகு தார், சிமிட்டி முதலியன போட்ட சாலைகளாயும் மாறி வந்திருக்கின்றதை நாம் கண் கூடாகக் காண்கின்றோம். இத்தகைய உலகமாறுதல்களெல்லாம், கம்பளிப்பூச்சி வண்ணாத்திப் பூச்சியாவதற்குள் மாறும் பல பருவங்களை ஒத்திருக்கின்றன.

சென்ற அரைநூற்றாண்டில் உண்டாயிருக்கின்ற கல்வி வளர்ச்சியை என்னென்று சொல்வது. குருகுலங்கள் பல மாறுதல்கள் அடைந்து குரு சிஷ சம்பந்தம் அடியோடு மறைந்து விட்டது.



ஆரம்பக்கல்வியென்றும், உயர்தரக்கல்வியென்றும், கலாசாலைக் கல்வியென்றும், தொழிற்கல்வி யென்றும் பல பாகுபாடுகள் காணப்படுகின்றன. பல்லாண்டுகளுக்குமுன் அநேக கிராமங்களில் பள்ளிக்கூடம் இருக்கிறதே இல்லை. இப்போது பெருவாரியான கிராமங்களில் ஆரம்பப்பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மேலும் கட்டாய ஆரம்பக்கல்வி ஏற்படுத்தப்பட்டிருக்கும் பட்டினங்களில் ஏராளமான பள்ளிக்கூடங்கள் வைத்து நடத்தப்படுகின்றன. பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் பெண்களின் எண்ணிக்கை வளர்ச்சியுற்ற போதிலும் பொதுவாகப் பெண்கல்வி அபிவிருத்தி அடையவில்லை என்பது திண்ணம். ஆனால் உயர்தரக்கல்வியில் பெண்கள் ஒரு சிறிது முன்னேற்ற மடைந்திருக்கிறார்கள். பட்டமளிப்பு விழாக் காலத்தே சில ஆண்டுகளுக்குமுன் செனெட் மண்டபத்தில் பெண் பாலரைப் பார்ப்பது அத்திபூத்தாற்போல் இருந்தது. தற்போது அப்பட்டமளிப்பு விழாவில் பட்டங்களைப் பெறுதற்கென மலையாளம், தமிழ், தெலுங்கு முதலிய நாட்டுப்பெண்கள், தம் தம் தேச ஆசாரத்துக்கு ஏற்றவகையில் உடை உடுத்து, அணி அணிந்து, அவைகளுக்கு மேலாகப்பட்டங்கள் பெறுதற்கு அறிகுறியான மேல் உடையும் உடுத்து ஏராளமாகக் கூடுகின்றார்கள். பல ஆடவர்களின் மத்தியில் இவர்கள் இலங்குவது அப்பட்டமளிப்பு விழாவிற்குத் தனிச் சிறப்பைக் கொடுக்கிறது.

தற்காலத்தில் முதியோர் கல்வி யென்ற முழக்கம் அதிகமாய்க் கிளம்புகின்றது. எழுத வாசிக்கத் தெரிந்தவருக்கு வாக்குரிமை உண்டென்ற காரணத்தால் வயோதிகர்களும் கல்விகற்க விரும்புகிறார்கள். இவர்களுக்குச் சுலபமாய்க் கல்வி கற்பிக்கப் புதுமுறைகளும் கண்டு பிடிக்கப்படுகின்றன. தற்காலம் தமிழ் மாத்திரம் தெரிந்தவர்கள் தங்கள் பேச்சில் ஆங்கிலத்தைக் கலந்தே பேசுகிறார்கள்.

ஸ்டேஷனுக்குப் போகிறேன், கேட்வாசல், நாளை ஈரங்கி, கோர்ட்டுக்குப் போகிறேன், பிளேட்டைக்கழுவு, காமராவை லாக் பண்ணு, பீச்சுக்கு கோச்சில் போகலாம் என்பன சில உதாரணங்களாகும்.

நாம் மேலே காட்டியபடி பெண்களும் ஆண்களைப்போலவே கல்வியில் முன்னேறுவதோடு, பிற எல்லாத்துறைகளிலும் ஆண்களோடு போட்டியிடுகின்றனர். இதனால் இப்போதிருக்கிற வேலை இல்லாத்திண்டாட்டம் அதிகரிக்குமோ என்ற கவலை எழுகிறது.

நிற்க, விஞ்ஞான விருத்தியைப்பற்றி எழுதினால் எவ்வளவோ விரியும். மானிட வாழ்க்கையில் மின்சார உற்பத்தியினால் உண்டாகும் மாறுதல்களை ஆயிரம் நா படைத்த ஆதி சேடனாலும் சொல்ல முடியாது. முன்னே விளக்கெண்ணெய் விளக்கு, இப்போது மின்சார விளக்கு; முன்னே ஓலை அல்லது மட்டி விசிறி, இப்போது மின்சார விசிறி; முன்னே விறகு அல்லது கரி அடுப்பு, இப்பொழுது மின்சார அடுப்பு; வண்ணார்களும், நாவிதர்களும் மின்சாரத்தைத் தங்கள் தங்கள் தொழில்களில் உபயோகிக்கிறார்கள். சமைத்த பதார்த்தங்களைச் சீதோஷ்ண நிலைகளில் கெட்டுப்போகாமல் பாதுகாக்கச் சீதள பெட்டிகள் மின்சாரத்தின் உதவியினால் அமைக்கப்படுகின்றன. முன்னே விசித்திர ஒளிப்படங்கள்; இப்போது அசையும் படங்கள்; பிறகு பேசும் படங்கள், முன்னே மண் வெட்டிக் கொண்டு கொத்தி, ஏர் உழுது நிலத்தைப் பண்படுத்தி விவசாயிகள் தானியங்களை உற்பத்தி செய்தார்கள். இப்போது மின்சாரத்தின் உதவியால் இவை சுலபமாகச் செய்யப்படுகின்றன.

தற்காலத்தில் ஆகாயவாணி எவ்வித மாறுதல் உண்டாக்கியிருக்கின்றது என்பது வெள்ளிடை மலைபோல் விளங்குகின்றது. உலக சமாசாரங்கள் எவ்வளவு சீக்கிரத்தில் கண்ணை மூடித் திறப்பதற்குள் ஆயிரமாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள இடங்களிலிருந்து தெரிவிக்கப்படுகின்றன. இருவர்முக முகமாய்ச் சந்தித்துப் பேசுவது போல், இலண்டன் பட்டினத்தில் உள்ள நண்பருடன், இந்தியாவின் முக்கிய பட்டினங்களிலிருந்து பேசும்படியான சாதனம் (Trunk Telephone) ஏற்பட்டுள்ளது. பேசுகிறவனுடைய சத்தத்தைக் கேட்கிறது மாத்திரமல்ல, அவன் முகத்தையும் பார்க்கும்படியான முறையும் (Television) ஏற்பட்டிருக்கிறது. இது விந்தையினும் விந்தையே.



மனிதன் தரையில் நடமாடப்பலவித வாகனங்களை ஏற்படுத்திக் கொண்டான். இவைகளில் பல மாடு, குதிரை, ஒட்டை, யானை முதலியவைகளின் உதவியைக் கொண்டே நடத்தப்படுகின்றன. நடத்தப்பட்டும் வந்தன. நீராவியின் உதவியால் வண்டிகள் ஓட்டப்படுகின்றன. இயக்கத்திற்கு நிலக்கரி, எண்ணெய் முதலியவை உபயோகப்பட்டு வந்தன. இப்பொழுது மின்சார இயக்கம் ஏற்பட்டிருக்கிறது. மின்சாரத்தினால் முலாம் (Gilding) பூசப்படுகிறது. மின்சாரத்தின் உபயோகத்தை அளவிடக்கூடுமோ? ஆனால் கடவுள் மனிதனுக்குக் கொடுத்த அறிவையும், புத்தியையும் உபயோகித்து மின்சாரத்தைத் தனக்கு ஊழியம் செய்யும் அடிமையாக்கிக் கொண்டதுமன்றி, அதையே தன் அயலானுடைய அழிவுக்கே சாதனமாக உபயோகிக்கிறான். ஒருநொடியில் கப்பல்களையும், நாடுநகரங்களையும், மக்களையும் இவைகளைக்கொண்டு நாசமாக்குகின்றான். மின்சாரத்தின் உதவியால், உயிரையே யமன்போல் திடீரெனக் கொண்டுசெல்லும் கருவிகளை உற்பத்தி செய்கிறான். ஆக்கத் தொழிலுக்குப் பதிலாக அழிக்கும் தொழிலில் மனிதனது கெட்ட எண்ணம் செல்வதால் மின்சாரம் இன்று குரங்கின்கைக் கொள்ளிபோல் இருக்கின்றது. விஞ்ஞான வளர்ச்சி உலகிற்கு நன்மை பயப்பதற்குப் பதிலாகத் தீமையே அளிக்கிறது. நம்முன்னோர்கள் கனவிலும் நினைத்தற்கரிய பெரிய ஆச்சரியப்படத்தக்க செயல்கள் இன்று நடைபெறுகின்றன.

நிற்க, சில ஆண்டுகளுக்குமுன் ஏழைகள் மார்வாடிகளிடமோ, பணக்காரரிடமோ அடைந்த இன்னல்கள் எவ்வளவு. தற்காலம் ஏழைகள் மலைப்பாம்பு போன்ற வட்டிக்கடைக்காரர்களிடமிருந்து மீட்கப்படுவதற்காக எவ்வளவோ முறைகள் ஏற்பட்டிருக்கின்றன. கூட்டுறவு சங்கமென்ன! ஐக்கிய நாணய சங்கமென்ன! நில அடமான பாங்கிகளென்ன! சிக்கன நிதிகளென்ன! இன்னும் இது போன்ற வசதிகள் பல.

மேலேகூறிய இவைகளில் மாத்திரமன்றி விளையாட்டு, வாழ்க்கை அமைப்பு முதலிய பலவற்றிலும் அன்றைக்கும் இன்றைக்கும் ஏற்

பட்ட மாறுதல்களோ பலப்பல: எனினும் மனிதன் தன்சுய உணர்வோடு, 'தன் உயிரைப்போல் மன்னுயிரை நேசிக்கும்' மனப்பான்மை அற்றவனாகவே காணப்படுகின்றான். முன்பு மேலே காட்டியபடி ஆக்கத்திற்கு உபயோகிக்க வேண்டிய பொருளெல்லாம் அழிவுக்குப் பயன்படுகின்றன. ஈண்டு 'மனிதன் பறவைபோல் பறக்கவும், மீன் போல் நீந்தவும், பாம்பு போல் ஊர்ந்து செல்லவும் பழகினான். ஆனால் மனிதனாக மட்டும் வாழக்கற்றுக் கொள்ளவில்லை' என்று ஒரு பெரியார் கூறியது நினைவிற்கு வருகின்றது. ஆகவே எத்தனை விஞ்ஞான வளர்ச்சிகள் எந்தெந்த முறையில் வளர நேரிடினும், மனிதன் தன் நல் உணர்வோடு வாழ்ந்தாலன்றிப் பயனில்லை. ஆகவே மக்களினம் நல் உணர்வுபெற்று, 'தாம் பெற்றபேறு பெறுக இவ்வையகம்' என்ற கொள்கையை உடன்கொண்டு சிறக்க வாழ்ந்து ஓங்குவதாக.

---

112189
0-, 6x
N40

# "நின்னினும் நல்லன்"

(P. ஆலாலசுந்[...]ர், M. A.
தமிழ்விரிவுரையாளர், கிறித்தவக் கல்லூரி, தாம்பரம்.)

கம்பர் இயற்றியருளிய இராமாயணத்தினின்று நாம் அன்னாரது கவி உள்ளத்தினையும் கலைஞானத்தினையும் அறியலாம். கம்பர் தமது இராமாயணத்துள் பல பாத்திரங்களின் பண்புகளை அவ்வப் பாத்திரங்களுக்கேற்பக் கூறியுள்ளார். அநுமானைச் சொல்லின் செல்வனாகவும் இராமனை அறத்தின் நாயகனாகவும் சிறையிருந்த செல்வியாகிய சீதையைக் கற்பிற்கரசியாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எல்லாப் பாத்திரங்களையும்விடப் பரதனது குண நலமானது சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. பரதனது செயற்கரிய செய்கைகளைப் பலரும் பலவாறாகப் போற்றியுள்ளனர். இராமனையும் அவன் உடன் பிறந்தோர்களையும் சனகனுக்கு அறிமுகப்படுத்தப் போந்த விசுவாமித்திரர் பரதனது குணநலங்களைச் சிறப்பாகப் பாராட்டுகின்றனர். நீதிகளாகிய ஆறுகள் வந்து சேர்கின்ற கடல்போன்ற நிறைந்த நற்குணத்தையுடையவன் பரதன் என்று முனிவரர் பாராட்டுகின்றார். இன்னும் நற்குணத்தினும் அழகினும் பரதன் இராமனை ஒத்தவன் என்றும் கூறுகின்றார்.

"தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும்
பள்ளமெனுந் தகையானைப் பரதனெனும் பெயரானை
யெள்ளரிய குணத்தாலு மெழிலாலு மிவ்விருந்த
வள்ளலையே யனையானைக் கேகயர்கோன் மகள்பயந்தாள்."

பரதன் ஆழிசூழ் உலகமெல்லாம் ஆளவேண்டுமென்றும் இராமன் தவமேற்கொண்டு கானகம் சென்று ஏழிரண்டாண்டுகள் கழித்துத் திரும்பி வருதல் வேண்டும் என்றும் அரசன் கூறியதாகக் கைகேயி இராமனிடம் தெரிவித்தாள்: அதைக்கேட்ட இராமன் "மன்னவன் பணியன்றாகி னும்பணி மறுப்பனோ வென், பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ" என்று கூறி, கைகேயினிடம் விடைபெற்றுக் கோசலையின் கோயில் புகுந்தான். தன்

தாயைக்கண்ட இராமன் "பங்கமில் குணத்தெம்பி பரதனே, துங்கமா முடி சூடுகின்றான் என்றான்". அதைக்கேட்டாள் கோசலை. அவள் இராமனிடத்துக்கொண்ட அன்பைப்போன்று மற்ற மூன்று பிள்ளைகளிடத்திலும் கொண்டிருந்தாள். இராமன் கூறியதைக் கேட்ட கோசலை மூத்தவன் இருக்க இளையோன் பட்டத்திற்கு வருதல் முறையன்று என்றும் பரதன் இராமனைப் பார்க்கிலும் நல்லவன் என்றும் கூறினாள்.

"முறைமையன் றென்ப தொன்றுண்டு மும்மையின்
நிறைகுணத்தவ னின்னினு நல்லனால்
குறைவிலன் னெனக்கூறின ணால்வர்க்கும்
மறுவிலன்பினில் வேற்றுமை மாற்றினாள்."

குகன் வாயிலாகவும் இராமனினும் பரதன் சிறந்தவன் என்பதை நாம் அறியலாம். பரதன் தன் சேனையோடும் அமைச்சன் சுமந்திரனோடும், அரசன் தேவியர் மூவரோடும், இராமனைக் காட்டிலிருந்து மீட்டு வருதற்குச் சென்றான். பரதனது சேனையைக்கண்ட குகன், பரதன் இராமருக்குத் தீமை விளைக்க வருகின்றான் என்று முதலிற் பிறழ உணர்ந்தான். அதன் பிறகு குகன் காட்டிற்கு வந்த காரணம் யாது என்று பரதனைக்கேட்க அதற்குப் பரதன்.

"முழுதுலகு அளித்த தந்தை முந்தையோர் முறையினின்றும்
வழுவினன் அதனை நீக்க மன்னனைக் கொணர்வான் என்றான்"

அதனைக் கேட்டவுடனே குகன் பரதனது திருவடியில் வீழ்ந்து வணங்கிக் கீழ்வருமாறு கூறினான்.

"தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத்
தீவினை என்ன நீத்துச் சிந்தனை முகத்தில் தேக்கிப்
போயினை என்ற போழ்து புகழினோய் தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ தெரியின் அம்மா."

பெற்றோர் இருவரும் அளித்த தரணியை ஏற்றுக்கொள்ளுதல் தீவினை எனக்கருதி இராமபிரானைக் காட்டினின்று மீட்டு வருதற்காக மிக்க இன்னலுடன் பரதன் காட்டிற்கு வந்ததை நோக்கும்



போது ஆயிரம் இராமர் சேர்ந்தாலும் ஒரு பரதனுக்கு ஒப்பாவரோ எனக் குகன் பரதனது பண்பினைப் போற்றுகின்றான்.

இராமனினும் பரதன் சிறந்தவன் என்பது வாலியின் மாற்றத்தாலும் விளங்குகின்றது. தன்மீது மறைந்து அம்பு எய்த இராமன் தன் முன்பு தோன்றியபோது வாலி இராமனை ஏசுகின்றான்.

"வாய்மையு மரபுங் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்தனே நீபரதன் முன் றோன்றினாயே
தீமைதான் பிறரைக் காத்துத்தான் செய்தாற் றீங்கன்றாமோ
தாய்மையு மன்றி நட்புந் தருமமுந் தழுவி நின்றாய்."

மேலே குறிப்பிட்டுள்ளசெய்யுளால் பரதன் சிறந்தவனென்றும் இராமன் பரதனுக்கு முன்னோனாகப் பிறப்பதற்கு உரிமையற்றவனென்றும் வாலி கூறுவதாகத் தெரிகின்றது.

பரதனின் பண்பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டு கோசலையின் மாற்றமேயாகும். பரதன் இராமன் வரும் வரையில் இராமனது மிதியடியினை அரியணையில் வைத்து அரசியல் காரியங்களைக் கண்காணித்து வந்தான். பதினான்காண்டு முடிந்தவுடன் அன்று இராமன் காட்டினின்று அயோத்திமாநகருக்கு வரச் சிறிது தாழ்ந்தது. உடனே பரதன் ஒரு தீ வளர்த்தி அதில் புகத் தயாராக இருந்தான். இதைக்கண்ட கோசலை பரதனின் பண்பினைக்கண்டு வியந்து கீழ்வருமாறு கூறுகின்றார்.

"எண்ணில் கோடியிராமர்க ளென்னினும்
அண்ணனின் னருளுக் கருகாவரோ
புண்ணிய மெனு நின்னுயிர் போனால்
மண்ணும் வானு முயிர்களும் வாழுமோ."

ஈண்டுக் கோசலை பரதனுடைய அருளை நோக்குழி எண்ணில் கோடி இராமர் என்றாலும் பரதன் இறப்பின் மண்ணுளோரும் விண்ணுளோரும் மாள்வர் என்று கூறும் தன்மையானது சாலவும் வியத்தற்குரியதன்றோ!

# மனித வாழ்வின் தேவை

[P. G. நாதமுனி, காஞ்சி.]

மனித சமூகத்திற்கு இன்றைய பெருந்தேவை என்ன? அது எவ்வகைப்பட்டது? மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை என மூவாசை என்று சொல்லுகிறார்களே அவைகளா? அவற்றை விரும்பி ஒருவரோடொருவர் கண்மூடித்தனமாகப் போட்டியிடுவதா? வீணே லாபத்தைச் சம்பாதிக்க விரும்பும் முதலாளிகளா? அவர்கள் கீழ் அழுந்திக்கிடக்கும் தொழிலாளிகளா? அதிகமான பொருள் ஒரு சிலரிடம் பயனற்ற முறையில் குவிந்துகொண்டேயிருக்க, ஏழைகள் பலர் உண்ண உணவின்றியும், உடுக்க உடையின்றியும், தங்க நிழலின்றியும் தவிக்கும் நிலைமையா? முதலாளிகள் லாபத்தை விரும்பி, தொழிலாளிகளின் நலத்தைப் பொருட்படுத்தாதிருப்பதும், தொழிலாளிகள் சரியான ஊதியம் பெறக் கிளர்ச்சி செய்வதும், இவைகளால் உண்டாகும் சச்சரவும் பொருளாதார நெருக்கடியுமா? தமக்குக் கிடைக்கக்கூடிய வருமானத்தைக் கொண்டு இன்பமாக வாழாது, கடன்பட்டாவது தம்வாழ்நாளை உல்லாசமாக வீணாக-நடத்தி, கடன் களைச்சுமந்து "கடன் கொண்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்றாற்போல் மனங்கலங்கிக்கொண்டிருப்பதா? முன்னோர்கள் சம்பாதித்து வைத்த பொருளைக்கொண்டு சோம்பேறிகளாக வீண் செலவு செய்து கொண்டோ அல்லது ஈகைக்குணமற்றவர்களாகவோ இருப்பதா? அதுவன்றி, பொருளாதாரத்துறையில் மக்கள் தாங்கள் மென்மேலும் விருத்தியடையவேண்டுமென்ற அவாவின்றி சமூகத்தின் மேன்மைக்கே பாடுபடவேண்டு மென்னும் நடைமுறையில் கொண்டுவர முடியாததும் மனிதனின் இயற்கைக்கு மாறுபட்டதுமான ஓர் தத்துவமா? இவற்றுள் எதுதான் என்று எண்ண இயலுமோ! இல்லை இல்லை. இவற்றிற்கெல்லாம் மேற்பட்ட ஒன்றே இன்றைய மனிதனின் தேவையாக உள்ளது. அதுவே கூட்டுறவு. கூட்டுறவே மக்களை மாட்சியுறச்செய்யும். மக்களின் வாழ்க்கையையே கூட்டுறவு முறையில், கூட்டுறவு நோக்கத்தில் இயங்கச்



செய்தலே சாலச்சிறந்தது. தற்காலம் மனித சமூகம் அமைந்திருக்கும் மாறுபாடுகள் நிறைந்த முறையில் இந்தத் தேவையானது நன்மை—தீமை என இருவகையில் விளங்குகிறது. வியாபாரிகளுக்கு வாடிக்கைக்காரர்கள் வேண்டும்; பெரிய ஆலை முதலாளிகளுக்குத் தொழிலாளிகள் வேண்டும்; போலீஸ் வாதிக்குக் குற்றவாளிகள் வேண்டும்; சேனாபதிக்கு விரோதிகள் வேண்டும்; இவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் கணக்கினை நேர்செய்து இருப்புக்கட்டிப் பார்க்கையில் தாங்கள் கொடுப்பதைக் காட்டிலும் எதிரிகளிடம் அதிகம் பெறவேண்டுமென்று பாடுபடுவதால் இது தீமையான பாகம். ஆகையால், மனித சமூகத்தின் தேவை இதுவல்ல. நன்மையான பாகமாகிய கூட்டுறவு தான் தேவை. நாம் சாதாரணமாய் நினைக்கிற படி மாறுபட்டவையாக வல்லாமல் ஒருவருக்கொருவர் உதவிக்கொள்ளும் முறையில் கூட்டுறவு அமையவேண்டும். நமது வாழ்க்கையின் உயரிய நோக்கம் நிறைவேறும் பொருட்டு, பிறர் நமக்கு உதவி புரியவும்நாம் பிறருக்குஉதவிபுரியவும் ஒருவர்க்கொருவர் உறுதுணையாயிருக்கிறோம். பண்டைக்காலத்திய பொய்யாமொழி யொன்றுண்டு. அது இன்றைக்கும் மக்களால் பாராட்டிப்புகழப்படுகிறது. அது என்னவென்றால்.

"மனிதன் ஒருவனோடொருவன் சண்டையிடுதல் இயல்பே. அது அவனுக்கு நல்லதுங்கூட. ஒருவன் பிறரை ஏமாற்றிக் கருவியாக உபயோகப்படுத்துவதை யனுசரித்துத் தான் அவனுடைய பராக்கிரமத்தையும் வெற்றியையும் அளவிடப்படுகிறது" என்பதே. ஆனால் சற்றுநிதானித்து யோசிப்போமானால், அதுஎவ்வளவு மூடத்தனமான பாராட்டு-நேர்மையற்ற கொள்கை இதுஎன்பது விளங்கும். பொறாமையும் போட்டியும் என்றைக்கும் மனிதனைப் படுகுழியில் விழக்காட்டுமே யல்லாமல் மேலோங்கச் செய்யா. கலந்த கூட்டுறவே என்றைக்கும் மனித சமூகத்தை மேல் ஓங்கச்செய்து உன்னதமான வாழ்க்கை லட்சியத்தையடைய உறுதுணையாகவும் உண்மைச்சாதனமாகவும் இருந்திருக்கிறது.

இனி, கூட்டுறவு தத்துவம்பற்றி சிறிது ஆராய்வோம். நமக்கு இப்போது புதிதாயிருந்தாலும், நம்முன்னோர்கள் அதை வாழ்க்கை

முறையில் மேற்கொண்டு வந்திருப்பதை அறியலாம். கூட்டுறவு என்பது ஒரு பொதுக்காரியத்தின் பொருட்டு பலர் ஒன்று சேர்ந்து பாடுபடுவதாகும். சில ஆண்டுகளாக, பொருளாதாரத் துறையில் அது ஒரு குறித்த பொருளில் வழங்கப்படுகின்றது. இப்போதுள்ள பொருளாதார அமைப்பில், சமூகத்தைப் பொருத்த வரையில் அநேக குறைபாடுகள் காணப்படுகின்றன. முதலாளித்துவம் தலையெடுத்த நாள் முதல் ஒரு சிலர் எல்லாச்சுகபோகங்களையும் அனுபவித்திருக்க, அநேகர் கேவலம் வயிற்றை நிரப்பிக் கொள்வதற்காகவே அல்லும் பகலும் உழைக்க வேண்டி வருகிறது. சமூகத்தில், ஒருசிலர் சிறிது உழைப்புமின்றி ஏராளமான இலாபத்தைப் பெறுகின்றனர். பண ஆதிக்கம் ஓங்க ஓங்க, பல்லாயிர மக்கள் சிறகிழந்த பறவைபோல் சக்தியை இழந்து சமூகத்திலே வாடி நிற்கின்றார்கள். இக்குறைபாட்டை நீக்கி, மக்கள் சிறந்த வாழ்வை எய்துவதற்கு உற்ற துணையாக இருப்பது இக்கூட்டுறவே. கூட்டுறவின் அடிப்படையான தத்துவம் "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்பதாம். கூட்டுறவின் நோக்கப்படி, ஒவ்வொருவரும் பலருக்கும் பயன்படவேண்டும்; ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருக்கவேண்டும். கூட்டுறவின் வலிமையோ "பல செத்தை சேர்ந்தால் ஒரு கத்தை" என்பது போன்றது. செத்தையின் வலிமை என்ன? கத்தையின் வலிமை என்ன? ஒரு சிறிய காற்று அடித்தால் செத்தைகளெல்லாம் பறக்கின்றன. பல செத்தைகளை ஒரு சிறிய கத்தையாகக் கட்டிவிட்டால் காற்று அடித்தாலும் அசையாது. ஆகையால் பலர் ஒன்று கூடினால் செய்ய இயலாத பல காரியங்களையும் செய்து முடித்து விடலாம் என்பது கூட்டுறவின் நோக்கமாகும்.

கூட்டுறவு, தொழில் முறையைப் பற்றியதாகும். இதனால் செல்வநிலையை அதிகப்படுத்துவதும் இதன் நோக்கமாகும். இது யாவரும் சமம் என்னும் கொள்கையைப் பரவச்செய்யும்; கூட்டுறவு சமாதானத்தையே விரும்பும்; வகுப்புத்துவேஷத்தை ஒழித்து ஒற்றுமையை உண்டாக்கும்; கொள்வோர் கொடுப்போர் யாவருக்கும் கூட்டுறவு இன்பத்தைக் கொடுக்கும். கூட்டுறவு பொருளாதார முன்னேற்றத்தையே அடிப்படையாகக் கொண்டபோதிலும், அதில்



தத்துவ போதனையும் பொருந்தியிருக்கிறது. கூட்டுறவு என்னும் மாளிகை அன்பென்னுங்கால்கொண்டு கட்டப்படுவது. ஒற்றுமையென்னும் உயர்ந்த கூரை உடையது. அன்பு மாளிகையிலே சகோதர வாஞ்சையோடு மக்கள் சேருவார்கள். கூட்டுறவு அழைப்பே அன்பின் அழைப்பாகும். "தன்னைப்போல் பிறரை நேசி" என்னும் பொன் மொழியைப் பின்பற்றியது கூட்டுறவே. ஆதலின் அதில் சமூகத்தொண்டு மிகவும் சிறந்து விளங்குவதோடு அடக்கமும் உயர்வும் பொருந்தியிருக்கிறது. கூட்டுறவு சுயநலத்தைப்போக்கி, தன்நம்பிக்கை, பரோபகாரம், சமத்துவம் இவைகளை நாளுக்குநாள் வளரச் செய்து, தம்மைத்தாமே ஆண்டு கொள்ளும் முறையைக் கற்றுக் கொடுக்கிறது. தியாகம், அன்பு, சகோதரத்துவம், சமூக சேவை என்னும் அருமையான குணங்கள் கூட்டுறவினால் உண்டாவதால், இக்குணங்களில் ஏதாவது குறைந்தால் மனித சமூகத்திற்கே நன்மை உண்டாகக்கூடிய வேலைகள் குறைபடும். இக்கொள்கைகள் நம்நாட்டு மக்களுக்குப் புதியன அல்ல; பழயனவே.

கூட்டுறவுக் கொள்கையையும் தத்துவங்களையும் ஆராய்ந்து பார்த்தால், மனித சமூகத்திற்குக் கூட்டுறவுதான் அவசியமென்பது வெள்ளிடைமலை.

கூட்டுறவு குடும்ப வாழ்க்கையில் அமைந்துள்ளது. கணவன், மனைவி, சகோதரர், சகோதரிகள், குழந்தைகள் எல்லோரும் வீட்டைச் சார்ந்த காரியங்களைக் கவனிப்பதில் ஒருவருக்கொருவர் உதவிபுரிந்து பலன் அடைகின்றார்கள். கலந்த ஒற்றுமையில்லாவிடில் குடும்பவாழ்கை சரிவர நடைபெறாது. குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஒன்றாய் வசிப்பதும் கடினமாகும். கிராமத்திலும், மக்களிடம் கூட்டுறவிருந்து கிராம வாழ்கையின் பழக்க வழக்கங்களைப் பலப்படுத்துகின்றது. கிராம மக்கள் எல்லோரும் எந்த ஜாதி எந்த மதமானாலும் சரி, பல விதங்களில் ஒருவருக்கொருவர் உதவி புரிகின்றனர். கிராமப்பொதுக் காரியங்களாகிய கிணறு, ஏரி, குளம் அமைப்பது, நீர்ப்பாச்சனங்களுக்காகக் கால்வாய்களைவெட்டுவது, பொதுநலத்தில் யாவரும் உற்சாகம் எடுத்துக்கொள்வது என்பதுபோன்ற காரியங்கள் எல்லாக்கிராமங்களி

லும் இருந்துதான் வந்திருக்கின்றன. இதுவே கூட்டுறவு. தேச முழுவதையும் கவனித்துப்பார்த்தால், அதனைச்சேர்ந்த பெரிய விஷயங்களிலும் கூட்டுறவு நிறைந்துள்ளது. ஒருவரையொருவர் அறியாத ஆயிரக்கணக்கான மக்கள் தேசத்தின் பொதுவான நன்மைகளை எண்ணி ஒன்று சேர்ந்து நடத்தி வந்ததும், நடத்திவருவதுமான செயல்களைக் கவனித்தால் கூட்டுறவின் பெருமையானது நன்குபுலப்படும்.

கூட்டுறவு என்பது குடும்பத்திலும் தேசத்திலும் பண்டைக் காலந்தொட்டு இருந்து வந்தபோதிலும், ஒரு சட்டதிட்டத்துக்குட்பட்டு ஒரு ஸ்தாபனமாக அமைந்து நமது சமூகம் முன்னேற 1904-வருட முதல்தான் உதவியது. கூட்டுறவு சங்கம் சமூகத்தில் இப்போதுள்ள பசி, பிணி, மிடி முதலியவற்றை நீக்கின் சமூகம் சிறப்புடையதாகும். மக்கள் தன்னுணர்ச்சி பெறுவார்கள். சுகமான வாழ்க்கையை நடத்துவார்கள். கூட்டுறவு இயக்கத்தால் எவ்வளவோ நன்மைகளை மக்களினம் இது வரையில் பெற்றிருப்பதால், மனித சமூகத்தின் பிற்கால வாழ்வு கூட்டுறவாலேயே தான் ஆகவேண்டும்.

கூட்டுறவு விருத்தியானால் தான் வாழ்வு சிறக்கும். கூட்டுறவின் தத்துவங்களும் இலட்சியங்களும் நம்மக்களின் மனப்பாங்கிற் கேற்றவைதான். "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே" என்று கூறிய தாயுமானவர் வழியில் வந்தவர்கள் நாம். அனைவரும் சுகம்பெற்று இன்புடன் வாழவேண்டுமென்பதே ஒவ்வொருவருடைய குறிக்கோளாக இருக்க வேண்டும். அதுவே வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கும், நாகரீக வளர்ச்சிக்கும் ஆதாரமாயிருப்பது. பாரதியாரும் ஒற்றுமையின் சிறப்பை, "ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே! நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வே." என்று விளக்கிக்காட்டியிருப்பதாலே, மனித சமூகத்திற்குக் கூட்டுறவைத் தவிர வேறொன்றும் அவசியமில்லை. கூட்டுறவு முறைகளை அறிந்து, எடுத்துக்கூறி எல்லோரும் ஒன்றுசேர்ந்து கூட்டுறவு முறையில் வாழ்க்கையை நடத்தி நோயற்ற வாழ்வோடும், குறைவற்ற செல்வத்தோடும் இன்புற்றிருப்போமாக:-

# நெல்லைமாநகரம்

(ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் B.A., B.L.,

தலைமைத் தமிழ் விரிவுரையாளர். சென்னைப் பல்கலைக் கழகம்.)

பாரிலுள்ள நாடுகளுள் பழமை வாய்ந்தது பாரதநாடு என்பர். அந்நாட்டின் தென்னாடாகிய பாண்டிநாடு சாலப் பழமை வாய்ந்த தென்று முற்காலத்து ஆன்றோரும் தற்காலத்து அறிஞரும் இசைந்து கூறுவர், 'பாண்டிநாடே பழம் பதியாகவும்' என்பது திருவாசகம்.

இத்தகைய பாண்டிநாட்டின் தென்பகுதி தென்பாண்டிநாடு எனப்படும். தொன்று தொட்டு, தமிழ் மணமும் சிவமணமும் ஒருங்கே சிறந்து கமழும் நாடு தென்பாண்டி நாடு. 'பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைந்துள்ள' பரம்பொருளைத் 'தென்னாடுடைய சிவன்' என்றும், 'தென்பாண்டி நாட்டான்' என்றும் மணிவாசகப் பெருமான் போற்றிப் புகழ்ந்தார் என்றால் அந்நாட்டின் செம்மைக்கும் தொன்மைக்கும் வேறொரு சான்று வேண்டுமோ?

"ஏதமிலா இன் சொல் மரகதமே! ஏழ் பொழிற்கும்
நாதன் நமை யாளுடையான் நாடுரையாய்—காதலவர்க்
கன்பாண்டு மீளா அருள் புரிவான் நாடு என்றும்
தென்பாண்டி நாடே தெளி."

என்று மணிவாசகர் கூறும் திறம் அறியத்தக்கதாகும்.

தென்பாண்டி நாட்டின் தலைநகராகிய திருநெல்வேலி பாடல் பெற்ற பழம்பதிகளுள் ஒன்றாகும். அந்நகரிற் கோயில்கொண்ட ஈசனைத் 'திருநெல்வேலியுறை செல்வர்' என்று திருஞான சம்பந்தப் பெருமான் பாராட்டிப் போற்றியுள்ளார்.

இங்ஙனம் தெய்வ மணக்கும் தேவாரத்திற் புகழ்ப்பெற்ற நெல்லைமாநகரம், பொன் திணிந்த புனல் பெருகும் பொருநையெனும் திருநதி'யின் கரையில் அமைந்துள்ளது. அந்நதியிற் பொருந்திய துறைகளிற் சிறந்தனவாகிய சிந்து பூந்துறையும் குறுக்குத்துறையும்

நெல்லைமா நகரின் துறைகளாகும். சிந்து பூந்துறை என்னும் அழகிய பெயர் திருஞான சம்பந்தர் திருவாக்கிலே பயின்றதாகும். "மருந்தவை மந்திரம்" என்று அப்பெருமான் எடுத்த திருப்பதிகத்தில்,

"கந்தமார் தருபொழில் மந்திகள் பாய்தர மதுத்திவலை
சிந்துபூந் துறைகமழ் திருநெல்வே லியுறை செல்வர் தாமே."

என்று நெல்லைப் பூந்துறை புகழப் பெற்றுள்ளது.

நறுமணங் கமழும் பொழில்களை நோக்கும் பொழுதும், அப்பொழில்களில் கிளைக்குக்கிளை தாவி விளையாடும் குரங்குகளைக்காணும் பொழுதும், பிள்ளைப்பெருமானாகிய திருஞான சம்பந்தர் உள்ளம் மகிழ்ந்து பாடுவார். 'தேனருவித்திரை யெழும்பி வானின் வழி யொழுகும்' திருக்குற்றால மலையில் இந்நாள் இளைஞர்கள் கண்டு இன்புறுகின்ற வானரங்களை அந்நாளில் திருஞான சம்பந்தரும் கண்டார் போலும்! அந்நிலையில் அவர் அடைந்த உள்ளக்கிளர்ச்சி ஒரு தெள்ளிய பாட்டாயிற்று.

"மலையார் சாரல் மகவுடன் வந்த மடமந்தி
குலையார் வாழைத் தீங்கனி மாந்தும் குற்றாலம்."

என்று எழுந்த திருப்பாட்டில் இளமந்திகள் தம் வயிற்றைக்கட்டித் தழுவிய குட்டிகளோடு வாழைக்குலைகளின்மீது பாய்ந்து அக்கனிகளை மாந்தும் காட்சி அழகுற மிளிர்கின்றது. இன்னும் கண்ணப்ப தேவர் வழிபடும் பெருமை வாய்ந்த காளத்தி மலைக்குச் சென்ற ஞானக்கவிஞர் அம்மலையிலே துள்ளி விளையாடிய கருமந்திகளை நோக்கி இன்புற்று,

"கல்லதிர நின்று கருமந்தி விளையாடும் காளத்தி மலையே"

என்று அருளிப்போந்தார்.

இத்தகைய நல்லியற் கவிஞராகிய திருஞான சம்பந்தர் திருநெல்வேலியை வந்தடைந்த பொழுது பொருநை யாற்றங்கரையிற் பொருந்திய செழுஞ் சோலைகளைக் கண்ணுற்றார். அச்சோலைகளில் மலர்ந்திருந்த பூக்களின் நறுமணத்தை நுகர்ந்தார். அங்கு மகிழ்ந்து



விளையாடிய மந்திகள் மரக்கிளைகளில் ஒன்றைவிட்டொன்று பற்றும்பொழுது, சோலைமலர்கள் செந்தேன் துளிக்கக் கண்டார். அவ்வழகிய சோலையின் மருங்கே யமைந்த பூந்துறையை "மதுத்திவலை சிந்து பூந்துறை" என்று புகழ்ந்துரைத்தார். சோழநாட்டுப் பழம் பதிகளுள் ஒன்றாகிய தென் குரங்காடு துறை, ஆடுதுறை யெனக் குறுகினாற் போன்று, மதுத்திவலை சிந்து பூந்துறை இன்று சிந்து பூந்துறை யென வழங்குகின்றது போலும். ஆகவே நெல்லையப்பரது தீர்த்தத்துறையாக விளங்கும் சிந்து பூந்துறை திருஞான சம்பந்தர் பாட்டாற் பெருமையுற்ற பழந்துறை என்பதில் ஐயமில்லை.

இனி, நெல்லைமாநகரின் மற்றொரு துறை குறுக்குத்துறை எனப்படும். அது குருக்கத் துறையென்று சிதைந்து வழங்குகின்றது. குறுக்குத்துறையின் வரலாறு எளிதில் அறியக்கூடியதாகும். நெல்லையப்பர் கோவிலுக்கு நேராக அமைந்தது சிந்து பூந்துறை. நாளடைவில் நெல்லைமாநகரம் விரிந்து வளர்வதாயிற்று. கோவிலுக்கு வடபால் நயினார் குளம் என்னும் ஏரி அமைந்திருத்தலால் வடபால் விரிவடைதற்கிடமின்றி நகரம் தென்பால் விரிந்து வளர்ந்தது. அங்ஙனம் விரிவுற்ற நகருக்குச் சிந்து பூந்துறை தூரத் துறையாயிற்று. ஆகவே நெல்லைவாசிகள் வயல்களின் வழியாகச் சென்று ஆற்றிலே புதுத்துறையொன்று கண்டார்கள். அத்துறை குறுக்கு வழியிற் சென்று ஆற்றை அடைதற்கு ஏற்றதாயிருந்தமையால் குறுக்குத்துறை என்று பெயர் பெற்றது. அத்துறையின் முன்துறை முன்னடித்துறை என வழங்குகின்றது.

நெல்லைமாநகரின் அமைப்பினைப் பொதுவுற நோக்கும்பொழுது, நெல்லையப்பர் கோவிலே அந்நகர்க்குத் தோற்றுவாயாக அமைந்தது என்பது புலனாகும். "ஆறில்லா ஊருக்கு அழகில்லை" என்னும் உண்மையை அறிந்த தமிழ் நாட்டார், "கோவில் இல்லா ஊரிற் குடியிருக்கவேண்டா" என்னும் கொள்கையுடையராதலின் பொருநையாற்றின் இருமருங்கும் அமைந்த மூங்கிற்காட்டை அழித்து நெல்வேலியமைக்க முயன்றபொழுது, இறைவனுக்குரிய கோவிலை முதலில் அமைத்தார்கள் என்று கருதுவது மிகையாகாது.

அக்கோவிலைச் சுற்றி மக்கள் வாழும் தெருக்கள் எழுந்தன. அவற்றுள் மாடத்தெரு எனப்படுவது கோவிலின் மதிற்சுவருக்கு மருங்கே அமைந்ததாகும். பொதுவாக இந்நாட்டில் ஆலயங்களை அடுத்துள்ள வீதிகளுக்கு மாடத்தெரு என்னும் பெயர் தொன்று தொட்டு வழங்கி வருவதாகத் தெரிகின்றது. மாடம் என்னும் சொல் ஓங்கி எழுந்த வீட்டையும் இறைவன் கோவிலாகக் கொண்ட இடத்தையும் குறிப்பதாகும். தூங்கானை மாடம் என்பது சிவபெருமான் திருப்பெண்ணாகடத்திற் கோயிலாக்கொண்ட இடத்தின் பெயர். திருவாக்கூர் என்னும் பாடல்பெற்ற பழம்பதியில் தான் தோன்றி மாடம் என்பது திருக்கோவிலின் பெயர். சிலப்பதிகாரத்தில் திருமால் பள்ளிகொண்டிருந்த திருக்கோவில் ஆடகமாடம் என்னும் பெயர் பெற்றிருந்தது என்பர். சிவபெருமான் சேவடியைச் சென்னியிற் சூட்டிய சேரன் செங்குட்டுவன் ஆடகமாடத்துப் பள்ளிக்கொண்ட திருமாலின் சேடத்தை வாங்கி மணிப்புயத்தில் வைத்தான் என்று சிலப்பதிகாரம் அழகுறக் கூறுகின்றது.

இன்னும் தென்னாட்டில் வழங்கும் மாடம் என்னும் சொல்லை ஆராய்வோமாயின் முற்காலத்தில் வீடுதோறும் வழிபாட்டிற்குரிய இடம் அமைந்திருந்ததென்பது மாண்புற விளங்கித் தோன்றும். அந்நாளில் மாடக்குழி இல்லாத மனையகம் இல்லை. மாடக்குழி என்பது இக்காலத்தில் மாடாக்குழி எனச் சிதைந்து வழங்குகின்றது. இல்லுறை தெய்வம் மாடக்குழியில் கோவில் கொண்டிருந்தது போலும். இன்றும் பல வீடுகளில் மாடக்குழியில் குலதெய்வத்தை வைத்து வணங்குகின்றார்கள். பெரும்பாலும் வீட்டின் முகப்பில் அமைந்த பட்டகசாலை யென்னும் கட்டிடச் சுவரில் அம்மாடம் அமைந்திருத்தலால் சுவர் மாடம் என்று பெயர் பெற்று, சருமடம் எனச் சிதைவுற்றது. ஆகவே மாடம் என்றும் சொல் இறைவன் அமர்ந்திருக்கும் கோவில் என்ற பொருளில் வழங்குதல் நூல் வழக்கினும் உலக வழக்கினும் நன்கறியப்படுகின்றது.

மாடவீதிகளைச்சுற்றி நெல்லைமாநகரில் நான்கு ரதவீதிகளும் நன்கு அமைந்திருக்கின்றன. அவ்வீதிகள் ஆதியில் நெல்லையப்பர் தேரின்மீதமர்ந்து பவனி வருதற்கென்று வகுக்கப்பட்ட வீதிகளாகத் தோற்றுகின்றன. சிவபெருமானுக்குரிய வாகனங்கள் பலவாயினும் அவற்றுள் தலை சிறந்தது தேரேயாதலால் அவர் திருநாட்காலங்களில் பவனி வரும் வீதியைச் சிறப்புப்பற்றி தேர்வீதி என்றும் ரதவீதி என்றும் நம் முன்னோர் அழைத்தார்கள். திருவிழாக் காலங்களில் நான்கு ரத வீதிகளும் பந்தல்களாலும் தோரணங்களாலும் பிறவற்றாலும் அலங்கரிக்கப்பட்டுக் கண்ணுக்கினிய காட்சியை அளிக்கும்.



தேரோடும் வீதிகளை அடுத்து, பலவகைத்தொழில் செய்வோர் வீதிகளும் பாங்குற அமைந்துள்ளன. இவற்றுள் அந்நகரின் பழம் பெருமையை உணர்த்துகின்ற இரண்டொரு வீதிகளின் பெயர்களை ஈண்டு கருதுவோம். கீழ ரத வீதியை அடுத்து காவற்புரைத்தெரு என்னும் பெயருடைய சிறு தெரு ஒன்று உண்டு. அதன் வரலாற்றை அறியாதார் காப்பரைத்தெரு என்று அதனைச் சிதைத்து வழங்குவர். பாண்டி மன்னர்களும் நாயக்க மன்னரும் தென்னாட்டை ஆண்ட காலத்து அரசனுக்குரிய வரிகளை உரிய காலத்தில் செலுத்தத் தவறினோர் காவல்புரைகளில் அடைக்கப்பட்டார்கள். நெல்லை நகரில் அமைந்துள்ள காவற்புரைத் தெருவைக்குறித்த சரித்திரம் ஒன்று உண்டு. கார் காத்தார் என்று பெயர் பெற்றுள்ள வகுப்பாரின் திருவுடைத் தலைவராகவும் தமிழ் மொழியிற் சிறந்த புலமையாளராகவும் விளங்கிய வடமலையப்ப பிள்ளையன் ஏறக்குறைய மூன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு மதுரையை ஆண்ட நாயக்க மன்னருடைய பிரதிநிதியாகத் தென்பாண்டி நாட்டில் வீற்றிருந்தார்கள். அப்பொழுது மன்னர்க்குரிய நிலவரியைக் காலத்திற் செலுத்தத்தவறிய தென் திருப்பேரைத் தமிழறிஞர் இருவர் நெல்லையிலுள்ள காவற்புரையில் அடைக்கப்பட்டார்கள் என்றும், மாணிகளாகிய அவ்வறிஞர்கள் தமக்கு நேர்ந்த சிறுமையைக் குறித்து வருந்தித் தமிழ்ப்பாட்டிசைத்தார்களென்றும், அதனைக்காவற்புரைச் சேவகர் வாயிலாக அறிந்த வடமலையப்ப பிள்ளையன் நேரில் சிறைக்கோட்டத்திற் சென்று அங்கு அடைபட்டிருந்த தமிழறிஞரது புலமைத்திறத்தைக் கண்டு அவரை விடுவித்துப் பாராட்டி மகிழ்வித்தார் என்றும் ஒரு வரலாறு உண்டு.

இனி மேலரதவீதியை அடுத்து அமைந்துள்ள சிறு தெரு ஒன்று கூழைக்கடைத்தெரு என்று இந்நாளில் அழைக்கப்படுகின்றது. தேரோடும் நெடுவீதி போலாது குறுகிய தெருவாய், குட்டைத்தெருவாய் அமைந்திருத்தலால் கூழை என்னும் அடை அத்தெருவுக்கு அமைந்ததாகப் பொதுமக்கள் கருதுகின்றார்கள். உண்மையில் அத்தெருவின் பெயர் கூலக் கடைத்தெருவாகும். உணவுப் பொருள்களாகிய நெல் புல் முதலிய தானியங்கள் விற்கும் கடை கூலக்கடை எனப்படும். கூலம் என்பது பழைய தமிழ்ச்சொல். மதுரையில் கூலக்கடைவைத்து வியாபாரம் செய்த தமிழ்ப்புலவராய சாத்தனார் கூலவாணிகன் சாத்தனார் என்று சங்க நூல்களில் குறிக்கப்படுகின்றார். இவரே ஐம்பெருந் தமிழ்க் காவியங்களில் ஒன்றாகிய மணிமேகலையின் ஆசிரியர். கூலக்கடைகள் நிறைந்த வீதியைக் கூலவீதியென்றும் கூலக்கடைத்தெரு என்றும் பழைய பாட்டும் உரையும் குறிக்கின்றன. சோழநாட்டின் தலைநகராய காவிரிப்பூம்பட்டினத்தில் அமைந்திருந்த பலவீதிகளையுங் கூறிவரு முறையில் கூலம் குவித்த கூலவீதியும் ஆண்டு இருந்ததென்று சிலப்பதிகாரம் உணர்த்துகின்றது. கூலவீதி என்னும் சொல்லுக்கு உரையாசிரியர் கூலக்கடைத்தெரு என்றே பொருள் கூறிப்போந்தார். பழங்காலத்தில் இருவகை வழக்கிலும் பயின்றிருந்த கூலம் என்னும் சொல் இப்பொழுது படித்தோர்க்கு மட்டும் பொருள் விளங்கும் அரும்பதமாய் விட்டது. ஆயினும் அச்சொல்லின் சீர்மையை அறிந்து பாதுகாத்தல் கற்றறிந்தோர் கடமையாகும்.

இனி, அக்கசாலை விநாயகர் தெரு என்பது நெல்லைமாநகரின் மற்றொரு தெருவின் பெயராகும். இத்தெருவில் பொற்கொல்லர் என்னும் தட்டார்கள் சிறப்புற்று வாழ்கின்றார்கள். அக்கசாலை என்னும் சொல் நாணயம் அடிக்கும் சாலையின் பெயர் என்பர். சென்ற நூற்றாண்டில் சென்னைமாநகரில் பொற்காசுகள் அடிக்கப்பட்ட சாலையையுடைய தெருவின் பெயர் தங்கசாலைத்தெரு என்று இன்றும் வழங்குகின்றது. தென்பாண்டி நாட்டில் பொருநையாறு கடலொடு கலக்குமிடத்தில் கொற்கை என்னும் துறைமுகம் முன்னாளில் சீரும்சிறப்புமுற்று விளங்கிய செய்தி பழந்தமிழ் நூல்களால் அறியப்படும். பாண்டியனுக்குரிய சிறந்த செல்வமாய முத்துச்சலாபம் கொற்கைத்துறையின் அருகே அமைந்திருந்தமையால் செல்வம் மலிந்த துறைமுகமாகக் கொற்கை விளங்கிற்று. பண்டைத் தமிழ்நாட்டில் முத்து விளைந்த பெருந் துறைகளைத் தொகுத்துரைக்கப் போந்த குமரகுருபரஅடிகள் கொற்கைத்துறையில் குளித்த முத்தை விதந்து புகழ்ந்துள்ளார்.



> “கோடும் குவடும் பொருதரங்கக் குமரித்துறையில் படுமுத்தும்
> கொற்கைத் துறையில் துறைவாணர் குளிக்கும் சலாப குவான் முத்தும்”

என்று தென்பாண்டிக் கவிஞராகிய குமரகுருபரர் கொற்கையின் பெருமையைக் குறித்திருத்தல் அறியத்தக்கதாகும். இங்ஙனம் பாண்டியர்க்குரிய சிறந்த செல்வம் கொற்கைத்துறையில் விளைந்தமையாலேயே பாண்டி மன்னனைக் கொற்கைத்துறைவன் என்றும் கொற்கைக் கோமான் என்றும் பழம் பனுவல்கள் குறிப்பனவாயின. தென்பாண்டி நாட்டுத்துறையில் விளைந்த முத்து, மரக்கலங்களின் வழியாகப் பிற நாடுகளிற் புகுந்து மன்னர் முடிமீதும் மாதர் அணிமீதும் இலங்குவனவாயின என்று யவனசரித்திரம் குறிப்பிடுகின்றது. இவ்வாறு சிறந்திருந்த கொற்கைத்துறையை யடுத்துப் பாண்டிமன்னனுக்குரிய அக்கசாலையொன்று அமைந்திருந்தது. அவ்வூரில் நாணயமடிக்கும் தொழிலில் ஈடுபட்ட பொற்கொல்லர் பலர் சிறந்து விளங்கினார்கள். காலம் செல்லச் செல்லக் கொற்கையின் பெருமை குறைவதாயிற்று. பொருநையாறு கொணர்ந்த மணலும் மண்ணும் பிறவும் துறைமுகத்தைத் தூர்த்தன.

அந்நிலையில் அக்கசாலையில் வாழ்ந்த பொற்கொல்லர் அவ்விடம் விட்டுப் பெயர்ந்து தென் பாண்டிநாட்டிற் சிறந்திருந்த திருநெல்வேலியை யடைந்தார்கள். அந்நகர்ப் புறத்தே பழைய அக்கசாலையை நினைவூட்டும் தெரு ஒன்றை வகுத்தமைத்தார்கள். தாம் விட்டு வந்த ஊரினின்றும் விநயகரை எடுத்து வந்து நெல்லையிற் புதிதாக அக்கசாலைத் தெருவில் அமைத்தார்கள். இதனாலேயே அக்கசாலை விநயகர் தெரு என்று அவ்வீதி இன்றும் வழங்குகின்றது.

# பண்டைத் தமிழ் நாடு

கா. சுப்பிரமணியப் பிள்ளை, M. A., M. L.,

பண்டைத் தமிழ் நாடு ஆதிகாலத்தில் இமயம் முதல் பஃறுளி யாற்றிற்குத் தெற்கேயிருந்த தென்கோடிவரை பரவியிருந்தது. பண்டைத் தமிழரின் இனத்தார் இந்தியாவிற்கு வெளியே மேலை ஆசியாவிற்குச் சென்று, சீனர் முதலிய மங்கோலிய இனத்தவரோடு கலந்து, ருசியாவில் பல இடங்களுக்கும் வடதுருவம் வரைச் சென்று ஆங்காங்கு தங்கினரெனவும், கடல் வழியாகவோ, நிலவழியாகவோ மெக்சிகோ முதலிய அமெரிக்க நாடுகளுக்குச் சென்றனரெனவுங் கருத இடமிருப்பதால், ஒரு காலத்தில் உலகெங்கும் தமிழரின் தொடர்பு இருந்திருப்பதாகத் தெரிகிறது. இக்காரணம் பற்றி "ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத்தமிழென" நமது மொழியை ஆசிரியர் சேக்கிழார் சிறப்பித்தார்போலும்.

குமரிமுனைக்குத் தெற்கே இருந்த தமிழ்நாடு மூன்று பகுதிப் படுமென்பது ஊகித்தறியற்பாற்று. அவை யாவன:- 1 பஃறுளிக்குத் தெற்கிருந்த நாடு. 2 பஃறுளிக்குங் குமரிக்கும் இடை நின்ற நாடு. 3 குமரியாற்றிற்கும் குமரிமுனைக்கும் இடையிலிருந்தநாடு என்றறிக. பஃறுளியும் அதற்குத் தெற்கிருந்த நாடுங் கடல் கொள்ளப் பட்டபின், குமரியாறு தமிழ் நாட்டெல்லையாயிருந்தகாலம் ஒன்றுண்டென்பது "வேங்கடங் குமரித்தீம்புனற் பௌவம்என் றிந்நான் கெல்லை தமிழது வழக்கே" "வேங்கடங் குமரித் தீம்புனற் பௌவ மேற் றந்நான்கெல்லை யகவயிற் கிடந்த" என்னும் இயல் நூலாசிரியர் வாக்குகளாற் போதரும். தொல்காப்பிய நூல் இயற்றப்பட்ட காலத்திலும் குமரியாறே தமிழ்நாட்டிற் கெல்லையாதல் பனம்பாரனாரது சிறப்புப் பாயிரத்தால் விளங்கும். தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்ட அவைக்களம் நிலந்தரு திருவிற் பாண்டியனது.

"மலிதிரை யூர்ந்து தன் மண்கடல் வௌவலின்" என்ற கலித்தொகைப் பகுதி அவனது நாட்டினைக் குறிக்கும். தொல்காப்பியம் இடைச்சங்க நூலாதலின் குமரியாற்றிற்குத் தென்பாலிருந்த நாட்டைத் தலைச்சங்கமிருந்த நாடெண்றெண்ண இடமுண்டு. அடியார்க்கு நல்லார் குறித்த நாடுகள் தலைச்சங்க காலத்திருந்தனவாகும். குமரியாற்றிற்கும் பஃறுளியாற்றிற்குமிடையே எழுநூற்றுக்காவதவாறும்



என்ற விடத்து காவதம் பத்து அல்லது எட்டு மைல் தூரம் ஆகுமானால், எழுநூற்றுக்காவதம் அளவு இரண்டாற்றிற்குமுள்ள இடைநாட்டின் பரப்பு இருந்திருத்தல் கூடும். அது இடைத்தூரத்தைக் காட்டக்கூடியதன்று. இடைநாட்டின்கணிருந்த ஆறுகளினளவை எழுநூற்றுக்காவதமென்பது குறிக்குமோவென்றையுறவும் இடமுண்டு; அல்லது அந்நாட்டின் சுற்றளவை அது குறித்தல் கூடும். அவ்வாறாயின் அந்நாட்டின் நீளம் சுமார் இரண்டாயிரம் மைல் இருத்தல்வேண்டும். அங்ஙனமாயின் நிலவுருண்டையின் நடுக்கோட்டிற்கு வடக்கேயுந் தெற்கேயுமாக 30 அளவு வரைகள் நிலமாயிருத்தல்கூடும். நிலப் பரப்பு நூலின்படி (Geography) ஒரு அளவுவரைக்கும் மற்றொரு அளவுவரைக்குமுள்ள தூரம் சுமார் 69 மைல்களாகும். ஆகவே, நில நடுக்கோட்டிற்கு (Equator) 20 வரை அளவு தெற்கே நாடு இருந்திருக்கவேண்டும். அந்நாட்டின் அகலமும் மடகாஸ்கார் தீவிலிருந்து, பினாங், சிங்கப்பூர்வரை இருந்த நிலத்தினை உட்கொண்டிருத்தல்கூடும். முதல் மனிதன் சாவகத் தீவில் தோன்றினானெனின் ஆதித் தமிழ் நாட்டில் அவன் தோன்றினான் என்பது பிழையாகாது. ஏனென்றால், கடல் கொள்ளப்பட்ட நாட்டிற்கு மேற்றிசையரணாக இருந்த மணிமலை முதலிய பன் மலையடுக்குகள் அரபிக்கடலின் இந்தியப் பகுதியினின்று மடகாஸ்கார் வரை கடலுட் செல்வதாக ஸ்காட் எலியெட்டென்பவர் 'இழந்த லெமுரியா' என்னும் நூலிற் குறித்திருக்கிறார். பஃறுளிப் பேராறும், மணிமலை முதலியனவும் கடலுள் மூழ்கிய காலை வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு தென்றிசை யாண்டதாக தென்னவனைச் சிலப்பதிகாரமுடையார் கூறினர். பழைய நூலாகக் கண்டு பிடிக்கப்பட்ட, செங்கோன்றரைச் செலவு என்னும் சிறு நூற் பகுதியால் குமரிக்கும், பஃறுளியென்னும் நாட்டிற்கிடையிலுள்ள பகுதி பெருவள நாடெனப் படுகின்றது. அந்த நாடே ஆதிப் பாண்டி நாடாகவும், தலைச் சங்கமிருந்த தென் மதுரை நாடாகவுமிருந்திருத்தல்கூடும்.

கடல் வெள்ளம் ஏற்பட்டகாலை முதலில் பஃறுளியாற்றுக்குத் தெற்கிருந்த பகுதியை அது தாக்கியிருக்கும். அது 'வடிவேலெறிந்த வான் பகை பொறாது' என்னுஞ் சிலப்பதிகார அடியால் ஊகிக்கற்பாலது. பஃறுளியாற்றைக் கடல் கொள்ளுமுன் கடல் ஒருமுறை நிலத்தைத் தாக்கி வடிவேலாற் பின்னிட்டதெனவே, கடல்கோள் ஏற்பட்டதென்பது தெளிவு. அக்காலத்தில் அந்நாட்டிலிருந்தவர்கள் பாதுகாப்புக்காகப் புறப்பட்டுப் பிற நாடுகளுக்குச் செல்லலாயினர். அந்நாட்டினர்க்குத் தலைவனாயிருந்தவன் மனுவென்

னுந் தமிழ் மன்னன். மனு என்பவன் தமிழனென்பது வடமொழி மச்சபுராணத்துட் கூறப்பட்டது. அவன் வகையார் வடக்கே சென்று இப்போதுள்ள சோழநாட்டில் திருவாரூரில் தங்கினர். சோழம் என்ற சொல் தெற்கு என்னும் பொருளுடையது. ஆரூரென்பது பொருந்தும் ஊர் என்ற கருத்துடையது. திருவாரூரிற் றங்கிய பண்டை மனுவே ஆவின் கன்றைக் கொன்ற புதல்வனைத் தேர்க்காலிற் றண்டித்த மனுவின் முன்னோனவன். இவன் சிலப்பதிகார காலத்திற்கு நெடுநாட்கு முற்பட்டவன். சிலப்பதிகாரத்தில் இவன் கதை கேட்கப்படுதல் காண்க. கதிரவன் வெப்பமிகுந்த தென்னாட்டில் கதிரவனையே இவன் முன்னோர் தமது குடும்பத் தந்தையாகக் கருதினராதலின் மனுவினைச் சூரிய வமிசத்தரசனென்னும் மரபு வழங்கலாயிற்று. தென் பாலிநாட்டு மனுவின் கீழுள்ள மக்களின் ஒரு வகையாரே, எகிப்து நாட்டுக்குஞ் சென்றிருத்தல்கூடும். பண்டை எகிப்தியர், அம்மனுவென்பவன் தலைமையின்கீழ் எகிப்து நாட்டுக்கு வந்ததாகத் தங்கள் நூலுட் கூறுதல் அறியற்பாற்று.

பஃறுளியாற்றினையும், அதற்கும் குமரிக்கும் இடைநின்ற நாட்டினையும் கடல்கொண்ட காலத்தே பாண்டிய மன்னர் வடக்கே சென்று குமரிமுனைக்குப் பக்கத்திலுள்ள நாட்டிற் றங்குவாராயினர். பரசுராமர் காலமென்பது இடைச்சங்க காலமாகும். அக்காலத்தில் பொதியிலுக்கு மேற்றிசையில் கடல் விலகிப் போன நாடே இப்போது மலையாளமெனப்படும் சேர நாடாகும். மலையாளத்தை பரசுராமர் நாடென்பதும் இக்காரணம் பற்றிப்போலும். பாண்டியர் தங்கள் நாட்டிற்கு வளங் கொடுத்தவன், திங்கள் என்று கருதித் திங்களைத் தங்கள் குடும்பத் தந்தையாகக் கொள்ளலாயினர். மலைநாட்டில் குளிர் காரணமாக நெருப்புப் போற்றப்படுதலின், சேரர், நெருப்புத் தெய்வத்தைத் தங்கள் குலப் பிதாவாகக் கொண்டனர் போலும்.

இடைச் சங்க காலத்திலே குமரியாற்றுக்கு வடக்கே தங்கிக் கபாடபுரம், கொற்கை என்னுமிடங்களில் அரசு செலுத்திய பாண்டியர், பாரத காலத்திலே திருவாலவாய்க்குக் கிழக்கேயுள்ள மணலூரிலும், பின் மதுரையிலும் அரசாண்டனர். இப்போதுள்ள மதுரையில் கடைச்சங்கம் சுமார் கி. மு. 1200 ஆண்டிற்கணித்தாய காலத்தில் தொடங்கப்பெற்றிருத்தல்கூடும். பாரதப் போரில் இரு கட்சியார்க்கும் பெருஞ்சோறு வழங்கிய உதியஞ்சேரலாதன் கடைச்சங்க காலத்திற்குச் சற்று முற்பட்டவன்போலும். பாரதகாலத்தில்



மணலூரே பாண்டிய நகராயினமையின், அவன் காலம் இடைச்சங்க காலத்திற்கும் பிற்பட்டதாகும். உதியஞ்சேரலாதனைப் பாடினவர் தலைச்சங்கப் புலவர் அன்று. தொல்காப்பிய நூல் இடைச்சங்க காலத்திலேற்பட்டாலும், பிற்காலத்தே அவ்வக் காலத்திற்குரியனவாய்ச் சேர்க்கப்பட்ட புதுக் கட்டளைகளையுமுடையதென அறிக. பஃறுளியாற்றிற்குத் தெற்கணிருந்த நாட்டில் புலி மிகுதிபற்றி, அந்நாட்டினின்றும் போந்த சோழர் புலிக்கொடியையும், பாண்டியர் கபாடபுரம், கொற்கை முதலிய இடங்களில் கடற்சார்புபற்றி ஒளிகாலுந் தன்மையதான மீனின் கொடியினையும், சேரர், மலைநாட்டின் வேட்டை மிகுதிக்குரிய வில்லின் கொடியையுங் கொண்டனரென்பாருமுளர். அவ்வந் நாட்டிற் சிறந்த மலரினைத் தத்தந்தாருக்குரியனவாக மூவேந்தருங் கொண்டனரென்பர்.

களவியலுரையால், தலைச்சங்கம் சுமார் 4500 ஆண்டுகள் நிலவினதென்றும், இடைச்சங்கம் சுமார் 3500 ஆண்டுகள் நீடித்ததென்றும், கடைச்சங்கம் சுமார் 1500 ஆண்டுகள் நிலைத்திருந்ததென்றும், தெரிகிறோம். கடைச் சங்க முடிவு கி. பி. 220-ல் என்ப. தலைச்சங்க காலத் தொடக்கத்தில் கந்தபுராணமும், இடைச்சங்க காலத்தில் இராமாயணமும், கடைச்சங்க காலத் தொடக்கத்திற்கு முன் பாரதமும் நிகழ்ந்திருக்கலாம். ஆகவே, சுமார் 7000 ஆண்டுகளுக்குமுன் தலைச்சங்கமிருந்த பண்டைத் தமிழ் நாடு நில நடுக்கோட்டின் தெற்கே சுமார் 1200-மைல்வரை நீண்டிருந்ததென்பதும், அக்காலத்தில் மலையாளமென்ற நாடு கடலுள் நின்று மேற்கிளம்பாமலிருந்ததென்றும், இந்திய நாட்டில் பல மாகாணங்களிலும் திராவிடக் கலப்புள்ள மன்னர் பலர் ஆண்டனரென்றும், தென்னாட்டில் மூவேந்தர் சிறப்பாக முடியுடை மன்னராய்த் திகழ்ந்தனரெனவும், அவர்களுள் சோழமக்கள், கடல்கொண்ட நாட்டின் தெற்குக் கடைசிப் பாகத்தில் நின்று இப்போதுள்ள சோழமண்டலத்திற் குடியேறினரெனவும், குமரிமுனைக்கருகேயும் குமரியிலுமிருந்தவர்கள், மலையாளம் இடைக் காலத்தில் கடலுக்கு வெளியே தோன்றியபோது அவண் குடியேறினரெனவும், கடல்கொண்ட நாட்டின் நடுப்பகுதியில் வாழ்ந்த மக்கள் இப்போதுள்ள பாண்டிய நாட்டில் குடியேறினரெனவும், பாண்டிய மன்னர் இப்போதுள்ள மதுரைக்கு வருமுன்னரே, சோழரும், சேரரும் வடக்கண் புகுந்து தத்தநாட்டிற் குடியேறினமையால், பாண்டிய நாட்டினர் பண்டையோரெனச் சிறப்பிக்கப்பட்டனரெனவும், வடுகர் முதலிய பிற மக்கட் பிரிவினரும், தமிழ்ப் பெருங் குடும்பத்தினரேயெனவும் அறியற்பாற்று.

# புத்தேரிப்புலவரும் புதுத்தமிழும்

[எம். எஸ். ராமாநுஜம் அவர்கள், எம். ஏ.,]

உலகத்திலுள்ள பல அற்புதங்களில் பாட்டு என்ற பொருள் ஒன்று. இது தோன்றியவாறும், தழைத்த முறையும், மக்கள் மனதை என்றென்றும் பிணித்து நிற்கும் தகைமையும் வியப்பினும் வியப்பென்றே கூறவேண்டும். பாட்டறியா மக்களை பாமரர்; கயவர்; புல்லியர்; கடையர் என்கின்றனர். சைவம் தழைத்தது பாட்டினால், வைணவம் வளர்ந்தது பாட்டினால் என்றால் பாட்டு மக்கள் உளப் பண்போடு ஒட்டி வளர்கின்றதொன்று என்பது விளங்கும். நமக்கு உயிருக்குயிராய் இருக்கின்ற சமயங்களை பாட்டினால் உயிரும், உணவும் பெறுகின்ற தென்றால் பிறவற்றைப் பற்றிப் பேசுவானேன்? உலகிலுள்ள எப்பொருளுக்கும் அழிவுண்டு; ஆனால் ஒன்றுக்கு மட்டும் இறப்பு என்பதில்லை. அதுதான் பாட்டு என்ற செம்பொருள். கடவுளை பாட்டுருவமாகவும், இசை வண்ணனாகவும் இருக்கின்றான் என்பது நமது சமயக்கோட்பாடென்பதை யாரே அறியார்?

'ஏழிசையாய், இசைப் பயனாய்' என்ற சுந்தரர் வாக்கும்,

"பாட்டின் எளியன் ஈசன்" என்ற தாகூரடிகள் வாக்கும் இக்கருத்தையே எடுத்துரைத்தல் காண்க.

பாட்டிலே பல குணங்கள் பல்கிக்கிடக்கின்றன. பாட்டு வீரத்தை ஊட்டும்; காதலை எழுப்பும்; அறம் வளர்க்கும்; அன்பெடுக்கும்; அருள் சுரக்கும்.

உயிர்ப்பிச்சை தரவல்லது பாட்டு என்றால் பாட்டின் சிறப்பியல்பு ஒன்று நமக்கு நன்கு விளங்குகின்றது, துன்பம் போக்க வல்



லது பாட்டு. ஏனவே இன்பமே பாட்டின் மிகச்சிறந்த பண்பு. மக்களாவார் உலக வியவகாரங்களில் சிக்கி அலைப்புண்டு நிற்கின்ற அவாய் நிலையில், இத்தகைய சஞ்சீவி ஒன்றால் மீண்டும் 'இந்தச்சள்ளை'யினின்றும் விலங்கித் தொல்லையறியா இன்பவுலகு எய்துகின்றனர். "இன்பமே, எந்நாளும் துன்பம் இல்லை." இவ்வின்பம் தரத்தக்கது பாட்டு என்றால், அத்தகைய இன்பக்களஞ்சியங்களை ஆக்கி உதவியவர்கள்பால் உலகம் எத்துணைக் கடமைப்பட்டிருக்கின்றதென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

தமிழில் கவிகள் முற்றிலும் அஸ்தமித்து விட்டனரோ என்று நாம் நினைத்தபோது, கீழ்வானம் சிறிது வெளுத்தது. விடிவெள்ளியைக் கண்டோம்; மகிழ்ந்தோம்; உளம் பூரித்தோம். 'கொடுமலையாளக் குடியிருப்' பொன்றில் ஒருவர் தோன்றினர். அவர்பால் தோன்றியதோர் தமிழ்நூற்பேதை. 'மனோன்மணி' என்னும் பேருடையாள்; சீருடையாள்; தேர்ந்த புகழுடையாள். அடுத்து வாழ்ந்தவர் பாரதியார். இவர் கருவில் திருவுடையார். இவர் இளமையில் வளம் பெறுக்காவாறு இறந்தார். தமிழ் மாது வாடினாள். 'எங்கு செல்குவம்?' என்று ஏங்கினோம். மீண்டும் தமிழ்க்குயிலோசை தென்குமரியை அடுத்துக்கேட்டது. நாஞ்சினாடு நற்றவம் பெற்றது. பெரும்புகழ் ஈட்டியது. தமிழ்ப்பாட்டின் இன்னோசை உடல்கடந்து, ஊர்கடந்து, உயிர்கடந்து தமிழ்நாடெங்கும் மண்டிக் கமழ்ந்தது. திரு. தேசிகவிநாயகம் பிள்ளைதான் இத்தகைய தமிழ் வாணர். சிறந்த கவிகள் தம் ஜீவியத்திலேயே புகழைக்கண்டு களிகூரக் கொடுத்துவைப்பதில்லை. இந்த நிலைமை தமிழ்நாட்டிற்கு மட்டும் புதிதன்று. உலகெங்கும் நடந்தேறிய, நடந்தேறுகின்றதொன்றுதான். ஷேக்ஸ்பியர் பட்ட துன்பங்களுக்கு எல்லையுண்டோ? டாண்டே உற்ற இன்னல்களுக்கோர் வரம்புண்டோ? ஆனால் இடைரென்று தமிழ் நாட்டில் ஒரு அற்புதம் நிகழ்ந்துவிட்டது. திரு. தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் புகழும் பெருமையும் தமிழ் இலக்கிய சரிதத்தின் போக்கையே மாற்றியமைத்து விட்டன என்று கூறுவதால் தவறொன்றுமில்லை. இந்த ஒரு விஷயத்தில் தமிழ்நாட்டார் பிறரினும் பெரிதும் முன்னேறி முனைந்துவிட்டனர் என்று

தான் சொல்லவேண்டும். எவ்வாறாயினும் தமிழ்ப் பாட்டால் திரு. தேசிகவிநாயகம் பிள்ளைக்கும், பிள்ளையவர்களால் தமிழ் நாட்டாருக்கும் ஒரு பெரும்புகழ் கிடைத்ததென்றே கூறவேண்டும்.

திரு. பிள்ளையவர்களின் பாட்டைப்பற்றி நான் கூறுங்கால், ஒரு சில கருத்துக்களை மனத்தமைத்துச் செல்லுதல் நலம். புகழேந்தி, அதிவீரராம பாண்டியன் ஆகியோர் பாட்டுகளோடு ஒற்றுமை நோக்கின் பிள்ளைக்கவி அவர்களினுஞ் சாலச் சிறப்புடையதாகவே தோன்றும் என்பது என் துணிபு.

## பிள்ளையும் பாரதியாரும்.

பிள்ளையவர்களுக்கும் பாரதியாருக்கும் ஒரு வேற்றுமையுண்டு. பல ஒற்றுமைகளுமுண்டு. ஆனால் அந்த ஒரு வேற்றுமையே பிள்ளையவர்களின் சிறப்பியல்பாகவும் அமைந்தது. பாரதியார் பொறுமையற்றவர் என்றும், அப்பொறுமையின்மை அவர் பாட்டிலெங்கும் பாவிகம்போல் பரந்தொளிர்கின்றதென்றும், அஃது உண்மைக்கவியின் ஒளியைச் சிறிது மங்குவிக்கின்றதென்றும் பிறிதோரிடத்தில் குறித்துள்ளேன்.* வேகமும் தெளிவுமுடைய கானாற்றான் மக்களுக்குப் பயன் பெரிதும் நிகழ்ந்துவிடுவதில்லை. ஓரோ வழிக் காட்டுமலர் தூவிய நீரோட்டத்தின் இயற்கையழகு கற்பனையுடையாரையும், கவியுள்ளம் படைத்தாரையும் இன்புறுத்தலாம். ஆனால், இதனழகு காண, கண்டு பலரும் இன்புற மக்கள் வாழிடங்கள் வழிப்பாய்ந்தால் பயனுண்டு; நயனுண்டு; நலமுண்டு; எல்லாமுண்டு. அதேபோல உணர்ச்சி வேகமிகுதியால் முறை தழுவாது, எளிதிற் புலனாகாத் தலங்கள் சென்று, திடீரென்று மக்கள்முன் மின்னல் போல் வெட்டி நின்று மறைவது பாரதியார் பாட்டியல். இதன்காரணம் அவர் மனம் ஒருநிலைபற்றி நில்லாமையே. ஆனால் இவ்வாறு கூறுவதால் நான் அவரைக் குறைகூறுவதாக மக்கள் நினைத்தல் தவறு. சிலவிடங்களில் இக்குறைபாடுகளே தமின்றி யவர் பாடுங்கால் உண்

*'Modern Tendencies in Tamil Literature' என்ற கட்டுரையிற் காண்க.



யும் பேரழகு (The Subtime) 'கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பு'- தோன்றியொளிர்தல் காணலாம்.

"விளையடி நீயெனக்கு மேவும் விரல் நானுனக்கு" என்றபாட்டோடு அவர் 'குயிற்பாட்'டை ஒப்பிட்டு நோக்கினால், நான் கூறியதன் உண்மை புலனாகும். 'குயிற்பாட்டு' பாரதியார் மானசீகமாக ஆடிய விளையாட்டு என்றால் ஒருவாறு பொருந்தும். அது சிறந்த கவிதை என்று துணிந்து கூற வியலாது.

'பிரமாணம்! என்ற சொல்லுக்கு 'அளவு' என்பது பொருள். உலகியற்பொருள் எவையும் தத்தம் அளவில் குறையினும், மிகினும் அழகழிவது கண்கூடு. காலிரண்டும் ஓரளவாகாது, ஒன்று குட்டையும் நெட்டையுமாக் விருப்பின் அழகென்றதனைக் கூறும் அறிஞரும் உளரோ? கத்தரிக்காயிற்குக் காலுங்கையும் முளைத்தால் அழகு முளைக்குமோ? இனி, 'பிரமாணம்' என்ற சொற்கு 'உண்மைகாணும் வழி' என்ற பொருளும் கண்டனர். எனவே, எவ்விடத்தழகு தோன்றும்? அளவிற்சிறுகாது, அதனிற் பெருகாது, உண்மையினை உறுதுணையாகக்கொண்டு எழுந்தொளிர்வதே அழகென்க. இது கண்டன்றே, "உண்மையே அழகு; அழகே உண்மை" என்றார் ஆங்கிலப்புலவர் கீட்ஸூம் (Keats). உண்மையின் இன்மை அழகின் இன்மை என்பது தெளிவு.'*

அடுத்த சில கருத்துக்களைத் தொடுத்து முயன்றதால் விட்ட கருத்துக்கள் நின்று விட்டன. அவற்றைத்தொட்டு நடத்துவோம். பிள்ளையவர்கள் பாரதியாரைப்போல் கொந்தளிக்கும் எண்ணைக் குடமல்ல. நிறைந்தசையும் அமுத நதி. பாரதியாரின் "பெண்"ணையும், பிள்ளையவர்களுடைய பெண்ணுரிமையையும் ஒப்பு நோக்குவாருக்கு நான் கூறுவதன் உண்மை உறுத்தும்.

திரு. தேசிகவிநாயகம் பிள்ளையவர்களுடைய பாட்டில் இரண்டு சிறப்பியல்புகள் தெளிவுறுகின்றன. சென்ற நூற்றாண்டின் இறுதி

* இக்கருத்து தாகூரடிகளெழுதிய "கலையென்றாலென்ன" என்ற கட்டுரையிற் கண்டது. அதனை ஈண்டு எடுத்தாளுகின்றேன்.

வரையும் தமிழ்ப்பாட்டு இறுக்கமும், சம்பிரதாயமும் நிறைந்ததாகவே இருந்தது. காரணமற்ற சிலவரையறைகளும், இறுகிய இலக்கண விதிகளுமே 'கவி'யுலகை ஆட்சி செய்து வந்தன. இதன் பயனாகப் புதுத்துறைகள் எவையும் புலப்படாமல், 'பழமை'யிற்சிறப்புக் காண்டலே பண்பாக விருந்தது. மக்கள் இன்று, தோன்றிய நாள் எவ்வாறு இருந்தனரோ அவ்வாறே இருக்கின்றனர் என்று எவரும் கூற முனையார். நாகரிகம் தோன்று தொட்டுப் பலவழிகளில் பாய்ந்து பரந்து செழித்து வந்திருக்கின்றது: வருகின்றது. மொழி என்றசெம்பொருள் மக்கள் உளப்பண்பையொட்டிவளர்வதொன்றாகும். மொழி இலக்கணமும் மக்கள் வளர்ச்சியோடு ஒத்து வளர்கின்றது. தொல்காப்பியத்திற்கும் நன்னூலுக்குமுள்ள வேற்றுமைகள் கூர்த்றிவாருக்குக் கட்புலனாவது திண்ணம் இவ் வளர்ச்சி. இந்த வளர்ச்சியைத்தான் 'கூர்தல்' என்பர் பெரியோர். கூர்தலாவது உள்ளது சிறத்தல். பொருட் சிறப்பெய்துங்கால் உருமாற்றங்கள் நிகழ்வது இயல்பு. இத்திரிபு மேகத்தின் வளர்ச்சி போன்றதன்று. மரத்தின் வளர்ச்சியை யொக்கும் இந்நிலையில் தமிழ்ப்புலத்து வளம்பெருக்க நாடுவோர் புத்தேரிப்பிள்ளையவர்கள். பேராசிரியர் சுந்தரம்பிள்ளை பழைமைக்கும் புதுமைக்கும் இடையே ஒரு பாலம் அமைத்தார். கவி பாரதியார் புதுமைப்புலங் கண்டார். திரு. தேசிகவிநாயகம்பிள்ளை அப்புலஞ் செழிக்கப் பயிர் நட்டார். தமிழ் மொழி பழமைச் சிறைநீங்கிற்று. மக்கள் உளத்தொடு ஒட்டாத உயிரற்ற தமிழ்ச்சொற்கள் மலையேறின. பழந்தமிழ்ப்பண்பு மீண்டும் பாய்வதாயிற்று. கலைபயிலறிவும் கட்டுரை வன்மையும் ஒருவகை (Verses). வளரும் வாழ்க்கையொடு தொடர்பற்றிருக்கும் இறுக்கத்தையும், இலக்கணத்தளையும் அறுத்ததனால் பழந்தமிழ் நலங்கமழும் எளிமை என்றதோர் புதுப்பண்பு பிறந்தது. எளிமை என்பதோர் பண்பு. இறுகிய சொற்கள் சிலவிடங்களில் எளிமை பயக்கலாம். பாமரரும் பயின்றொழுகும் பதங்கள் சில ஓரோவிடங்களில் இடர்ப்பாடும் தரலாம். எனவே எளிமை என்பது சொற்களால் நிகழ்வதொன்றன்று என்பது தேற்றம். இடமறிந்து சொற்



பெய்து தொடுத்தலேஎளிமைக்குக் காரணமாகுமென்றறிக. வழக்காற்றிலுள் நல்ல பதங்களை இடமறிந்து பயன் படுத்துவமேல் அதனின் எளிமையொன்று இல்லை என்றறிக. எனெனின் அறிந்து மகிழ்வதற்கு அவை பெரிதும் துணை புரிகின்றனவாதலான். இவ்வெளிமை திரு. பிள்ளையவர்கள்பால் மிக்குக்காணப்படுகின்ற காரணத்தானேயே அவர் பாட்டினைப் பாமரரும் பண்டிதரும் பயின்று பயின்று பெருமகிழ் வெய்துகின்றனர்.

மற்றொரு சிறப்பியல்பு என்னவெனின், மக்கள் யாவரும் என்றென்றும் நன்கறிந்த பொருள்களைப்பற்றிப் பாடியது. "மன்னா! மனிதரைப் பாடி வாழகில்லேன்" என்ற மனப்பாங்கு பெரும்பாலும் இடைக்காலத்தில், குடி கொண்டிருந்த காரணத்தினால்தான், மக்கள் உலகியல் வாழ்வும், காதன் முறையும், பெண்மை நலனும், தென்னஞ்சோலையும், கிராமக்குறும்பும், இவைபோன்ற பிறவும் கவிக்காகா இழி பொருள்களெனக் கூறினர். இதன் காரணமாகக் கவியுலகில் உண்மையும் உயிர்ப்பற்றும் அற்றுப்போய், இனிமை பயவாதாகி விட்டது. இது வருந்துதற்குரியது. இந்தக் கருத்தின் மனித உள்ளம் எவ்வெவ்விடங்களிலெல்லாம்படிந்து இன்பந்துய்த்து, உயிர்த்துடிப்புறுகின்றதோ, அங்கெங்கெல்லாம் கவியுளமும்படிவதுஇயல்பு, அழகுமிருக்கும். ஆகவே கவிகளுக்கென்று தனியே சில பொருள்கள் படைப்பில் ஆக்கப்பட்டிருக்க வில்லை என்பது உறுதி. பாட்டின் உண்மைத்தத்துவம் மக்களை இன்பக்கடலாட்டுவது என்பதுமுன்பே கண்டோம். அங்ஙனமாக, எவ்வாறு மக்கள் உள்ளத்தில் இவ்வின்ப ஊற்றுகளைத்திறப்பது? அதற்குரிய ஆற்றலே கவி. நாளும் நாளும் கண்வழிப்புகுந்து, உளத்திற்படிந்து, அறிவிற்பாய்ந்து, குளிர்வித்து மகிழ்விக்கும் 'சூரியகாந்தி'ப் பூவைக்கண்டறிந்து சுவைத்து இன்புறுவானா? யாருங்கண்டறியாத "பௌராணிகர் புழு"கிற்றோன்றிய 'கற்பக' மலரைக்கற்றறிந்து சுவைப்பானா? சூரியகாந்திப் பூவைப் பார்த்தவுடன், அதன் பொன்னிற மஞ்சட்பொலிவும், மலர்ச்சியும், இதழடுக்கினழகும், மகரந்தத்தூட் பரப்பும் கவியுளம் படைத்தார் எவருக்குத்தான் இன்பம் தாராது? ஆங்கிலப்புலவன் 'நீர்ப்பூ'க் கண்டு என்ன ஆட்டம் ஆடினான் தெரியுமா? மகிழ்ந்தான், மயங்கி

னான். கனவிற்கண்டான்; துள்ளினான். கனவிற்கண்டான்; பாடினான். எனின் சூரியகாந்தி நமது கவி பிள்ளையின் உள்ளத்தை விட்டுச் செலவிடுமோ? இழுத்து விட்டது. அள்ளிக்கொள்ளை கொண்டது.

மஞ்சள் குளித்து முகமினுக்கி இந்த
மாயப்பொடி வீசி நிற்குநிலை
கஞ்சமகள் வந்து காணில் சிரிக்குமோ ?
கண்ணீ ருகுக்கு மோ யாரறிவார்?'

இதில் உண்மைத்தமிழ்ப்பெண் இளமையும் அழகும் நிரம்பி நிற்றல் காண்க. இப்பாட்டின் பண்பு விரிக்கிற்பெருகும். பாட்டின் உருவகம் உயிரோவியம். பூவிற்கும் பெண்ணுக்கும் எத்துணைப் பொருத்தம். மணம் நாறும் மலருலகும், கவிக்கு, மக்கள் சமுதாயத்தே நிகழ்கின்ற சாதாரண நிகழ்ச்சியொன்றைத் தோற்றுவித்து, அதன் மூலமாக நமக்குப் பேரின்பம் மூட்டிவிட்டது. இந்த சிருஷ்டி புதிது. கவித்திறன் காரணமாக வாழ்வொடு இதனை ஒன்றவைத்து பூவிற்குப் புனிதமும், வாழ்விற்குயர்வும் தருதல் காண்க. இக்கவிக் கண்ணோடு பூவை நோக்குவாருக்கு இப்புதுமைகளெல்லாம் இயல்பின் வழாப் பண்புகளாகவே படும். இது கவியுண்மை (Poetic Realism) எனப்படும். 'ஆறு' 'கிளி' என்ற பாட்டுகளும் இன்னதன்மைய.

இந்நாள் குறைகுடங்கள் பல செய்யுள் யாத்துத் தாமும் கவி என்று முடிசூடி வந்து விடுகின்றன. அருவி நீர்பாய்வதைப்பார்த்தாலும், காட்டைக் கண்டாலும், கண்டதும் ஒரு 'கவி' செய்து விடுகின்றனர். இவை கவியாகுமாவெனின் அதுதானில்லை. தமிழிலக்கியம் கற்றதன் பயனாக அங்குமிங்கும் தேடித்திரட்டிய சொற்களெல்லாம் அவர்கள் வாய் வழிப்பொங்கி வழிய, அவற்றினை எடுத்துத் தொடுத்து விடுகின்றனர். இதில் கலையேது? கவியேது? உண்மையேது? உயிரேது? இனிமையேது? இன்பமேது? ஒன்றுமில்லை. இவையாவும் விளையாட்டுகள். இவை உள்ளத்தினின்று புறப்படாத ஒரு காரணத்தினாலேயே உண்மைக் கவியாகா என்று தள்ளற்பால.

* Wordswarth' "Daffodils" ‡ சூரியகாந்திப்பூ.



பின்னஞ்சிறு குழந்தைகள் சிப்பிகளையும் ஓடுகளையும் பொறுக்கி வைத்து, இவை 'காசு' என்று கூறி விளையாடுவது போல் தான். ஆனால் இப்பொருள்களே பிள்ளையவர்கள் கையில் பொன் பெறுகின்றன. பொலிவுறுகின்றன. தழைக்கொளிரும். அழகெழும். இதென்ன மாயம்! இது தான் கவியுலகற்புதம். அந்திவேளை, வெண்ணிலா, காக்கை, பசு, பைசைக்கிள் இவற்றிற்கெல்லாம் அவர் மொழியில் இடமுண்டு. அவர் பாடுங்கால் இவை வியத்தகு உருவமும், வண்ணமும், அழகும் பெற்று விடுகின்றன.* சில தருகின்றேன்.

அல்லும் பகலும் அலைந்து வந்தேன்—எங்கள்
ஆழி இறைவனைக் காணவந்தேன்.
நில்லும் எனக்கினி நேரமில்லை—இன்னும்
நீண்டவழி போக வேண்டு மம்மா. ‡

அக்காவும் தங்கையும் போல்
அவை போகும் அழகைப்பார். †

இப்பாட்டுகளெல்லாம் நமக்கு என்று மில்லாத புத்தின்பம் அளிப்பதன் காரணமென்ன? இப்பொருள்கள்பற்றி யிருக்கும் பிற பாடல்கள் சுவைக்காது விரசமாகியவாறு எதுபற்றி? எனின் கவிகள் உலகில் அவதாரம் என்றே சொல்லவேண்டும். யாவரும் அறிந்த பொருளைச் சாதாரண மக்களைப் போலவே சொல்லுவதால் என்ன பயன்? எனின் உலகில் கவி என்பவன் ஒருவன் இல்லை. யாவருமே கவிகளாகி விடுகின்றனரல்லவோ? ஆனால் உலகம் எவரையும் கண்ணைக்கட்டிக்கொண்டு கவி என்று அழைத்து விடுவதில்லை. கவிகள் தாம் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்த பொருளுக்கு ஒரு தனித்த பண்பு தரவல்ல பிரமனாக இருந்தாலன்றி, உலகு ஏற்பதில்லை. அதாவது அநுபவம் தனக்கு இயல்பாகவிருத்தல் வேண்டும். பிறனுடைய அணிகளை அணிபவனை யுலகம் எள்ளுமேயன்றிப் புகழ்வதில்லை. இதனைத்தான் "உள்ளொளி" என்பார். இது சிலரிடத்தே அமைகின்

* famibar Studies of Men & Books by R. H. Steevenson pp. 78 79

‡ பிள்ளையவர்கள் "ஆறு" பா. 8.

† பிள்ளையவர்கள் 'பைசைக்கிள்' பா. 8.

றது. இதனால் தான் கவிகள் அருமையினும் அருமை. மக்கள் வாக்கை நேரில் கேட்பதற்கும் அதன் எதிரொலியைக் கேட்பதற்கும் உள்ள வேற்றுமை உண்மைக்கவிகளுக்கும் அல்லார்க்கும் உள்ள வித்தியாசம். எதிரொலியை உண்மையொலி என்று மயங்கி ஏற்கும் மந்தபுத்தியுள்ள மாந்தர் அருமை! *.

ஓரே பொருளைப் பலவிதமாகக் கூறலாம். சாதாரண மக்கள் கூறுவது ஒருமுறை. கற்றோர் கூறுவது ஒருமுறை. கவிகள் கூறுவது பிறிதொரு முறை. அவரவர்கள் உளப்பாங்கையும், கனிவையும் பொறுத்தது கூறுமுறை. மேட்டு நிலங்களில் தினைக்கதிர் விளைந்து நிற்கையில் நமக்கு புதுமையொன்றும் தோன்றுவதில்லை. ஆனால் கவிகளுக்கோ எனின், அதில் உள்ளம் படிந்து, அதைப்பற்றி நிற்கும். கண்டதைத் தங்களியல்பினில் வழுவாது கனிவுறக்கூறிக் கற்பார் உள்ளத்தையும் உயிரையும் ஒருங்கே குளிர்விப்பர். கூறுகின்ற முறையாலும், கொண்ட பொருளைக் கையாளுகின்ற திறனாலும் பதுங்கிநின்ற இன்பம் பெருக்கெடுத்தோடும்.

மேட்டு நிலம தனிலே—தினைக்கதிர்—விம்மி விளைகையிலே
காட்டு மயில் வரவே—குமரனும்—காதல் விளைப்பானடி. ‡

பொருள் சாமானியம். கூறுமுறையே ஈண்டுச் சிறப்புற்றது. அமைப்பு முறை சிறப்பெய்திய காரணத்தான் ஆண்ட பொருளுக்கும் தனிச்சிறப்பு உண்டாவது காண்கின்றோம். "தினைக்கதிர் விம்மி விளைவது" கண்முன்னின்று, காற்றிலசைந்து, களிப்பூட்டுகின்றது. அஃறிணைப் பொருளாகிய தினைக்கதிர் உயிர்ப்பொருளியல்பாகிய விம்முதற்றொழில் புரிகின்றதென்ற கவியுருவகம், தினைக்கும் உயிருக்கும் இடைநின்று பிரிக்கும் பிளவைச் சேர்த்து வைப்பதோர் பாலம். இவ்வழி நடந்து சென்று, இயற்கையுள் மூழ்கி, இறையொளியில் திளைத்து, நாம் இணையிலா இன்பம் எய்துகின்றோம். இவ்வாறு எடுத்தபொருளினும் தொடுத்துக்கூறும் முறையினாலேயே கவிகள் சிறப்புறுகின்றன என்பது மறுக்கொணாத வுண்மை. கூறு

* Lewis, 'Success in Literature,'
‡ எனது சுகதுக்கங்கள்,



முறையால் இறந்த பொருள் மீண்டும் புத்துயிர் பெற்றெழலாம்; சுடுகின்ற பாலையும் குளிர்ந்த சோலையாகத் திகழலாம்.

நெஞ்ச முலர்ந்த நெடுநகரில்—குழாய்
நீராகவும் பாய்ந்து வந்தேனம்மா!

என்ற அடிகளில் பிள்ளையவர்கள் கையாண்ட முறை எவ்வளவு இன்பம் தரவல்லது என்பதைப் பயின்றோர் நன்கறிவர். நகரிலுள்ளார் நாளும் நாளும் காண்பதொன்று தானே குழாயும், குழாய் நீரும். ஆனால் அந்த வுண்மையைப்பிள்ளையவர்கள் வாயால் கேட்கும்போது என்ன இன்பம்! அழகு! உள்ளம் குளிர்விக்கும்! கலைவல்லுநர் தாங்கள் ஆக்கவிரும்பும் ஓவியத்திற்கு இன்றியமையாத ஒரு சிலவற்றை நுணிகியுணர்ந்து எடுத்தமைப்பர். கல்லோடு, மணியும் பொன்னும் ஒருசேரக்கிடக்கின், ஆண்டு மணி அழகிற் சிறக்குமோ? அன்றி மணியைப் பொன்னிற் பொதிந்து பார்த்தால் அதனழகு முன்னினும் பன்மடங்கு பெருகி வளரும். அது போன்றே இச்சொல்லோவியக்காரர்கள் வேண்டுவனவற்றை இன்றியமையாமை அறிந்து, பகுத்துணர்ந்தமைப்பர். இதுவே கலைவல்லுநர் பால் காணும் சிறப்பியல்பு. இது இல்லையேல் கலைசிறக்காது. அழகெடுக்காது. இன்பம் பயவாது. "புத்தர் மகனை இழந்த தாயைத் தேற்றல்" என்றபாட்டில் பிள்ளையவர்களின் பாவன்மை மிகச்சிறந்து விளங்குகின்றதென்றே சொல்லவேண்டும். உள்ளத்தை யுருக்கும் தாய்வடிவும், கையிற்கிடக்கும் சேயின்பிணவடிவும் கல்லையும் கரைக்கவல்ல.

"வாய்முத்தந் தாராமல், மழலையுரை யாடாமல்
சேய்கிடத்தல் கண்டெனக்குச் சிந்தை தடுமாறுதையோ!

பின்னிமுடிச்சிடம்மா ; பிச்சிப்பூச் சூட்டிடம்மா
என்னு மொழிகளினி எக்காலங் கேட்பனையா?
நெஞ்சிற் கவலையெல்லாம் நிற்காம லோட்டுமந்தப்
புஞ்சிரிப்பைக் காணாது புத்திதடு மாறுதையா.

சித்திரத் தேரும் சிறுபறையுங் கூடியெனைப்
பித்தியிலும் பித்திப் பெரும்பித்தி யாக்குதையா. *

* புத்தர் மகனை இழந்ததாயைத் தேற்றல்.

இக்கவி நம்மையே 'பெரும் பித்தாக்கிவிடு கின்றதென்றால் இதன் கவிநயத்தை மீண்டும்பேசுதல் எளிதன்று.

பிள்ளையவர்கள் பாட்டின் அமைவியல் மிகவும் வியக்கத்தக்கது. உள்ளம் நாட்டில் தோய்ந்தும், அறிவு பழந்தமிழ் நூற்களிற் படிந்தும் இருந்த காரணத்தான் இவரிடத்தில் தற்காலக்கவி எவரிடமும் காணாத ஒரு பெருங்கனிவு தோன்றுகின்றது. எளிமையிலும் வள்ளமையும், பண்டைத்தமிழ் நலமும் சிறப்பிக்க வல்ல இவர்கள் ஆற்றல் கற்றார்க்கென்றும் களிப்பூட்ட வல்லது.

சிரித்த முகமென மலர்ந்து செழித்த செடிநடுவே
சிறுமகனும் விளையாடித் திரிந்திடு மவ்வேளை
விரித்த படமெடுத்தர வொன்றடுத்தொரு கைபற்றி
விளங்கு மணிக் கடகமென வளைந்து கிடந்ததுவே.*

இதில் பண்டையோர் புலமை விகாசமும் (Conceit) நவீனப் போக்கின் சாகசமும் ஒன்றோடொன்று பின்னிக்கிடப்பதைக் காணலாம். 'சிரித்த முகமென மலர்ந்து செழித்தசெடி' பாலகனை வஞ்சித்தவாறே, இக்கவியும் பழமைப்பண்பும், புதுமையின்பமும் ஊட்டவல்லதாய், புதுமையாயும் பழமையாயும் தோன்றித்தோன்றி ஏமாற்றுகின்றது. இப்பண்பு பிள்ளையவர்களிடத்து மிக்குக் காணப்படுகின்றது. பிள்ளையவர்கள்தம் கல்வியின் ஆழம் இதனின்று ஒருவாறு தெரியக்கிடக்கின்றது.

பிள்ளையவர்கள் பாடிய பாட்டுகள் பல. பாட்டுகள் எல்லாம் தனியின்பம் தரவல்லன என்று கூறுவது அன்னார் அறிவிற்கும் ஆற்றலுக்கும் பெருமை செய்தமையாகாது. பிள்ளையவர்களுடைய 'அன்பின் வெற்றி' சிறந்த கவிதை என்று கூறவியலாது. 'சந்திரன்' என்றபாட்டு 'ஆறு' 'கதர் விற்பனை' இவற்றோடு ஒப்பிட்டுப்பார்க்கின் ஒளியிழந்தே காணப்படுகின்றது என்று கூறுதல் பொருந்தும். இவர் பாட்டுக்கள் சிலவற்றில் இங்குமங்குமாக அருகிக்காணப்படும் தத்துவப்பொருள் நுணுக்கத்தான் அவை சிறந்தனவென்று கூறப்

* புத்தர் மகனை இழந்த தாயைத் தேற்றல்.



படலாம். தத்துவங்களை வைத்து பாட்டு, பாட்டல்ல என்று கூறுவது அமைவுடைமையாகாது.

பிள்ளையவர்கள் பழந்தமிழ் நூற்கள் கற்றுணர்ந்தவர் என்பது அன்னாரது "இலக்கிய ரஞ்சக"த்தான் தெளிவுறலாகும். அவற்றைப் பயின்றறிந்தனரேயன்றி அம்முறையைத்தாம் கையாளாது, தனக்கெனவோர் வாய்க்கால் வகுத்துக்கொண்டமை பிள்ளையவர்களின் சுயவறிவின்பெருமைக்கு அரண்செய்வதாகும். அஃதோடன்றி, தேசியக் கவி, "நவவீர பாரதியின் நடனத்தமி"ழைப் பன்முறையும் அநுபவித்துள்ளமை 'பாட்டுக்கொரு புலவன் பாரதியடா" என்று தொடங்கும் பாட்டால் அறியலாகும். மெட்டு, சந்தம், போக்கு இவையெல்லாம் பாரதியாரிடமிருந்தே இவர் பெற்றார் என்று கூறுவது ஒரோவழிப் பொருந்தும் எனினும், அதனை மீண்டும் வளர்த்து, தனியின்பம் பயக்க வல்லதோர் ஊற்றாகச் செய்தவர் இவரே. பாரதியாரிடத்திலில்லாக் கனிவும், போக்கும் இவர் கவியில் மண்டிக்கிடப்பது, இவருடைய கவித்துவசக்திக்குப் பெருமையளிப்பதொன்றெனக் கொள்ளவேண்டும்.

திரு. தேசிகவிநாயகன் பாடல்களிற் சிறந்தன எனக்கூறத்தகுந்தன. 'ஆசிய ஜோதி' 'கதர்விற்பனை' 'எனது சுகதுக்கங்கள்' 'ஆறு', வெண்பாசில. 'எனது சுகதுக்கங்கள்' என்றதில் ஒருபாட்டு மிகச்சிறந்தது. * அதுதான் 'மேட்டு நிலமதனிலே' என்று தொடங்குகின்ற பாட்டு. கவிஞர் பலவற்றைக்குறித்து இங்கு பாடிய காரணத்தால் சிறந்த இன்பம் வரவரக் குன்றிப்போய் விடுகின்றது. இப்பாட்டுசிறிது சிறுகி இருந்திருக்குமேல் வடித்து வடிவாக்கிய வெல்லக்கட்டி என்றே இதைக் கூறலாம். கவிஞர் சிலவிடங்களில் தமது புலமையை விரிப்பினும் அவை நமக்கோர் இடர்ப்பாடும், விநோதமும் விளைவிக்கின்றதில்லை. என்றென்றும் நம்மோடு உடனிருந்து குலாவுவதாகவே எண்ணுகின்றோம்.

* அஞ்சலி

இவர் பாடல்களில் 'கதர் விற்பனை' சிறிது ஆராய்தற்குரியது. அறியாத பல அரிய விஷயங்களைக் கூறிவிடுகின்றார் என்ற காரணத்தினாலல்ல. அதன் அமைவியல் மிகவும் வியக்கத்தக்கது. இப்பாட்டு முழுதும் ஒளிமிக்கு விளங்க, ஈற்றிரண்டு பாடல்களையும் களைந்து விடுதல் நலம். இப்பாட்டில் சொற்களமைந்தமை போல் வேறெங்கும் அமையவில்லை. வழக்குச் சொற்களினாலேயே புதுக் கருத்துக்களையும் புகட்டுதல் மிகச்சிறந்த முறை. இது சிறந்த அறிவுடையார்க்கே ஆவதொன்று.

அஞ்சவயது மகள் கோலமிட்டால்—அதை
அழகில்லை என்றழிக்குந் தாயருமுண்டோ?
பஞ்சு படுவதினும் பெரும்பாடு—நாங்கள்
படுவது நீங்களறியாததோ ஐயா! *

இதன் உவமை நயம் மிகச்சிறந்தது. முதல் நான்கு பாடல்களிலும் உணர்ச்சி ததும்பி வழிந்தோடுகின்றது. தமிழ்நாட்டில் பல வாண்டுகளுக்குப் பிறகு பிள்ளையவர்கள் பெயரை இந்த நான்கு பாடல்களாலேயே மக்களறிந்து பாராட்டுவர் என்பது உறுதி. இவை கவிதா சக்தியின் உன்னத நிலையை அடைந்திருக்கின்றன. எந்த இலக்கியமும் இவற்றை ஏற்கப் பெருமை கொள்ளும்.

இனி, இதைக் கூறிய முறை வியக்கத்தக்கது. பாரதியார் பாட்டைப் பட்டிக் காட்டானைக் கூட்டி வைத்துக் காட்டியது ஒப்ப, கதரின் மேன்மையை சுதந்திரத்தின் (சுய + தந்திரம் சொந்தமான நூல் இழை) உண்மையை—பெண்கள் முறையிடும் துறையிலமைத்துக் காட்டியது அறிந்தறிந்து இன்புற வேண்டுவதொன்று. 'பாவி என கதையினைக் கேளுமையா' என்று தொடங்கும் போதே கண்ணில் நீர் ததும்புகின்றது. உணர்ச்சி பொங்குகின்றது

இப்பாட்டுக் கிராமியச் சொற்களாலாயது என்று ஒரு சிலர் குறை கூறலாம். கிராமியச் சொற்களுக்குப் பாரதியார் பாடல்கள் இடம் தந்து முதன் முதல் வரவேற்றதாயினும், பிள்ளையவர்கள் பாடல்களில் அவை சிறப்புறுகின்றமைபோல், அங்கு அமையவில்லை.

* கதர் விற்பனை



பிள்ளையின் பாடலில் பாமரச் சொற்கள் பழந்தமிழ் மணமும், இலக்கிய நலமும் வீசிக்கமழ்கின்றன. 'கதர் விற்பனை'யை வழக்காறிழந்த சொற்களை வடித்துச் செய்திருப்பாரேல், அப்பாட்டின் சிறப்பும், அழகும் எல்லாம் அழிந்திருக்கும்.

குறுக்கு முறிய நெய்த கதராடை கும்பி கொதிப்பை யடக்கி நெய்த கதராடை. 'குறுக்கு முறிதலும்' 'கும்பிக்கொதிப்பும்' பாமரர் சொற்களே எனினும் பிள்ளையவர்கள் கவியில் இடம்பெற்றமைந்தவுடன் ஒரு தனி இலக்கியச்சுவை பெறுகின்றன. 'கும்பியும்' 'குறுக்கும்' 'மொட்டை'ச் சொற்களாக விருக்கலாம். வானோக்கி உயர்ந்திருக்கும் இமயமலையும் 'மொட்டை'தான். 'மொட்டை'யாக விருப்பினும் அதை நோக்கும்போது நமது மனதில் பயம், நயம், வியப்பு ஆகிய உணர்ச்சிகள் தோன்றவில்லையா? பிள்ளையவர்கள் 'மொட்டை'ச் சொற்களும் இன்னதன்மைய.

தமிழ் இலக்கியம் பெருந்தவம் கிடந்திருக்க வேண்டும் நாஞ்சில் நாட்டு நற்றமிழ்ப்புலவரைப் பெறுதற்கு. தமிழ் உள்ளளவும் பிள்ளையவர்கள் பெயர் நிலைத்திருக்கும். பிள்ளையவர்கள் தமிழ் இடைக்காலத் தமிழல்ல. சங்ககாலத் தமிழ் 'தெய்வத்தின நலங்காட்டி' நிலக்கண்டும், நேரங்கண்டும் புதுக்கோலம் பூண்டு வந்திருக்கின்ற தென்றே கூறவேண்டும். எளிமை, உண்மையோடு ஒட்டிய உளப்பாங்கு, பழந்தமிழறிவு, புதுமையின்பம், கனிவு இவை யாவும் திரண்டவொன்றே பிள்ளையவர்கள் பாடல். அவர்கள்பால் தமிழ்நலம் சிறந்தது. வளமையுற்றது. இளமை சிறந்தது. அவர்கள்பால் உரனும் நலமும் சிறக்க இறைவனையாம் வணங்குவேம்.

# தாய் நாடு

(வித்வான். பா. சோக்கலிங்கம் அவர்கள், சென்னை.)

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' 'தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை' என்னும் பழமொழிகள் தாயின்பால் தமிழர் வைத்திருந்த பெருமையை உணர்த்துவனவாகும்.

மேல்நாட்டு மக்களுள் ஒருசாரார் தாம் பிறந்து வளர்ந்த பெருநாட்டினைத் தாய்நாடு எனத் தலைக்கொண்டு போற்றுவர். மற்றொரு சாரார் தந்தை நாடு என வழிபடுவர். இந்திய நாட்டின் ஒரு பகுதியாகிய செந்தமிழ்நாட்டு மக்கள், இன்னுயிர் தந்து வளர்த்த இனிய நாட்டினைத் தாய்நாடென வாழ்த்தி மகிழ்ந்தனர். தாய்நாடு என எண்ணுங்காலத்திலேயே இன்பம் ஊறுகின்றது; அன்பு பிறக்கின்றது; ஆர்வம் தோன்றுகின்றது. உள்ளம் உருகுகின்றது; இரக்கம் எழுகின்றது. அருளின் உறைவிடம் அன்னையன்றோ! பேரன்பின் பிறப்பிடம் பெற்ற அன்னையன்றோ! பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டி வளர்த்த தாயினை எண்ணுங்கால் அன்பும், ஆர்வமும் இன்பமும் பிறத்தல் இயல்பேயன்றோ? பெண்மையின் பிறப்பிடமாய், தண்மையின் உறைவிடமாய் விளங்கும் தாயினைப் போற்றுதலைத் தலைமைசான்ற கடமையாக் கொண்ட தமிழர் தமது நாட்டினையும் தாய்நாடென வணங்கி இன்புற்றனர். இங்ஙனம் அன்னை நாடென உன்னுங்காலத்து இன்னமுதம் பருகினாற்போன்ற இன்பமெய்திய தமிழ்மக்கள் தந்தை நாடெனத் தமது நாட்டினைப் பேசுங்கால், அவர்கள்பால் ஊக்கமும், புயவீக்கமும் தோன்றின. வண்மையும் உளத்திண்மையும் வாய்ந்தன. வீரமும் உடற்றீரமும் விளங்கின. இவ்விரு கருத்தினையும், செஞ்சொற் கவிஞராய பாரதியார்,

"செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே"

என்று



இன்பமும், வீரமும் தோன்ற இன்னிசைப் பாட்டிசைத்துப் பெருமகிழ்வுற்றனர்.

இத்தகைய அன்பும் ஆர்வமும் தாய்நாட்டின்மீது இருத்தல் வேண்டும். கண்கண்ட கடவுளாய் விளங்கும் தாயைப் போற்றாத சேய் பேயேயன்றோ? பெற்று வளர்த்த பெருநாட்டின்மீது பற்றில்லாதவன் மனிதருள் பதடியேயன்றோ?

பண்டைக்காலத்து நம் தண்டமிழ்மக்கள் தாய்நாட்டின்மீது தளராத அன்புடையராய் வாழ்ந்தனர். தந்தையும் தாயும் குலாவி இருந்த செந்தமிழ்நாட்டிற்காய், உயிரையும் உதவும் உறுதியுடையராய், உண்மையுடையராய், ஊக்கமுடையராய் விளங்கினர். வேற்று வேந்தன் பெற்ற நாட்டினைப் பற்ற வந்தபோது, உற்ற விடத்து உயிர் வழங்கும் தமிழ்மக்கள் பகைவினை அழித்து வெற்றிபெற்ற நிலையினைப் புற நூல்கள் விரித்துச் சொல்லும். பிறந்ததன் பயனே சிறந்த நாட்டினைப் பேணுதல் என ஆடவரும் பெண்டிரும் கருதினர். பொன்முடியார் என்னும் புலவர், மைந்தனைப் பெற்று வளர்த்தல் எனது கடமை; பெற்ற மைந்தனைக் கற்றவனாக்குதல் தந்தையின் கடமை. என்னால் பெறப்பெற்று என்னையால் கல்வி யூட்டப்பெற்ற காளையின் கடமை என்ன? வில்லும் வேலும் வாளும் விளங்கும் போர்க்களத்திற் புகுந்து, வீரரை அழித்து, மலையன்ன யானைகளை மடித்து, வெற்றி பெற்று, தாய் நாட்டினைப் போற்றுதலேயாம் என்பதனை,

"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே;
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே;
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;
ஒளிறுவாள் அருஞ்சமமுருக்கிக்,
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே."

என்ற செய்யுளால் விளக்கியுள்ளார். பழைய தமிழ் மக்களது வீர வாழ்க்கையினை இச்செய்யுள் சித்தரித்துக் காட்டுகின்றதன்றோ? தாய்நாட்டின்மீது தமிழர் கொண்ட அன்பினை இப்பாட்டு படம் பிடித்துக் தருகின்றதன்றோ? இங்ஙனம், ஆடவர் நாட்டினைக் காத்தல் கடமை எனக் கருதியதுபோல, பெண்டிரும் எண்ணிவந்தனர். அன்னிய வேந்தன் தாய்நாட்டினைக் கவர அண்மிவிட்டான்; போர்

முரசம் கறங்குகின்றது; வீரரிடும் பேரொலி விண்ணை யடைக்கின்றது; யானைகளின் முழக்கம் இடியோசையெனக் காதுகளைத் துளைக்கின்றது. மறக்குடி மக்களில் மானம் பொறுக்கவுமாட்டாமல் போர்க்களம் சென்று பொருவார் பலர்; மடிவார் சிலர். விழுப்புண் பெற்றுக் களிப்பார் பலர். இந்நிலையில், தலைவனைப் போர்க்கனுப்பிய தாய் ஒருத்தி தன் கணவனும் தமையனும் விண்ணுலகடைந்தனர் என்னும் செய்தி பெற்றாள். ஊக்கம் ஒருபால்; உகுக்கம் ஒருபால்; ஏக்கம் ஒருபால்; இரக்கம் ஒருபால் அவள் உள்ளத்தே தோன்றின. அழுத கண்ணும், அஞ்சாத நெஞ்சமுடையளாய்த் தனது பால் மணம் மாறாப் பசுங்குழந்தையை அழைத்தாள். "என் குலக் கொழுந்தே! மறக்குல மணியே! வீர விளக்கே! நாட்டினைக் காக்கச் சென்ற உன் தந்தை போரிலே மடிந்தான்; மாமன் மாண்டான். நாட்டினைக் காத்தல் நமது கடமை, மருந்தனைய மைந்தா! இதோ வில்லையும் வாளையும் கொள்; வேலையும் வாளையும் அணிந்துகொள், போர்க்களம் சென்று பகைவரைக் கொன்று வெற்றிபெற்று மீள்வாயாக" எனப் பட்டாடை கட்டி, மயிரினைச் சீவி முடித்துப் பூச்சூட்டி. மயிற்பீலி அணிவித்து அனுப்பும் செய்தியொன்றே மங்கையர்கள் தம் தாய்நாட்டின்மீது வைத்திருந்த மாறாத அன்பினை விளக்குவதாகும்.

இத்தகைய வீர வாழ்க்கையையும், தாய் நாட்டுப் பற்றினையும் தமிழர் இடைக்காலத்து இழந்துவிட்டனர். மானம் சிறிதென்றும் வாழ்வு பெரிதென்றும் கருதத்தலைப்பட்டனர். ஊக்கமும் உள்வலியும் உண்மையிற் பற்றும் அற்றவராயினர். அச்சமும், பேடிமையும், அடிமைச் சிறுமதியும் அவர் உள்ளத்திற் புகுந்தன. இந்நிலையில் மக்களது நிலையினை எண்ணிய பாரதியார்,

"நெஞ்சு பொறுக்கு தில்லையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்"

என மனம் வருந்திப் பாடுகின்றார். அந்நிலையில், பழம் பெருமைகள் அவர் உள்ளத் தெழுகின்றன. இது கல்வியிற் பெரிய கம்பன் பிறந்த நாடன்றோ! காளமேகம் வாழ்ந்த நாடன்றோ! தெய்வ வள்ளுவனைப்



பெற்ற தேசமன்றோ! சேரன் தம்பியின் சிலம்பணிந்த செழுநாடன்றோ! என எண்ணிய நிலையில் தன்னை மறந்து,

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்தது மிந்நாடே—அதன்
முந்தையராயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்தது மிந்நாடே—அவர்
சிந்தையி லாயிரம் எண்ணம் வளர்த்து சிறந்தது மிந்நாடே—இதை
வந்தனைகூறி மனதி லிருத்தியென் வாயுற வாழ்த்தேனோ!

என வாயார வாழ்த்துகின்றார்.

எந்த நாட்டினராயினும் சொந்த நாட்டின்மீது அன்புடையராயிருத்தல் வேண்டும். அந்த நாட்டுமக்களே அறிவினும் பொருளினும் உயர்ந்தவராய் விளங்குவர். பெற்ற பெருநாட்டின்மீது பேரன்புடைய ஆங்கிலேயர் உலகையாளுதல் கண்கூடன்றோ! பாலைவனமாயினும், பட்டினக்கரையாயினும், சோலையிடமாயினும், தமது நாட்டுக்கொடியினைக் கண்டால், முடிசாய்த்துப் பணியும் வழக்கம் ஆங்கிலேயர்பால் உண்டு. தலைவணங்கிப் பணியும் தகைமையுண்டு. ஆதலினாற்றான் இன்று வல்லமை பெற்ற நல்லரசினராய் வாழ்கின்றார் அவர். இங்ஙனம் தாய்நாட்டுக் கொடியினை வணங்குதற்காகப் பாரதியார்.

'தாயின் மணிக் கொடி பாரீர்—இதைத்
தாழ்ந்து பணிந்து வணங்கிட வாரீர்.'

எனத்தமிழ் மக்களை அழைக்கின்றார்.

இளமையிலேயே தாய்நாட்டுப்பற்று உள்ளத்தில் இடம்பெறல் வேண்டும். இளமையிற்கல்வி சிலையிலெழுத்தன்றோ! ஐந்தில் அறிந்தது ஆயுள்வரையும் உதவுமன்றோ; ஆதலின் குழந்தைகளுக்குத் தாய்நாட்டினைப் பற்றிக் கூறவேண்டும். பால் மணம் மாறா அவர்கள் மனத்தில் நாட்டுப்பற்றுப் பசுமரத்தாணி போல் பதிதல் வேண்டும், என எண்ணிய பாரதியார் குழந்தையைப் பார்த்து,

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா,
அமிழ்த்தில் இனியதடி பாப்பா,—நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா.

எனக்கூறுகின்றார். பெற்றதாயும், பிறந்த பொன்னாடும் நற்றவவானினும் நனி சிறந்தது என எண்ணிக்களிக்கும் புலவன் உள்ளமும், அவனது தாய்நாட்டுப்பற்றும் பொன்னேபோல் போற்றத் தக்கனவாம்.

# காசி விஸ்வநாதர் கோவில்

[மு. தா. ராஜு செட்டியார் அவர்கள் B.A., L.T., தலைமையாசிரியர்,
போர்டு இடைநிலைப் பள்ளி, உத்திரன்மேரூர்.]

ஆயிரக்கணக்கான இந்துக்கள், 'முத்திதரும் நகரேழுளொன்ருகிய' காசிக்கு யாத்திரை சென்று, காசி விஸ்வநாதரைத் தரிசித்துப் பேறுபெற அவா கொண்டுள்ளனர். ஆண்டுதோறும், கணக்கற்ற மாந்தர் காசியம்பதிக்குச் சென்று கருணைவள்ளலை வணங்குகின்றனர். அங்குள்ள விஸ்வநாதர் கோவிலின் வரலாற்றை அறிந்தவர் அவர்களுளொருவருமிலர். இந்துமத நூல்கள் விஸ்வநாதரைத் தரிசிப்பதாலேற்படும் பலனை விவரிக்கின்றன. அக்கோவிலின் அளவு, இருப்பிடம் முதலியவைகளைப்பற்றி ஒன்றுங் கூறப்படவில்லை.

சுமார் கி. பி. 7-வது நூற்றூண்டில் இந்தியாவைப் பார்வையிட வந்த சீன பௌத்த யாத்திரைவாசியாகிய ஹுவாங்ஸாங் எழுதிய நூலிலிருந்து இக்கோவிலின் விபரம் நமக்குக் கிடைக்கிறது. இந்துக் கோவிலின் வரலாறு சீன பௌத்த சந்நியாசியின் நூலிலிருந்து கிடைப்பது ஆச்சரியமல்லவா? அக்காலத்தில், விஸ்வநாதர் கோவில் கம்பீரமான தோற்றத்துடன் விளங்கியதென்றும், நூறு அடி உயரமுள்ள கோபுரமிருந்ததென்றும், விஸ்வநாதர் லிங்க வடிவமாகப் பூசிக்கப்படவில்லை என்றும் விக்கிரக வடிவமாய் பூஜிக்கப்பட்டாரென்றும் ஹுவாங்ஸாங் எழுதியிருக்கிருர். இதிலிருந்து லிங்க ஆராதனை 7-வது நூற்றூண்டுவரை காசியில் ஆதரிக்கப்படவில்லையென்று விளங்குகிறது. காசிநகரம், 12-ம் நூற்றூண்டு வரை ஒரு இந்து ராஜ்யத்திற்குத் தலைநகராகயிருந்த காரணத்தால் விஸ்வநாதர்கோவில் சிறப்புடனும் செல்வத்துடனும் விளங்கியது.

கி. பி. 1194ல் முகமதியப் படையெழுச்சியால் காசி கோவிலின் வளர்ச்சி பாதிக்கப்பட்டது. குடப்புதீன் அந்நகரைப் பிடித்தபோது,



ஆயிரம்கோவில்கள் இடிக்கப்பட்டனவெனவும், அவ்விடங்களில்மசூதிகள் கட்டப்பட்டனவெனவும், முகம்மதிய சரித்திர ஆசிரியர்கள் கூறுகிருர்கள். குறிப்பாக விஸ்வநாதர் கோவிலைப்பற்றிக் கூறப்படவில்லை யெனினும், அக்கோவிலும் பாழாக்கப்பட்டிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. அக்காலத்திலும், காசிக்கு யாத்திரைவாசிகள் அநேகர் போனதாகவும், பாழடைந்த கோவிலிலுள்ள விஸ்வநாதரைத் தரிசித்ததாகவும், சில பழைய நூல்கள் தெரிவிக்கின்றபடியால், அக்கோவில் இடிக்கப்படவில்லையென்றும், அவ்விடத்தில் மசூதி கட்டப்படவில்லையென்றும் புலப்படுகின்றது.

பரந்த நோக்கத்திற்குப் பெயர்பெற்ற அக்பர் சக்கரவர்த்தி. காலத்தில் அக்கோவில் புதுப்பிக்கப்பட்டது. இந்து தளகர்த்தனுகிய ராஜா தோடர்மால் பீகாரிலுள்ள மாங்கீர் கோட்டையைப் பிடிக்கச் சென்ருன்; வெற்றிகரமாகக் கோட்டையைக் கைப்பற்றினுன். மாங்கீரிலிருந்து திரும்பி வரும்போது, காசியில், விஸ்வநாதரைத் தரிசிப்பதற்காக, சிலநாள் தங்கினுன். அக்கோவிலின் கேவலமான நிலையைப் பிராமணர்கள் எடுத்துக் காட்டி, அதைப் புதுப்பிப்பதற்கு அக்பரிடமிருந்து அனுமதிபெறுமாறு தோடர்மாலை வேண்டிக் கொண்டார்கள். தோடர்மால் அவ்வேண்டுகோளுக் கிணங்கினுன். அனுமதி பெற்ருன். அத்திருப்பணிக்கு வேண்டிய பொருளுதவி செய்தான்; சிற்பசாஸ்திரிகளையும் அனுப்பினுன்.

16ம் நூற்றூண்டில் பாழடைந்த ஆலயத்தில் 32 சதுர அடி விஸ்தீர்ணமுள்ள மூலஸ்தானமிருந்தது. அதைச் சுற்றி 16 அடிக்கு 16 அடி சதுரமுள்ள நான்கு பிரகாரங்களிருந்தன. அவைகளுக்கு ஞானப்பிரகாரம், பக்திப் பிரகாரம், ஐஸ்வரியப் பிரகாரம், ஸ்ரீரங்கர் பிரகாரம் எனப் பெயர்கள். இதற்குக் கிழக்கில் 125 × 35 விஸ்தீரணமுள்ள ஒரு பெரிய மண்டபமிருந்தது. சிற்பிகள் இப்பெரிய மண்டபத்தைப் பழுது பார்த்தார்கள். மூலஸ்தானத்தைப் புதிதாகவும், முன்னைவிடச் சிறந்த தோற்றமுடையதாகவும கட்டினுர்கள்.

கி. பி. 1669ல் இந்துமதத்தை வெறுத்த அவுரங்கசீப் கட்டளையால், அக்கோவில் இடிக்கப்பட்டது. அது மசூதியாக மாற்றப்பட்

டது. முகம்மதிய சிற்பிகள் அவுரங்கசீப்பைப்போல கடுநெஞ்சமுடையவர்களல்லர். ஒரு புதிய மசூதியைக் கட்டுவதற்குப் பழைய கோவிலைக் கூடியவரையில் பயன்படுத்திக்கொண்டார்கள். மூலஸ்தானத்தைச் சுற்றியுள்ள பிரகாரங்களை இடித்துவிட்டார்கள். அவைகளை மசூதிக்குரிய பாகங்களாக மாற்ற முடியவில்லை. மத்தியிலுள்ள கர்ப்பக்கிரஹத்தைப் பாதுகாத்து, அதை மசூதியின் முக்கிய நமாஸ் படிக்கும் கூடமாக மாற்றினார்கள். தெற்கிலும், வடக்கிலும் இடங்களைப் பெரிதாக்கினார்கள். மேற்குப் பாகத்திலுள்ள கோபுர வாயிற்படி அடைக்கப்பட்டது. அது புதிய மசூதியின் பின் சுவராக மாற்றப்பட்டது. கோபுரம் இடிக்கப்பட்டது. முகம்மதியக் கூண்டுகள் கட்டப்புட்டன.

1669 முதல் 1790 வரையில் காசியில் விஸ்வநாதர் கோவிலே இல்லாமலிருந்தது. அங்குள்ள மூர்த்திகரமான விக்கிரகம் எங்கு பாதுகாக்கப்பட்டு பூஜிக்கப்பட்டதெனத் தெரியவில்லை. ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் சமயத்திற்கேற்றவாறு கொண்டு போகப்பட்டிருக்கவேண்டும்.

18-வது நூற்றாண்டின் மத்தியில், காசி, ராஜா பலவன்சிங்கின் ஆட்சிக்கு உட்பட்டது. 1752ல் மஹாராஷ்டிரர்கள் உன்னதநிலையை அடைந்திருந்தனர். ரோகிலர்களுடைய கொடுமையிலிருந்து அவுத் நவாப்பைக் காப்பாற்றினர். காசி, அலஹாபாத், அயோத்தி முதலிய இடங்களை நவாப் மஹாராஷ்டிரர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்ற நிபந்தனையின்படி மஹாராஷ்டிரர்கள் நவாப்பிற்கு உதவி செய்தார்கள். மஹாராஷ்டிர தளகர்த்தர்களாகிய தாதாஜி சிந்தியா, முல்ஹார்ராவ் ஹோல்கர் முதலியோர் இந்து யாத்திரை ஸ்தலங்களில் இந்து ஆதிக்கத்தை நிலைநாட்டவேண்டுமென்று ஆவல்கொண்டார்கள். காசியில், அவுரங்கசீப் கட்டிய மசூதியை இடித்துவிட்டு, புதிதாக விஸ்வநாதர் கோவில் கட்டவேண்டுமென்று விருப்பம் கொண்டார்கள். இக்கொள்கை பிராமணர்களுக்குப் பிடிக்கவில்லை. மகம்மதியருடைய மசூதியால் அவ்விடம் பரிசுத்தத்தை இழந்துவிட்டதென சில பிராமணர் அபிப்பிராயங் கொண்டார்கள்.



பழைய இடத்தில் கோவில்கட்ட வேண்டுமென்ற முயற்சி சித்திபெறவில்லை. மஹாராஷ்டிரர்கள், ரோகிலர்களைத் தோற்கடிக்க நவாப்பிற்கு முழுமனதுடன் உதவிபுரியவில்லை. அக்காரணத்தால் நவாப் காசி நகரை மஹாராஷ்டிரர்களுக்குக் கொடுக்க மறுத்தார். 1775ல் அயோத்தி நவாப் ஆங்கிலேயருக்குச் சரணாகதி அடைந்து காசிநகரை ஆங்கிலேயருக்கு ஒப்புவித்தான். காசி அரசன் பலவந்சிங் ஆங்கிலேயரின் சிற்றரசனானான்.

18-ம் நூற்றாண்டு இறுதியில் பழைய கோவிலுக்குத் தெற்கிலுள்ள 50 அடி சதுர நிலத்தில் விஸ்வநாதர் கோவில் புதிதாகக்கட்ட ஏற்பாடாயிற்று. ஹிந்தூர் ராணி ஹகல்யபாய் ஹோல்கர் என்பவள் அத்திருப்பணிக்குப் பணம் அளித்தாள். தற்போதுள்ள கோவில் 16-ம் நூற்றாண்டிலிருந்த கோவிலைவிடச் சிறியது. அதனுடைய கர்ப்பக்கிரஹம் 8 அடி சதுரமுள்ளது. 60 அடி உயரமுள்ள கோபுரமுடையது. அதனுடைய கோபுரத்திற்கும், கலசத்திற்கும் பொன் முகடுபோட ரஞ்சத்சிங் பணமுதவி செய்தார்.

# “நகைபடு தீஞ்சொல்”

—:வித்துவான் ர. சிவராமசேதுபிள்ளை அவர்கள் காஞ்சி:—

குழந்தையைக் கடவுளுக்கு ஒப்பாகக் கூறி வருகின்றனர் பெரியோர். அவர்கள் அங்ஙனங்கூறுதற்குச் சில பல பொதுத்தன்மைகள் இருத்தல் வேண்டும். இறைவன் கள்ளமில்லா உள்ளத்தை உடையவன், அதுபோலக் குழந்தைகளும் கள்ளமில்லாத உள்ளத்தை உடையன. இறைவனுடைய செயல்கள் யார்க்கும் தீங்கு விளைப்பதில்லை. அதுபோலவே குழந்தைகள் செயலும். இறைவனுக்கு வறியர், செல்வர், நட்பினர், பகைஞர், என்ற வேறுபட்ட எண்ணங்கள் கிடையா. அதுபோலவே குழந்தைகளும் யார் விரும்பி அழைத்தாலும் அவர்பாற்சென்று விளையாடும் இயல்புடையன. இறைவனுடைய ஒவ்வொரு செய்கையும் தூய்மையுடையது, இன்பம் தரக்கூடியது. அதுபோலவே குழந்தைகளுடையமனம் மாசற்று விளங்குவதால், அவைகளுடைய ஒவ்வொரு செயலும் மாசற்று விளங்குவதோடு இன்பத்தையும் அளிக்கின்றது. இறைவன் செயல்கள் எல்லாம் அவனுடைய விளையாட்டுகள் (திருவிளையாடல்) என்று கூறுகின்றோம். அதுபோலக் குழந்தைகள் செயல் முழுதும் விளையாட்டே.

இறைவனை அணுகியவர்கள் அவன் அருளைப்பெற்றவர்கள் இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் ஒருங்கு அடைவார்கள் என்று உணர்கின்றோம். குழந்தைகளும் தன்னைப்பெற்றவர்களுக்கு இருமைப்பயனையும் அளிக்கவல்லன என்று கூறப் படுகின்றது. இதனை,

“இம்மை யுலகத் திசையொடும் விளங்கி
மறுமை யுலகமும் மறுவின் றெய்துப
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப்
பல்லோர் கூறிய பழமொழி.”

எனவரும் அகநானூற்று அடிகளால் நன்கு அறியலாம். இதுவரை



கூறியது கொண்டு இறைவன் தன்மை குழந்தைகளிடத்தும் காணப் படுகின்றது என்பது விளங்கும். ஆனால், இறைவன் நம் முன்னின்று பேசுவதில்லை குழந்தைகள் பேசுகின்றன. எனவே குழந்தையைப் பேசுங்கடவுளாகக் கருதினர் பெரியோர் என்று உணரலாம். இறைவனை ,‘நேசர்க்கு நேசன்” என்று கூறுவதுபோலக் குழந்தைகளும் தம்மை நேசித்தவரிடத்து நேசிக்கும் இயல்புடையன.

“குழந்தையுந் தெய்வமுங் கொண்டாடுமிடத்து”

என இன்றும் பெரியோர்வழங்கும்பழமொழி அறியக்கூடியதொன்று.

இவ்வாறு இறைவன் தன்மையோடொத்து விளங்குங் குழந்தைகள் வாய்மலர்ந்து பேசுங்கால் அப்பேச்சிலும் இறைவன்தன்மை கலந்து நிற்கும் என்பதில் ஐயமில்லை. குழவிகள் கூறும் மொழிகளில் இறை மணங்கமழும். அம்மொழிகளில் பொருமை முதலிய தீய குணங்களைக் காணமுடியாது. ஒவ்வொரு மொழியும் செவிக்கு இனிமைதரக் கூடிய மொழி. இதனாலன்றோ குழவிகூறும் மழலை மொழிக்குக் குழலொலியும் யாழொலியும் ஒப்பாகா என்று கூறப்படுகின்றது. குழவியின் மழலை மொழியைக்கேட்ட செவிகளுக்குக் குழலொலியும் யாழொலியும் வெறுப்பாகத்தோன்றும். ஐம்பொறிகளுள் ஒன்றாய செவிப்பொறிக்கு இன்பமளிக்கக்கூடிய பொருள் உலகத்துயாதென்று ஆராய்ந்த திருவள்ளுவர் அப்பொறிக்கு இன்பமளிக்கக்கூடியபொருள் குழந்தைகள் கூறும் மழலை மொழியே என்பதைக்கண்டு மொழிந்தனர் என்பது

“மக்கள் மெய்தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு.”

என்னும் குறளால் இனிது விளங்கும்.

இன்னும் சினங்கொண்டவர்கள் கூட மழலை மொழியைக் கேட்டால் சினந்தணியப் பெறுவார்கள், பகைவர்களும் பகைமை நீங்குவார்கள் என்று கூறுவதுண்டெனின் மழலை மொழியின் தன்மை எத்தகையதென்பது விளங்கும்.

இத்தகைய மழலை மொழியானது கேட்டோர்க்கு சினத்தையும் பகைமையையும் போக்கி மகிழ்ச்சியையுங் கொடுக்குந்தன்மையுடைய

தெனின் அத்தகைய சொல் எங்ஙனமிருக்கும் என்பதை அறிய வேண்டும். இதுகாறும் கூறிவந்தனவெல்லாம் மழலை மொழியைக் கேட்பதால் உண்டாகும் நன்மையையும் இன்பத்தையும் பற்றியன அல்லாது அதன் இலக்கணமல்ல,

குழந்தைகள் வாய்மலர்ந்து வழங்கும் சொற்கள் திருத்தம் பெறாத நிலையில் உள்ளவை. நாவினால் பன்முறை பயின்று பழக்கமடையாதவை.

முதிர்ச்சியடையாதவை, நாவொடு பொருந்தாது வெளிப்படுபவை, இலக்கண வரம்பிற்கு உட்படாதவை என்பதை "நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்" என்ற அகநானூற்றடியால் உணரலாம்.

இளங்குழந்தைகள் உள்ளத்தில் கள்ளமில்லை எனவே வெளிப்படும் மொழியிலும் கள்ளமில்லை. இங்ஙனம் வஞ்சனையில்லாமை ஒன்று. இரண்டாவதாக இளமை, இளமையுடைய காரணத்தால் ஒலியும் இளமையுடையதாயிருத்தல். மூன்றாவதாகக்குழந்தைகளிடத்துக் காணப்படும் கடவுட்டன்மை. நான்காவதாக வழங்கும் மொழியும் முதிர்ச்சியடையாது (திருத்தம் பெறாது) இளமையோடு வெளிப்படுதல். என்ற இவ்வாற்றான் குழந்தைகளுடைய "நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்" கேட்ட யாவர்க்கும் இன்பத்தைக் கொடுக்கும் என்பதும் மழலை மொழியைக் கேட்டு எய்தும் இன்பத்திற்கு ஈடாக இவ்வுலகத்து வேறொன்றுமில்லை என்பதும் தெளிவாக விளங்கும்.

மொழிகள் திருத்தம் பெறாத நிலையில் உள்ளமை மகிழ்ச்சி விளைவிப்பதற்குக் காரணமாதலை வேறு சான்று கொண்டும் உணரலாம்.

பொருளதிகார மெய்ப்பாட்டியலுள் நகைச்சுவைக்கு உதாரணங் காட்டப்போந்த பேராசிரியர். "ஆரியர் கூறும் தமிழை"க் கூறிப் போந்தனர். இதுகொண்டு நாம் உணர்வது என்னவென்றால், ஆரியர் தமிழ் மொழியைத் திருத்த முற ஒலிக்கமுடியாமல் நாவொடு



பழகாது தமிழ் பேசினர் என்பதும் அதனைக் கேட்ட தமிழர்க்கு நகை தோன்றிற்று என்பதும் ஆம். ஆனால்,

மழலை மொழியால் எய்தும் நகை (மகிழ்ச்சி) வேறு, இது வேறு.

இதனால் அறிவது, மழலை மொழி கேட்டார்க்குமகிழ் விளைப்பதற்குரிய காரணங்களுள் மொழி திருத்தம் பெறாமையும் ஒன்று என்பதாகும்.

O-,6x
N40

TAMIL NADU ARCHIVES LIBRARY
112189